கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

230

சித்திரை

01.04.2024

100/-

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்



கி.நடராசா

ஜெ.கீர்த்திகா

கெகிறாவ ஜுலைஹா

சி.பரராஜசிங்கம்

தம்பிஜயா தேவதாஸ்

மா.சிவசோதி

ஷெல்லிதாசன்

அகமட் இம்தியாஸ்

இதயராசன்

கிண்ணியா சபீனா

எம்.எம்.மன்ஸூர்


கந்தையா பத்மானந்தன்

வனஜா நடராஜா

வ.ந.கிரிதரன்

தமிழ்க்கவி

கோகிலா மகேந்திரன்




கலை இலக்கிய மாத சஞ்சிகை
2024 - சித்திரை (01.04.2024)

# பொருளடக்கம்

## சிறுகதைகள்

தம்பிஐயா தேவதாஸ் – 10
மா.சிவசோதி – 13
ஷெல்லிதாசன் – 18
ஹொறொப்பொத்தான அகமட்இம்தியாஸ் – 35




## கவிதைகள்

இதயராசா – 12
கிண்ணியா சபீனா – 17
எம்.எம்.மன்ஸூர் – 20
கந்தையா பத்மானந்தன் – 34



## தொடர் நாவல்

வ.ந.கிரிதரன் – 25
தமிழ்க்கவி – 29

## கட்டுரைகள்

**பாரதிதாசன் - ஓர் உலகக் கவி**
கி.நடராசா - 03



**உளவியலின் காலக் கண்ணாடி “நான்”**
ஜெ.கீர்த்திகா - 09



**காரயன் கதனின் “ புழுதி” பற்றி…**
கெகிறாவ ஸுலைஹா – 22

**முடிவைத்தொடுவாய் முயன்று - 3**
கோகிலா மகேந்திரன் – 32

**Remembering a multifaceted Personality**
**who passed away on the 9 th of February2024 -**
**Dr.T.Kalamany**
**An Ideologist and Educationist**
C.Pararajasingam - 36

# ஜீவநதி

**2024 சித்திரை இதழ் – 230**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி



**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் :**
திரு.கி.நடராஜா
தில்லைநாதன் கோபிநாத்

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து
ஆக்கங்களின் கருத்துக்களுக்கும்
அவற்றை எழுதிய ஆசிரியர்களே
பொறுப்புடையவர்கள்.



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி – 100/= ஆண்டுச்சந்தா – 3000/=
வெளிநாடு – $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY


# ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
– பாரதிதாசன்–

## இலக்கியக் கூட்டங்கள் படும் பாடு

ஈழத்து இலக்கியக் கூட்டங்கள் என்றால்மிகச்சிறப்பாக நடைபெற்று வந்த காலம் ஒன்று இருந்தது. இன்றும் சில கூட்டங்கள், நூல் வெளியீடுகள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருவதைக் காண்கின்றோம். இருந்தாலும் சில கூட்டங்களில் மேடையில் உள்ளோர் எண்ணிக்கையை விட குறைவான தாகவே சபையோர் எண்ணிக்கை காணப்படுகின்ற சந்தர்ப்பங்களும் உள்ளன.. மாதாந்தம் இலக்கிய கலந்துரையாடல்களை பலர் நடாத்து கின்றார்கள். அதில் கலந்து கொள்பவர்கள் 10 - 15 பேர் வரையிலேயே. ஆனால் முகப் புத்தகங்களிலும் பத்திரிகைளிலும் அக்கூட்டங்களின் பின்னர் கொடுக்கப்படும் விளம்பரங்களோ அப்பப்பா சொல்ல முடியாது. கூட்டங்கள் ஏன் நடாத்தப்பட வேண்டும்? கலந்துரையாடல்கள் எவ்வாறு ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என்ற எந்த வித புரிதலுமின்றி ஓரிடம் கிடைத்தால் மடம் கட்டுவது போல கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக அனேகமான இடங்களில் குறித்த படைப்பாளிகளே உரையாற்றுனர்களாகவும் சபையோராகவும் காணப்படுவது துரதிஷ்டமானது. அண்மையில் கூட புலம் பெயர் தேசத்தில் இருந்து வந்து நூல் வெளியீடு செய்த இரு எழுத்தாளர்கள் அடைந்த ஏமாற்றத்தை கண்டேன். மிகுந்த கவலை அடைந்தார்கள். கூட்டங்களுக்கு உரையாற்ற வருபவர்கள் பலர் சபை அறிந்து, நேரம் அறிந்து பேசுவதில்லை. பக்கம் பக்கமாக தாம் தயாரித்து வந்த அனைத்தையும் கொட்டி விட்டுச் செல்ல வேண்டும் என எண்ணுகிறார்கள். இது கூட சில சமயங்களில் பார்வையாளர்களிடையே சலிப்பை ஏற்படுத்துகின்றன. ஒரு கூட்டம் நடாத்துகின்றபோது குறைந்தது 50 பேராவது கலந்து கொள்ள வேண்டும்.. கூட்டங்களை நடாத்துகின்ற போது நன்கு திட்டமிட வேண்டும். அழைப்புகளை சரியான வகையில் சேர்ப்பிக்க வேண்டும், நூலுடன் தொடர்புடையவர்களை அழைக்க வேண்டும். தொடர்ச்சியாக மாதாந்தம் ஒவ்வொரு சனி, ஞாயிறு கூட்டங்கள் இடம்பெறுவது கூட கலந்து கொள்பவர்களிடத்தில் ஒருவித சலிப்பை ஏற்படுத்துவதை அறிந்து கொள்கின்றோம். நன்கு திட்டமிடலுடன் நடைபெறும் கூட்டங்கள் வெற்றி பெறுகின்றன.

- க. பரணீதரன்

**ஜீவநதி கிடைக்கும் இடங்கள்/ விற்பனையில் உதவுவோர்**

1. புத்தகக்கூடம் - திருநெல்வேலி
2. பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம், கொழும்பு செட்டித்தெரு
3. புத்தகப்பண்பாட்டுப் பேரவை, 68, நீதிமன்ற வீதி, மல்லாகம்
5. பண்டாரவன்னியன் புத்தகசாலை - வவுனியா

4. அ.யேசுராசா
5. பரணி புத்தகக்கூடம் - நெல்லியடி
6. மு.யாழவன்- திருகோணமலை,
7. கந்தர்மடம் அ.அஜந்தன்
8. சி.ரமேஷ்
9. நா.நவராஜ்

கி.நடராசா

# பாரதிதாசன் - ஓர் உலகக் கவி

(கவிஞர் பாரதிதாசனின் 60 ஆவது சிராா்த்த தினத்தை (ஏப்ரல் 21) முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது)

மகாகவி சுப்பிரமணி பாரதியை, "உலகக்கவி" எனப் போற்றுவர். பாரதிதாசனை ஓர் உலகக் கவி என நாம் சொல்லும் அளவிற்கு அவரது பல்வகைப்பட்ட திறன்களை வெளிப்படுத்துவதே இக் கட்டுரையின் நோக்கமாகும். ஆங்கில கவி, T.S.ELIOT என்பவருக்கு உலகில் எத்தகைய இடமுண்டோ அந்த இடம் பாரதிக்கும் உண்டு. அவர் சீடன் பாரதிதாசனுக்கும் உண்டு. கருத்தும் உணர்ச்சியும் ஒன்றாகும் போது அவன் உலக கவிஞனாகி விடுகின்றான்.

உலகில் எவர் தன் துறையில் நிலைத்து நிற்கின்றாரோ அவரே உலக மக்களின் இதயங்களைக் கவர்ந்தவனாகின்றார். இந்த வரிசையில் புதுமைத் தமிழ் இலக்கியத்தில் மும்மூர்த்திகள் எனக் கொள்ளப்படுவோர் பாரதி, பாரதிதாசன், புதுமைப்பித்தன் என்ற மூவரையும் குறிப்பிடலாம்.

பாரதிதாசன்

பாரதியை தன் குருவாகக் கொண்ட கனக சுப்புரத்தினம் பதினெட்டு வயதிலேயே பாரதி தாசன் ஆனார் என அறியப்படுகின்றது.

ஆரம்பத்தில் துதிப்பாடல்களையே பாடிக்கொண்டிருந்த கனக சுப்புரத்தினம் பாரதியின் தேசியப் பாடல்களினாலும் சமூக சீர்திருத்தக் கருத்துக்களினாலும் கவரப்பட்டு தேசவிடுதலை, கதர்ப்பாட்டு பாடத் தொடங்கினார். சுயமரியாதை, பகுத்தறிவுக் கொள்கை திராவிட உணர்வு என்பனவற்றுக்கு ஆளாகிய பின்னர் பாரதிதாசனின் சிந்தனைக் குள் பெரியாரின் அரவணைப்பும் பொதுவுட மைவாதி சிங்கார வேலரின் தொடர்பும் ஏற்பட்ட பின் பெண்ணுரிமை, விதவைமணம், சாதி ஒழிப்பு, சமத்துவ சமுதாயம் என்பன வற்றுடன் பழந்தமிழ் இலக்கியத்திற்குள்ளும் அவரது சிந்தனை சென்றது. பெரியாரின் "குடியரசு" ஏடும் அண்ணாவின் "திராவிட நாடு" இதழும் பாரதிதாசன் கவிதைகளை அவ்வப்போது எழுதி வெளியிட்டன. நாரா யணதுரைக்கண்ணன் பாரதிதாசனைப் பார்த்து ஒரு கவிஞன் ஓர் இயக்கத்திற்கோ நாட்டிற்கோ சொந்தமானவன் அல்லன். அவன் உலகத் திற்கே சொந்தமானவன். அவன் பார்வை உலகளாவியதாக அமைய வேண்டும் எனக் கூறியதன் பின்னர் கவிஞரின் சிந்தனையும் உலகளாவிய தாக மாறியது. அதன் விளைவுதான்


"எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான
இடம் நோக்கி நடக்கின்ற திந்தவையம்"

எனக்கூறி, உலகப் பார்வை பெற்ற உலக கவிஞனது கவித்துவத்தின் பல்துறை நோக்குகளை நோக்குவோம்.

பாரதியும் பாரதிதாசனும்

தனது உயிர் போன்ற குருவுக்கு தாசனாகவே தன்னை அர்ப்பணித்து, பெற்றோர் இட்ட பெயரைக் கூட மாற்றி பாரதிதாசன் என வைத்துக் கொண்டார். அவர் பாரதி மீது கொண்ட குருபக்தி எத்தன்மையானது என்பதை,

"பாடலிற் பழமுறை பழநடை என்பதோர்
காடு முழுவதும் கண்டபின் கடைசியாய்
சுப்பிரமணிய பாரதி தோன்றியென்
பாட்டுக்குப் புதுமுறை புதுநடை காட்டினார்"



என்ற பாடல்வரிகள் இதனை உணர்த்தி நிற்கின்றன. எனவே முதலில் பாரதி கண்ட புதுமுறை, புதுநடை எவை என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலாவாகிய பாரதி இருபதாம் நூற்றாண்டின் கவிதைப் பயிரின் வீரியமுள்ள விதையாகி விளைச்சலைத் தந்து "வேலி ஆயிரம் விசையுள்" ஆகக் குவிந்தது. வீரியம் மிக்க விளைச்சலின் விதை இதுதான்.

"சுவை புதிது பொருள் புதிது
வளம் புதிது சொல் புதிது
சோதி மிக்க நவ கவிதை
எந்நாளும் அழியாத மாகவிதை"

என்பதை உணர வேண்டும்.

காதலை அறிமுகப்படுத்தும்போது, "உயிர்த் தீயினிலே வளர்சோதி" என்பது, "மின்னல் சுவை" என குயிலின் பாடலை உரைத்த போதும், ஓடிவருகையிலே கண்ணம்மா உள்ளம் குளிருதடி என அரவணைக்கின்ற வேளையிலும் அத்தகைய சுவையை நாம் முன்னர் கண்டதில்லை. கடவுள், காதல், வீரம், நீதி, பக்தி, மன்னர், கோயில் என நெடுங்காலம் ஓடிய தமிழ்க் கவிதையில், "விடுதலைக்கு மகளிர் எல்லாம் வேட்கை" கொண்டதும், "சாதி நூறு சொல்லுவாய் போ போ" என்றதும் என புதிய பொருளை கவிதை சந்தித்தது.

குயில் பாட்டும் பாஞ்சாலி சபதமும், மனித உறவை தெய்வீகத்தில் கண்ட கண்ணன் பாட்டும் கவிதைக்கு பாரதி தந்த புதிய வளமாகும். ஒரு சில புலவரின் பெட்டிப் பேழைக்குள் முடங்கிக் கிடந்த தமிழை வெளிக்கொணர்ந்து மக்களிடம் கொண்டுவந்து சேர்த்தது அவரின் புதிய சொற்கள்.

பாரதியின் இவ்வடிச் சுவட்டை பின்பற்றிய ஒரு மாணவனே பாரதிதாசன். சற்று விளக்கமாக கூறுவதாயின், பாரதியின் தேசியப்பாடல்களினாலும் சமூக சீர்திருத்தக் கருத்துக்களினாலும், நாட்டு விடுதலைக் கொள்கையினாலும் கவரப்பட்டவரே பாரதிதாசன். அதுமட்டுமன்றி பாரதி கொடுத்த அழியாத மாசு விதையினாலும் கவரப்பட்டிருந்தார். பாரதி தாசன் உள்ளத்தில் பாரதி எத்தகைய இடத்தைப் பெற்றிருந்தார் என்பதை,

"பைந்தமிழ்த் தேர்ப்பாகன் அவனோர்
செந்தமிழ்த்தேனீ, சிந்துக்குத் தந்தை
குவிக்கும் கவிதைக் குயில்! இந்நாட்டினை
கவிக்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு
நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலா!
காடு கமழும் கற்பூரச் சொற்கோ!
கற்பனை ஊற்றும் கதையின் புதையல்!
திறம் பாட வந்த மறவன்புதிய
அறம் பாட வந்த அறிஞன்! நாட்டிற்
படரும் சாதிப்படைக்கு மருந்து
மண்டும் மதங்கள் அண்டா நெடும்பவன்
அடியார் எதிர்படிக்கும் அணையா விளக்கவன்
என்னென்று சொல்வேன் என்னென்று சொல்வேன்
தமிழால் பாரதி தகுதி பெற்றதும்
தமிழ் பாரதியால் தகுதி பெற்றதும்"

என்ற பாடல் வரிகள் மூலம் உணர்ந்து கொள்ளலாம்.

### பாரதிதாசனும் தேசியமும்

பாரதிதாசன் ஒத்துழையாமை இயக்கம் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்ற வேளையில் தான் அதன் தத்துவத்தை விளக்கும் வகையில் இருபதுக்கும் மேற்பட்ட சிறு சிறு நூல்கள் அவரால் எழுதப்பட்டிருந்தன. அவற்றுள் அச்சேறிய நூல்கள் என சிறுவர் சிறுமியர் தேசிய கீதம், தொண்டர் படைப்பாட்டு, கதிர் இராட்டினப் பாட்டு ஆகிய மூன்றையும் குறிப்பிடலாம். சிறுவர் சிறுமிய தேசிய கீதம் என்ற நூல் பாரதியின் உருவப்படத்துடன் வெளிவந்தது. அந்நூலில், தேசிய கீதங்கள், தேசிய விடுகவிகள், தேசிய தாலாட்டுப் பாடல்கள், தேசிய விளையாட்டுப்பாடல்கள், சிட்டுக் குருவிப் பாட்டு, தேசியக் கப்பல், தேசிய கல்யாணப் பாட்டுக்கள் என பலவற்றை உள்ளடக்கியிருந்தன. தொண்டர் படைப்பாட்டு என்ற நூலில் தாய்நாடு, தொண்டரின் எழுச்சி, வீரன் தோள், வீரத்தமிழன் மித வாதியை எழுப்புதல் என பலதுறைகள் உள்ளடக்கப் பட்டிருந்தன.

மேற்குறிப்பிட்டுள்ளவற்றை விளக்குவதன் முன்னர் இவரது குருவின் தேசியம் பற்றி சுருக்கமாக நோக்க வேண்டிய தேவையுள்ளது. பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்குட்பட்ட பாரத நாட்டிலே கப்பலோட்டிய தமிழன் வ.உ சிதம்பரனாருக்கு தீர்ப்பு வழங்கிய சந்தர்ப்பத்தில் பின்ஹே என்ற நீதிபதி, "பாரதியின் பாட்டைக் கேட்டால் செத்த பிணமும் உயிர்த்தெழும். அடிமைப்பட்ட தேசம் ஐந்தே நிமிடங்களில் விடுதலை பெறும்" என்று குறிப்பிட்டிருந்தமை சிந்திக்கத்தக்கது. பாரதியின் பாடலைப் பாடுவதும் சட்ட விரோதம் எனக் கூறி அடக்கு முறையினாலேயே பிரித்தானிய சாம்ராச்சியம் தன்னைக் காத்துக் கொண்டது. அந்தளவிற்கு பாரதியின் பாடல்கள் விடுதலைக்கான வீரியத்தைக் கொண்டிருந்தது. பாரதியாரைப் போலவே பாரதிதாசனும் பாரதி மறைந்தபின் பாரத நாட்டின் விடுதலைக்காக வீறு கொண்டெழுந்தார். காந்தி அடிகளையும், கதர் இயக்கத்தையும் பாடி விடுதலை வேண்டி நின்றதற்கு சில பாடல்வரிகள் தரப்படுகின்றன.

"கலை கற்ற தாய் – தேர்ந்த
நிலை பெற்றதாய் – எங்கள் தாய் எனில்
புலையற்ற தெய்வீகத்தாள்"

என பாரத தேவியை வழிபடுகின்றார்.

"தேசத்திலே இந்த நேரத்திலே நல்ல
தீரதை ஆக்கிடுவாய் – இன்றெ அச்சப்
பேய் தன்னைப் போக்கிடுவாய் – எங்கள்
பூசையெலாம் உனதாக்கி எமையண்டும்
பேதமை நீக்கிடுவாய்"

என்று சக்தியை வேண்டுகின்றார்.

"வெற்றி நிலைத்திடவேண்டும் – தங்கள்
வீராமலாம் புவியேற வேண்டும்
சுற்றம் சுகப்பட வேண்டும் – நற்
சுதந்திரம் வாழ்வினிற் கூட வேண்டும்"

இளந்தமிழ் வீரர்களை உணர்வூட்டி உறங்கியிருப்போரை துயில் எழுப்ப முயல்கின்றார். பாரத நாட்டின் தேச விடுதலையில் கதர் இயக்கத்திற்கு முதன்மையான பங்களிப்பு உண்டு

"இராட்டினம் சுற்றிச் சுற்றி எதிரியின்
போக்கையும் சுழல வைக்கலாம்
மூச்செலாம் நாட்டின் விசையில் முடுக்கினால்
ஏச்சின்றி வெற்றியில் ஏறலாம்"

என்று இராட்டினப் படையை முடுக்கி விடுகின்றார். கதர் இராட்டினம் பற்றிய பாடல்களில், காந்தி அடிகளும்

கதரும் என்ற பாட்டில், தேசியத் தொண்டன் ஒருவனை நோக்கி "அந்நியர் நூலைத் தொடோம் என்ற சேதி அறைந்திடடா புவி முற்றும்" எனக் கூறுவதிலிருந்து தொடங்குகின்றது. சுதந்திரதேவியும் கதரும் என்ற பாடலில், சுதந்திரம் ஒரு பெண்ணாக உருவகிக்கபடு கின்றது. அவள் மேல் காதல் கொண்டவனிடத்தில், "இராட்டினத்தில் நூலிழைத்து நெய்து உடுப்பாய்; அந்நியர் நூலைத் தொலைப்பாய்; அப்புறம் என்னைக் கலப்பாய்" எனக் கூறுவதாக அமைகின்றது. இராட்டினச் சிறப்பு என்ற பகுதியில் பாடுவோனாகிய தலைவன் இராட்டினத்தை தலைவியாக்கி "நான் ஈன்ற பிள்ளையே சுதந்திரம்" எனப் பேசுவதாக அமைகின்றது. "அன்னைக்கு ஆடை வளர்க" என்ற பாடல் பாஞ்சாலியாக பார்த்தனை யும் துச்சாதனனாக அதிகாரம் கொண்டவர்களையும் கண்ணனாக காந்தி அடிகளையும் காட்டுகின்றது. "ஏதமில் காந்தி" எனக் கூறி அறம் வளர்க்க வந்த கண்ண னாகவே காந்தியைக் காண் கின்றார். "இடிமின்னல் காக்க குடைசெய்தான் (மகாத்மா காந்தி பஞ்சகம்) என்ற பாரதியின் பாடல் வரியுடன் ஒப்பு நோக்கத்தக்கது.

நாடு விடுதலை பெற வேண்டும் என்பதற்காக தாலாட்டுப் பாடும் கவிஞர்,

"அமுதம் உனக்குப் பாரதத்தாய் அன்பெல்லாம்
சமர் விளைக்க வந்த தமிழா இளங்குமரா
இன்பம் உனக்குப் பாரதப்போர் ஏற்பதிலே"

பச்சிளம் குழந்தைக்கு தாலாட்டுப்பாடு வதிலேயே அவரது தேசியப்பற்றும், ஒருமைப்பாடும் வெளிப்படுகின்றது. சுப்பிரமணியர் துதியமுதினில்

"ஆழ்கடல் புவிமேல் எமக்கினிதான பாரத பூமியை நீ
அட்டதிக்கும் போற்றும் வண்ணம் ஆக்குவாய் - எனில்
எட்டவே உரிமைக் கொடி தூக்குவாய்"

இவ்வாறு கேட்கின்றார்.

இந்திய விடுதலை இயக்கத்திற்கு பாரதிதாசன் இருபதுநூல்கள் வரை இயற்றியிருந்த போதிலும் அச்சிடப் பெற்றவை மிகக் குறைவே. பாரதி போல பாரதி தாசனும் பாடல் மூலம் விடுதலைக்கு முழங்கியிருந் தாலும் பிற்காலத்தில் பாரதிதாசன் ஆற்றியபணிகள் பாரதியைப் போற்றியது போல இவரைபோற்றியோர் குறைவானவரே. இதற்கு காரணம் பிற்பட்ட காலத்தில் சுயமரியாதை இயக்கம், பகுத்தறிவுக் கொள்கை, திராவிட இயக்க செல்வாக்கு, தேசிய விடுதலையிலிருந்து விடுவித்து, இவரை தமிழ்த்தேசியத்தில் தலை ஓங்கச் செய்தது.

### பாரதி தாசனும் பெண் விடுதலையும்

வேதகாலம் தொடக்கம் பெண்மை போற்றப் பட்டு வருகின்றது. தமிழில் எழுந்த முதல் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் பெண்மை பெற்றிருக்கும் இடம் ஆண்மைக்கு ஒத்த நிலையில் இருந்தது. களவின் வழித்தான கற்புடைய வாழ்க்கையில் ஒத்த தலைவனும் தலைவியும் அன்பு கொண்ட உள்ளம் உடையவராய், இல் வாழ்க்கை இன்பத்தை அறவழியில் திளைத்து (அன்பும் அறனும்) வாழ்ந்தனர்.

"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு
உருவ நிறந்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளர்ந்த ஒப்பினது வகையே"

எனவே அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை. சங்க கால இலக்கியங்கள் எந்த இடத்திலும் பெண்மையை இழிவு படுத்தியதாக இல்லை வள்ளுவரோ,

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும்
திண்மை உண்டாகப் பெறின்"

எனக் குறிப்பிடுகின்றார். எனினும் இடைக்காலத்தில் பெண்மை என்ற பதத்திற்கு "கண்ணுக்குப் புலனாவதோர் அமைதித்தன்மை" என உரையாசிரியர்கள் விளக்கம் எழுதியிருக்கிறார்கள். "பெண்ணாகி வந்ததொருமாயப் பிசாசம்" என்றும் "நுண்ணறிவுடைய நூலோடு பழகினும் பெண்ணறிவு என்பது பெரும் பேதமைத்தே" எனக் கூறியிருக்கின்றனர். இத்தகைய சூழலில் வாழ்ந்த தமிழ் நாட்டுப் பெண்ணின் சமுதாய வாழ்க்கைப் பெண்ணுக்கும் இன்றைய சமுதாயத்தில் வாழும் தமிழ்ப் பெண்ணிற்கும் எத்தனையோ மாறுதல்கள் உண்டு. இந்த மாற்றங்களை ஏற்படுத்தியவர்கள் பாரதியும் அவர் சீடர் பாரதிதாசனுமேயாவர்.

அந்நியருக்கு அடிமைப்பட்டதன் விளைவாக, வீரக்கண்ணகி வழிவந்த சமுதாயம் அச்சம் ஒன்றையே அணிகலனாக கொண்டிருந்தது.

"நாணும் அச்சமும்
நாய்கட்டு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீரசுதந்திரம்
பேணும் நற்குடிப் பெண்ணின் குணங்களாம்"

என்று பெண்விடுதலையையும் பெண்ணடிமைத் தனத்தையும் நீக்க பாரதி புதுமைப் பெண்ணைத் தோற்று வித்தார் மகாபாரதத்தைப் பாடவந்த பாரதி பார்த்தனின் விலாற்றலையோ வீமனின் தோளாற்றலையோ பாடவில்லை. பாஞ்சலியின் வீரசபதமே உள்ளத்தை ஈர்த்தது. பாஞ்சாலி துரியோதனன் அவையிலே,

"தேவி பராசக்தி ஆணையுரைத்தேன்
பாவி துச்சாதனன்செந்நீர் -அந்தப்
பாழ்த் துரியோதனன் யாக்கை இரத்தம்
மேனி இரண்டும் கலந்து குழல்
மீதினிற் பூசி நறு நெய் குளித்தே
சீவிக் குழல் முடிப்பேன் - யான் - இது
செய்யுமன்னே முடியேன் யான்"

இவ்வாறு கூறும் பாஞ்சாலி வீரக் கண்ணகியாகவே தென்படுகிறாள்.

இவ்வகையில் தன் குருவாகிய பாரதியைப் பின்பற்றி பெண்விடுதலை பாடவந்த பாரதிதாசன் குருவையே மிஞ்சி "மகளிர்க்கு நீதி வழங்காத மனித உள்ளத்தை சுக்கல் சுக்கலாக வெடிக்கச் செய்யும் வெடி மருந்துகள்" என மு.கோவிந்தசாமி குறிப்பிட்டதையே நினைவு கூரலாம். "பெண் அடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டில் ஆடவரிடம் எதிர்ப்பார்க்கும் மண்ணுரிமை முயற்கொம்பே" என்பது கவிஞர் ஆண்களுக்கு விடுக்கும் எச்சரிக்கையாகும். மாதர்தமை இழிவு செய்யும் மடமையைக் கொழுத்துவோம் என்ற பாரதியும், பெண்ணுலகை தெய்வம் எனப் போற்றிய திரு வி.கலி யாணசுந்தரனாரும், பெண்ணுலகை பிடித்திருக்கும் அடிமைத்தனம் என்ற பிணியை போராடி போக்கியே ஆக வேண்டும் என்ற ஈ.வெ பெரியாரும் போன்றவரது சிந்தனைகளே இத்துறைகளில் பாரதிதாசனை ஆவேச மெழச் செய்தது. சமுதாயப் புரட்சியில் பெண்களுக்காக உரிமைக்குரல் எழுப்பியதில் கைம்மை தோன்பும்

குழந்தை மணக் கொடுமையும் முக்கியத்துவம் பெறுகின்றன. வாழ்க்கை வளம் புரியாத ஏழுவயதுச் சிறுமிக்கு திருமணம் நடக்கின்றது. கன்னிப்பருவம் எய்தும் வேளையில் அவன் கணவனோ இறந்துவிட்டான். இக்கருவை மையமாகக் கொண்டு அப்பெண்ணின் துயரைக் கண்ணீர் காவியமாக்குகின்றான்.

"சின்ன வயதினில்
என்றனையோர் - பெருஞ்
சீமான் மணந்தனன்
செத்து விட்டான் - எனில்
அன்னது நான் செய்த
குற்றமன்று- நான் அமங்கலை

இத்தகைய கொடுமையின் உச்சக் கட்டமாக

"கோரிக்கையற்று கிடக்கு
தண்ணெ - இங்கு
வேரிற் பழுத்த பலா மிகக்
கொடிய தென்றெண்ணிடப்
பட்ட தண்ணெ குளிர்
வடிக்கின்ற வட்ட நிலா" (கைம்மைப்பழி)

என்றெல்லாம் கைம்மை நோன்பினைக் கண்டிக்கின்றார். கவிஞனுடைய பார்வையில் பெண்ணினத்திற்கு தமிழ்ச் சமுதாயம் இழைத்த அநீதிகளில் தலையாயது இதுவே என்று கூறலாம்.

அவரது கவிதைகளில் இதுதொடர்பான கவிதை வரிகள் "குழந்தை மணத்தின் கொடுமை" என்ற பகுதியில் இடம் பெற்றுள்ளது.

"கூவத் தெரியா குயிலின் குஞ்சு
தாவாச் சிறுமான் மோவா அரும்பு
தாலியறுத்துத் தந்தையின் வீட்டில்
இந்தச் சிறுமி இருந்திடுகின்றாள்"

என மிகப் பெரிய மனவேதனையுடன் வெளியிடுகின்றார். பூத்துக் குலுங்க வேண்டிய பருவத்தில் கைம்மை நெருப்பில் வாடும் மகளிரைக் காப்பாற்றியே ஆக வேண்டும் என்பது கவிஞரின் உள்ளத் துடிப்பு.

கைம்மைநோன்பினைக் கண்டிக்கும் கவிஞர் மகளிர் வாழ்வை வளம் சேர்க்க மறுமணம் மிக அவசியமானது என்பதை வலியுறுத்துகின்றார். மனைவியை இழந்த கணவனுக்கு மறுமணம் செய்யத் துடிக்கும் சமுதாயம் கணவனை இழந்த பெண்களின் உணர்வுகளை ஏன் மதிக்க மறுக்கிறார்கள்.

"துணைவி இழந்த பின்வேறு துணைவியைத்
தேடுமோர் ஆடவர்போல் - பெண்ணும்
துணைவன் இறந்த பின் வேறுதுணைதேட
சொல்லிடுவோம் புவிமேல்"

எனவும்,

"மறுமணம் புரிவதால் வராதொருகேடு"

என்றெல்லாம் கவிஞர் நியாயப்படுத்த முற்படுகின்றார். மறுமணத்தை மறுக்கும் சாத்திரங்களையும் கவிஞர் சாடமுற்படுகின்றார்.

"கட்டழகன் திருந்தோளினைக் சேர்த்திட
சாத்திரம் பார்க்காதீர்"

என்றும்

"மறுமணம் புரிவது சிறுமை என்றறைவது
குறுகிய மதியென அறிஞர்கள் மொழிவர்"

என்றும் விதவை மறுமணத்தை வற்புறுத்த முற்படுகின்றார்.

பெண் பெருமை பெற வேண்டுமாயின்
"கல்வியில்லை உரிமையில்லை பெண்களுக்கு
கடைத்தேற வழியின்றி விழிக்கின்றார்கள்"
என அவர்களின் அவல நிலையை எடுத்துக்காட்டி,
"மகளிரெலாம் கல்வியறி வொழுக்கமுளராயின்
மருத்துவமே வேண்டாவாம். பிணி மூப்புவளர்க"

என குடும்பவிளக்கில் குறிப்பிடுகின்றார்.

பாரதி புதுமைப் பெண்ணை உருவாக்கியிருந்தாலும் அப்பெண்ணுக்குரிய உரிமை வாழ்வு கிடைத்ததா? சாதிமுறையால்,பெண்ணடிமையால் என நீண்டு செல்லும் அடிமைத்தளைகள் அகன்றாலன்றி அரசியல் விடுதலை கிடையாது. உண்மை விடுதலை ஒரு நாளும் இல்லை. இரவில் வாங்கிய சுதந்திரம் பெண்விடுதலைக்கு விடிவு கொடுத்ததா? என்பதுடன் பெண்களுடனேயே அவர்கள் நிலைமையை அறிவோம். பெண் சமூகமே விழித்துக் கொள்க.

### பாரதிதாசனும் சமூக விடுதலையும்

பாரதி தாசனின் சமூக விடுதலைக்கு உரமூட்டிய பின்னணியை முதலில் அறிந்து கொள்ள வேண்டியது மிக இன்றியமையாதது. ஆன்மீகப் பாவலராகவும் இந்திய விடுதலைப் பாவலராகவும் விளங்கிய கவிஞர் காலப் போக்கில் சுயமரியாதை இயக்கத்தில் கால் பதித்ததும் கவிதையின் பொருள் மரபு மெல்லமெல்ல மாறத் தொடங்கிவிட்டது. பகுத்தறிவுக் கொள்கையுடன் திராவிடர் இயக்கத்தின் செல்வாக்கு அவரை முழுமையாக மாற்றிவிட்டது. சமூகவிடுதலையில் சிந்தை கொண்ட இவர்மனம் தனக்குச் சரியென்றுபட்டதை தயங்காமல், புரட்சியில் பாரதியைவிட இவர் தீவிரமுடையவராய் இருந்தார். பெரியார் கட்சியில் சேர்ந்து தீவிரமாக உழைத்ததினால் சாதிசமய வேறுபாட்டினை முற்றிலும் வேரறுக்க விரும்பினார். பூமிக்கு கொள்ளை நோய் போல மதத்தை கட்டியெழும் வைதிகத்தை சாட முற்படுகின்றார். இதற்கும் பாரதியே வழி காட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாரதி பிஜி தீவில் கரும்புத் தோட்டத்தில்படும் துன்ப துயரங்களைக் கேட்டு கலங்கினார்; சாதியை கவிதை என்னும் சாட்டையினால் வாட்டினார்; வேதியராயினும் வேறு எவராயினும் பிறப்பு ஒன்றென விளக்கினார். தான் பார்ப்பனராயிருந்தும்,

"பார்ப்பானை ஐயர் என்றகாலமும் போச்சே"

என விளக்கினார். மனுநூல் வகுத்த தர்மத்தை மறுதலித்தார். ஆதி திராவிடனும் அந்தணராகலாம் என்று கூறி தாழ்ந்த சாதியினர் வீட்டில் அமுது உண்டு களித்தார்.

"சூத்திரனுக்கோர் நீதி தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொருநீதி
சாத்திரம் சொல்லிடுமாயின் அது
சாத்திரமன்று சதியென்று கண்டோம்"

இவ்வாறு தன் குருவாகிய பாரதியே பகுத்தறிவாளர் என்பதை தெளிந்து வாழ்நாள் முழுவதும் அக் கொள்கைமாறா வண்ணம் ஆழப்படிந்திருந்தது. பாரதிதாசன் மனத்தினிலே என்று கூறலாம்.

இந்த வழியில் பாரதிதாசன்
"ஆத்திகன் வீடு முடை நாற்றச்சுடுகாடு
கேட்டுக்கு தெய்வமென்றே பெயர் - அதை

கெஞ்சல், இறைஞ்சல், தமிழ் கொள்கையில்லை"
என உறுதியாகவே மறுத்துரைக்கின்றார்.

"யேசு முகம்மது என்றும் – மற்றும்
சிவனென்றும் அரியென்றும் சித்தார்த்த னென்றும்
பேசி வளர்க்கின்ற போரில் – உன்
பெயரையும் கூட்டுவர் நீ ஒப்ப வேண்டாம்"

என கடவுட் கொள்கையை திட்டவட்டமாக மறுத்துரைக்கின்றார். மனத்துக் கண் மாசற்ற தன்மையே அறம். மனம் ஒரு கோயில் மனச் சாட்சியே தெய்வம் என்று கூறுவது போல இது அமைகின்றது. பக்தியின் பெயரால் சமயத்தின் பெயரால் பல்மத வேறுபாடுகள் கொண்ட மனித சமுதாயத்தில் விளைந்த வேற்றுமை களை கவிஞர் நம் கண் முன்னே வைக்கின்றார். உயர்வு தாழ்வு என்பது சமயத்தின் வழிவந்த ஆரிய நூற் கொள்கையாகும்.

"பிரமன் உடல்தனில் நான்கு வகையாம்
பிறந்தாராம், பார்த்தானாம் என்றன் மக்கள் தந்தை
பிரமன் முகந்தனிற் பார்ப்பார் பிறந்திட்டாராம்
பிரமன் தோள் பெற்றதுவாம் மன்னர் தம்மை
பிரமனிடை தனிற் பிறந்தார் வாணிகர்கள்
பிரமனிடை பிறந்தார் உலகிலுள்ள
பெருமக்கள் இது மனு–நூல் காரர் சூழ்ச்சி"

(பாரதிதாசன் கவிதை மூன்றாம் தொகுதியில் உள்ளது பக் 76)
எனக் கூறுவதை பகுத்தறிவுள்ளவர் சிந்திக்கத்தக்கது.

சமூக விடுதலையில் கவிஞரின் நிலைப்பாடு பொதுவுடைமைக் கொள்கையை வலியுறுத்துவதும் சாதிமத பேதங்கள், குருட்டு நம்பிக்கைகளை இல்லாது ஒழிப்பதுமேயாகும். இதற்கு முடியாட்சி ஒழிக்கப்பட்டு குடியாட்சி அமைக்கப்பட வேண்டும் என்பது அவர் கொள்கை. ஆட்சி மக்களிடம் பொதுமை செய்யப்பட வேண்டும். மக்களாட்சியில்,

"எல்லார்க்கும் தேசம் எல்லார்க்கும் உடைமையெலாம்
எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் சூடகவே"

எனஅமைய வேண்டும். சமூக விடுதலையில் சுயமரியாதை இயக்ககொள்கையை விளக்க எழுந்ததே அவரது சமத்துவப்பாட்டு. மூட நம்பிக்கை, மூட வழக்குகள் பொய்மைக் கதைகள், புரட்டு நோக்குடன் எழுதப்பட்ட புராணக்கதைகள் மக்கள் வாழ்வினின்று அகற்றப்படாவிடில் சமூக விடுதலைக்கு இடமே யில்லை.

உலகில் உள்ள தீமைகளுக்கு தலையாயதாக இருப்பது உழைப்பினைச் சுரண்டி வாழும் முதலாளி வர்க்கம்.

"பொத்தல் இலைக்கலமானார் ஏழை மக்கள்
புனல் நிறைந்த தொட்டியைப் போலானார் செல்வர்" என
தன்மன வேதனையை வெளிப்படுத்துகின்றார்.

"காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான் அவன்
காணத்தகுந்தது வறுமையாம் – அவன்
பூணத்தகுந்தது பொறுமையாம்"

உழைப்பை அளித்து விட்டு உறங்கிக்கிடக்கின்ற தொழிலாளி அஞ்சி வாழாது கிளர்ந்தெழுந்தால் நிலமை என்னவாகும் என்பதை உணர்த்தவும் அவர் தவற வில்லை.

"ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்பராகி விட்டால் ஓர் நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆயவிடுவார் உணரப்பா நீ ஒப்பப்பர்
ஆயவிடுவார் உணரப்பா நீ"

என்று கூறி முதலாளி தன்னைத் திருத்திக் கொள்ளாவிட்டால் வரும் வினை பயனையும் குறிப்பிடுகின்றார். தேவைக்கதிமாக சிலரிடம் பணம் குவிந்திருப்பது மக்களில் சிலரைத் திருடர்களாக்க முயல்கின்றது.

"பொருளாளி திருடர்களை விளைவிக்கின்றான்
பொதுவுடைமையோன் திருட்டைக் களைவிக்கின்றான்"

இக்கருத்து அவரது ஆத்தி சூடியில், "உடைமை பொதுமை செய்" என வலியுறுத்தப்பட்டுள்ளது. "பாரதி தாசனின் தமிழ் இயக்கம்" என்ற நூலினைப் பற்றி ஏ.கே.செட்டியார் என்பர்,

பாரதிதாசன் நன்றாகக் கவிபாடுகின்றார். ஆனால் அவர் பிராமணத் துவேசியாக காணப்படு கின்றார். ஜாதியின் பெயராலும் தர்மத்தின் பெயராலும், சமுதாயத்தை கொள்ளையடிப்பவர் எவராயிருந்தாலும் அத்தனை பேரையும் துவேசிக்கின்றார் என கூறியிருக் கின்றார். சாதியேற்றத்தாழ்வு என்ற கண்ணோட்டத்தில்,

"கொலை வாளினை எட்டா மிகு
கொடியதோர் செயல் அறவே" என்று பாடுவதும்
"இருட்டறையில் உள்ளதடா உலகம் – சாதி
இருக்கின்றது என்பானும் இருக்கின்றானே"

எனவும் ஆவேசமாக குரல் எழுப்புகின்றார். இவ் விடத்தில் பேராசிரியர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், "சமவுரிமை இல்லாத நிலையினைக் கண்டு எரிமலையாக குமுறிப் பாடிய பாடல்களில் சமுதாயத்தின் உரிமைக் குரல் ஒலித்துக் கொண்டுதான் இருக்கின்றது" எனக் கூறியுள்ளார்.

சமூக விடுதலைக்காக புதியதோர் உலகம் செய்வோம் எனப் புறப்பட்ட கவிஞர்,

"... காலமெலாம் ஏய்த்து வரும்
பாவிகளைத் திருத்தப் பாவலனே நாமிருவர்
ஆவிகளையேனும் அர்ப்பணம் செய்வோம்
மக்கள்
இனம் ஈன்ற தமிழ்நாடு தனக்கு என்னால்
தினையளவு நலமேனும் கிடைக்கு மென்றால்
செத்தொழியும் நாள் எனக்குத் திருநாளாகும்"

என பொதுவுடைமைக் கொள்கையை பரப்ப முயன்றவர்.

பறவைகளிடத்து காணப்படும் ஒழுக்கம் கூட ஆறு அறிவு படைத்த மனிதனிடம் இல்லையே என சமூகக் கொடுமையை சுட்டிக்காட்டும் போது

"எச்சாதிக் கிவர் இழிவென்று
சண்டையிட்டு பஞ்சாகிப் போனாரடி"

எனக் கூறி பிறிதோரிடத்தில்,

"இட்டதோர் தாமரைப்பூ
இதழ் விரித்திருத்தல் போல
வட்டமாய் புறாக்கள் கூடி
இரையுண்ணும் அவற்றின் வாழ்வில்
வெட்டில்லை குத்துமில்லை
வேறு வேறிருந்து அருந்தும்
கட்டில்லை கீழ் மேல்என்றும்
கண்மூடி வழக்கம் இல்லை

என்பதில் ஆதங்கப்படுவதும் நோக்கத்தக்கது.

பாரதிதாசனும் தமிழ் மொழியும்

பாரதி தாசன் தனது இலக்கியக் கொள்கை என்ன என்பதை விளக்கும் போது தனது வாழ்க்கையின் அடிப்படை,

“சாதி ஒழித்திடல் ஒன்று நல்ல
தமிழ் வளர்த்தல் மற்றொன்று
பாதியை வையம் மறந்தால் - மற்றப்
பாதி துலங்குதல் இல்லை”

இதுதான் எனக் குறிப்பிட்டுள்ளார். முன்னது பற்றி சிறிது விளக்கப்பட்டுள்ளது. பின்னது பற்றி ஆராய்வோம். பாரதியாரைச் சந்தித்த பின்னரும் ஈ.வே.ரா.பெரியாருடன் கூட்டுச் சேர்ந்த பின்னும் பாரதி தாசன் மொழி வெறிக் கவிஞர் ஆயினர் என்பது வெள்ளிடைமலை.

பாரதிதாசனின் தமிழ்ப்பற்று எத்தன்மையானது என்பதை விளக்கு முன்னர் தமிழ் மொழி பற்றிய வரலாற்றினை எவ்வாறு நோக்குகின்றார் என்பதை சிந்திக்க வேண்டும். பேராசிரியர் கந்தரம்பிள்ளை,

“சதுமறை ஆரியம் வருமுன் சக முழுதும் நினதாயின்
முதுமொழி நீ அநாதியென மொழிகுவதும் வியப்பே“

எனக் கூறியதையும், மகாகவி பாரதி

“தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்ந்திடு
சூழ் கலை வாணர்களும் - இவள்
என்று பிறந்தவள் என்றுணராத
இயம்பினனாம் எங்கள் தாய்”

என்று உணர்ந்து ஏற்றுக் கொண்ட பின்னர்

“திங்களொடும் செழும் பரிதி தன்னோடும்
உடுக்களோடும்
மாங்குல் கடல் இவற்றொடும் பிறந்த
தமிழுடன் பிறந்தோம்“

எனக் குறிப்பிட்டுப் பாடுகின்றார். இவ்விடத்தில் இந்திய நாட்டின் அரசியல் அறிவுலகமேதை அம்பேத்கார், தீண்டப்படாதோர் என்ற நூலில், “தமிழ் அல்லது திராவிடம் தென்னிந்தியாவின் மொழி மட்டுமன்று. அது ஆரியர்கள் இந்தியாவிற்கு வருவதற்கு முன் இந்தியா முழுமைக்குமான மொழியாக விளங்கியது” எனக் குறிப்பிட்டுள்ளதும் மனம் கொள்ளத்தக்கது. இவற்றினைக் கருத்திற்கொண்ட பாவேந்தர் வட மொழியே இந்தியமொழிகளின் தாய்மொழி என்பதை மறுத்து தமிழ் மொழியே அவற்றுக்கு அடிப்படை என்பதை ஏற்ற உண்மையை உரைக்கப் புறப்படுகின்றார்.

“முதலில் தோன்றிய மனிதன் தமிழன்
முதல்மொழி தமிழ்மொழி ஆதலால்
புது வாழ்வின் வேர் தமிழர் பண்பாடே”

என இனத்தையும் தன்மொழியையும் புகழ்ந்து பேசுவதில்தான் அத்துணை துணிச்சல்.

“இப்புவி தோன்றி நாள்முதலாய் - எங்கள்
இன்பத் தமிழ் மொழி உண்டு கண்டீர்“

என அனைத்து மொழிகளுக்கும் தமிழே தாய்மொழி என உலக, மக்களுக்கு எடுத்துவிளக்க முற்பட்டார்.

வடமொழிச் சொற்கள் பல தமிழ்ச்சொல்லாக உருவம் பெற்று வருவதை விரும்பாது தனித் தமிழ் இயக்கம் ஒன்று உருவானது. வடசொற்களை ஏற்று போற்றிடும் நிலையை மாற்றியமைத்தவர். தமிழ்த் தந்தை மறைமலை அடிகளாவார். அவர் “ஞான சாகரம்” என்ற தனது இதழின் பெயரை “அறிவுக்கடல்” என மாற்றினார். வேதாசலம் என பெற்றோர் இட்ட பெயரை “மறைமலை” என மாற்றினார். அடிகளாரின் தனித் தமிழ் இயக்கமும் பாவேந்தரைக் கவர்ந்தது. இதன் பின்னர் அவரது கவிதைகள் முழுவதும் தனித் தமிழ் சொல்லாட்சியுடன் வெளிவந்தது.

“தனித்தியங்கும் தன்மை தமிழினுக்குண்டு
தமிழே ஞாலத்தின் தாய் மொழி“

என்பது பாவேந்தரின் மொழியியற் கோட்பாடாயிற்று. இவ்விடத்தில், “பொதுவாக மொழிகள் தோன்றிய பின்னரே செம்மையடைகின்றன. ஆனால் தமிழ் மொழி பிறக்கும் போதே செம்மையாகத் தோன்றியது” என்பதில் கருத்து வேறுபாட்டிற்கு இடமில்லை.

பாரதியும் தமிழ் மொழியின் பெருமை சாற்றினான். பாரதிதாசனும் தமிழின் பெருமையைப் பாடினார். ஒப்பீட்டு அடிப்படையில் இருவரது கொள்கைளை நோக்குவது இவ்விடத்தில் மனம் கொள்ளத்தக்கது. பாரதியார் “தமிழ்த்தாய்” என்ற பாடலில் தமிழ்மொழி சிவபெருமானால் பெற்றெடுக்கப்பட்டதும், அகத்திய முனிவர் இலக்கணம் செய்து கொடுத்ததும், முடியுடை மூவேந்தர்களால் நன்கு வளர்க்கப்பட்டதும், ஆரிய மொழிக்கு சமமான முறையில் நம் மொழியன்னை நின்று நிலவுவதாக கூறியுள்ளார். இதனைப் பழந்தமிழ் செய்யுள் ஒன்றும் பின்வருமாறு உரைப்பதும் நோக்கத்தக்கது.

“வடமொழியைப்பாணினிக்குவகுத்தருளிஅதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை உலகமெலாற்தொழுதேத்த
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனில்
கடல் வரைப்பில் இதன்பெருமை யாவரே கணித்தறிவார்”

என்பதே அச் செய்யுள்.

“தமிழ்” என்ற தலைப்பின் கீழ் பாரதியார்,
“யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்
இனிதாவ தெங்கும் காணோம்”

என தமிழ் இனிமையானது என்கிறார்.

“தெள்ளுற்ற தமிழமுதத்தின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்”

என தமிழ் அமுதானது எனக் குறிப்பிடுகின்றார். தமிழ் வாழ்த்தில், “வானம் அறிந்தனைத்தும் அறிந்து வளர் மொழி வாழியவே” என வாழ்த்துகின்றார்.

பாரதிதாசனது தமிழ் பற்று பாரதியை மிஞ்சியது மட்டுமன்றி அதில் ஒரு வெறித்தன்மையும் காணப்படுகின்றது. தமிழ் மொழியின் தூய்மையைச் சீரழிக்கும் ஆங்கிலம், வடமொழி ஆதிக்கம், இந்திமொழி ஆதிக்கம், முதலிய அனைத்தையும் எதிர்க்க வேண்டிய ஒரு சூழ்நிலை அவருக்கேற்பட்டது. தமிழ் வாழ்ந்தால் தான் தமிழினம் வாழும் என்பதே பாரதிதாசனின் தமிழ்ப்பற்று.

“உயர்ந்த பண்பாட்டை தந்தது தமிழ். உலகம் என்பது உயர்ந்தோர் மட்டே என மானுட நாகரிகம் வழங்கியதும் தமிழ், இதன் விளைவுதான்,

“மானிடம் என்னுமோர்ஆதிப்பயிர்- தமிழ்
மக்களென்றே குதித்தாடுவமே”

என்றும்

“மனித வாழ்வை
இனிய நற்றமிழே நீ தான்
எழுப்பினள்”

என்றும்

“தமிழே ஆதித்தாயே வாழ்க
தமிழர்க் கெல்லாம் உயிரே வாழ்க”

என்றும்

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு"

என அவர் முழங்கும் சங்கு நாதம் எத்தன்மையானது என்பதை நாமே உணர்ந்து கொள்வோம்.

தமிழ் மீது அவர் கொண்ட ஆராக் காதல் அளவிட முடியாதது. தந்தை பெரியாரினதும், மறை மலை அடிகளாரினதும் கொள்கையை உணர்ச்சியுடைய சொற்களினால் கவிதையாக்கினார்.

"தமழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை
தமிழ்த் தொண்டன் பாரதிதாசன் செத்ததுண்டோ?

என்றும்,

"தமிழரின் மேன்மையை இழந்தவனை என்
தாய் தடுத்தாலும் விடேன்"

என்றும்,

"தமிழுக்கு அமுதென்று பேர். அந்தத்தமிழ் இன்பத்தமிழ்
எங்கள் உயிருக்கு நேர்"

என்றெல்லாம் பாடும் வேளையில் உணர்வுடன் கூடிய கருத்தாழத்தையும் காணமுடிகின்றது. செந்தமிழ் நாடு சிறப்புறுதல் வேண்டுமெனில் நற்தமிழை நாம் போற்றிக் காக்க வேண்டும்.

"தமிழனும் தமிழும் தணலும் சூடும்
அமிழ்தமே யாயினும் அயல் மொழி அயல்மொழி
அயல்மொழி தமிழை அண்டும் விழுக்காடு
தமிழ் மொழி தாழும் தமிழன் தாழ்வான்"

என்று சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் தமிழுக்கும் தனக்கும் உள்ள தொடர்பு எத்தன்மையானது என்பதை,

"செந்தமிழே! உயிரே! நறுந்தேனே
செயலினை மூச்சினை உனக்களித்தேனே
நைந்தாயெனில் நைந்து போகுமென் வாழ்வு
நன்னிலை உனக்கெனில் எனக்குத்தானே!

மேற்குறிப்பிட்ட பாடலில் மட்டுமல்ல பிறிதோரிடத் தில் உவமைகளினூடாகவும் விளக்க முற்படுகின்றார். வெண்ணிலாவும் வானும் போல, வீரனும் சுடர் வாழும் போல, வண்ணப் பூவும் மணமும் போல என்றெல்லாம் கூறி இறுதியில் கன்னல் தமிழும் தானும் என முடிக் கின்றார். தமிழைவிட வேறோர் மொழி இனிதாயிருக் கிறது என்றால் என்னால் பொறுக்க முடியாது என்று சொல்லுவார். பாரதி தமிழ்மொழி உணர்வினை சுடர்விடச் செய்த தமிழ் சமுதாயத்தை ஒன்று சேர்த்த, உத்தியை இவரிடமும் காண முடிகின்றது.

ஹிந்தி மொழியை அரச கருமமொழியாக்க வேண்டும் என்ற சர்ச்சை எழுந்த காலத்தில்,

"இந்திக்கு தமிழ்நாட்டில்
ஆதிக்கமாம் – நீங்கள்
எல்லோரும் வாருங்கள்
நாட்டினரே
செந்தமிழுக்கு தீமை
வந்தபின்னும் – இந்த
தேகம் இருந்தொரு லாப முண்டொ"

என்றும்

"எப்பக்கம் வந்து புகுந்து விடும் இந்தி
எத்தனை பாட்டாளம் கூட்டிவரும்
அற்பமென்போம் அந்த இந்தி தனை
ஆதிக்கம் தன்னை குலைத்திடுவோம்"

என்பன போன்ற எட்டுப் பாடல்கள் இந்த "எதிர்ப்புக்கு தியாகம் செய்ய வேண்டும்" என்ற தலைப்பில் எழுதி வெளியிட்ட பகுதியில் காணப்படுகின்றது.

"செந்தமிழைக் காப்பதற்குச்
சேனையொன்று தேவை பெரும்
சேனையொன்று தேவை
திரள் திரளாய் சேர்ந்திடுவீர்
புரிவம் நல்ல சேவை"

மேலும் இந்திப் போருக்கழைத்தல் என்ற தலைப்பில்,

"இந்தியை விதைக்கின்றார் தோழர்காள்
இன் தமிழ் நிலத்திலே தோழர்காள்
உயர் தமிழ் மடிந்தபின் வாழ்வுண்டோ"

என்றெல்லாம் உணர்வினை ஊட்ட முயல்கின்றார். இவ்வகையில் அக்காலச் சூழலைக் கருத்திற்கொண்டு அவர் பாடியவையே இப் பாடல்களாகும்.

நிறைவுரை :

"தனி ஒருவனுக்கு உணவு இல்லையேல் இந்த யகத்தினையே அழித்திடுவோம்" என்றான் பாரதி. அவர் சீடனோ, "புதியதோர் உலகம் செய்வோம்" என வெளிக் கிட்டான்.

"ஒரு மனிதன் தேவைக்கே இந்தத் தேசம்
உண்டென்றால் அத்தேசம் ஒழிதல் நன்றாம்"

என "வீரத்தாய்" என்ற காப்பியத்தில் குறிப்பிடுகின்றான். உலகில் உள்ள தீமைகளுக்கெல்லாம் தலையானது. தனி உடைமையாகும். இது தான் மக்களுக்கிடையே உடை யான். இல்லான்; ஏழை பணக்காரன்; முதலாளி தொழிலாளி; ஆண்டான் - அடிமை என்ற பேதத்தை வளர்க்கின்றது என்பது பாரதி தாசனின் கொள்கை.

"பொத்தல் இலைக்கலமானார் ஏழை மக்கள்
புனல் நிறைந்ததொட்டியைப் போலானார் செல்வர்"

என தன்வேதனையை வெளிப்படுத்துகின்றார்.

மேலும் கவித்துவ உலகில் பாரதிதாசனை உலகக் கவிஞன் எனக் கூறுவதற்கு அவரிடம் இரண்டு அம்சங்கள் காணப்பட்டன.

1. மரபும் தனித்திறமையும்
2. அறிவின் மேல் ஏற்றிய உணர்ச்சி

கருத்தும் உணர்ச்சியும் ஒன்றாகும் போது நல்ல கவிதை பிறப்பது இயல்பானது என்று பேராசிரியர் செல்வநாயகம் வகுப்பறையில் கூறியது நினைவுக்கு வருகின்றது.

புதுச்சேரியில் தோன்றி, பாரதியின் சீடனாகி சுயமரியாதை, திராவிட இயக்கங்களின் பாதிப்பிற்கு உள்ளாகி, தேசிய நீரோட்டத்திலும் கலந்து,

"எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான
இடம் நோக்கி நடக்கின்றது இவ்வையகம்"

என்ற உலகப் பார்வையோடு கவிதைக் கடலில் கலந்த பாரதிதாசன் உலகக் கவிஞனே என்ற மாற்றுக் கருத்துக்கு இடமேயில்லை.

தமிழ் மொழியிலே இனிமை இருக்கின்ற வரையில், கவிதையிலே உணர்ச்சியும் எளிமையும் இருக்கின்ற வரையில், பெண்ணினத்திற்கு மதிப்பு, மரியாதை இருக்கின்ற வரையில், பாரதி மட்டுமன்றி அவர் சீடன் பாரதிதாசனும் வாழ்ந்து கொண்டே இருப் பான். பாரதிதாசன் சாகவில்லை. சாகவும் மாட்டார். நம் மோடு நம்மையும் வாழ்வித்துக் கொண்டேயிருக்கிறார்.

அவர் உலக மகாகவியே.

# முகமூடி நடனம்

சிங்களச் சிறுகதை : முகமூடி நடனம்
எழுதியவர் : கெத்லீன் ஜயவர்தன
தமிழாக்கம் : தம்பிஜயா தேவதாஸ்

கெத்லின் ஜயவர்தன

1949 ஆம் ஆண்டு மாத்தறை பொல்ஹேன் என்ற இடத்தில் பிறந்த கெத்லின் ஜயவர்தன நுகெகொட கர்டன் மகளிர் வித்தியாலயத்தின் (தற்போதைய அனுலாவித்தியாலயம்) பழைய மாணவியாவார். சிங்கள இலக்கிய உலகில் நாவலாசிரியையாக பிரபலம் பெற்ற அவரது முதலாவது நாவல் 'பவன் கததுறா ஹரதகே" என்ற பெயரில் 1977இல் பிரசுரமாகியது. இதுவரை எழுதியிருக்கும் நாவல்கள் 15ற்கும் அதிகமாகும். அதன் பின்பு மூன்று சிறுகதை தொகுதிகளையும், நான்கு சிறுவர் கதைகளையும், இரண்டு நாடகப் பிரதிகளையும், விமர்சனப் பிரதிகள் சிலவற்றையும் வெளியிட்டிருக்கிறார். அரச விருதுகள் உட்பட பல விருதுகள் பெற்றுள்ளார். அரச நிறுவனங்கள் சிலவற்றில் பிரசார, பொதுமக்கள் சம்பந்தமான பல சஞ்சிகைகளை தொகுத்துள்ள கெத்லின் தற்பொழுது முழுமையாக இலக்கிய முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். இங்கு இடம்பெற்றுள்ள முகமூடி நடனம் என்ற சிறுகதை 1999இல் வெளிவந்த 'பிரபு" என்ற சிறுகதை சஞ்சிகையில் இடம்பெற்றது.

செதோறிஸ் இப்பொழுது மீண்டும் பேயோட்டும் தொழிலை செய்கிறாள் என்று சொல்லுகிறார்கள்.

வரிச்சுச் சுவரின்மீது பாம்பு ஒன்று நெழிந்து கொண்டிருக்கிறதோ என்று பார்ப்பதற்காக கண்களை கூர்மையாக்கிய பொழுது சுத்தப்பாவின் மனம் பயந்து போய்விட்டது. அரைமணித்தியாலத்துக்கு முன்பு மர வள்ளிக்கிழங்கொன்றை வெட்டிய களைப்பால் மூச்சடைப்பு வந்து தொண்டையை அடைப்பது போல் இருந்ததால் சிறிது நேரம் அவனால் பேச முடியவில்லை.

"அவனது நல்லதும் வேண்டாம், கெட்டதும் வேண்டாம்", சில நிமிடங்களின் பின் சுத்தப்பு ஆயாசமாக பதில் சொன்னான்.

"வெட்கம் கெட்டவர்கள்" அவன் மீண்டுமொரு முறை விறாந்தையூடாக வந்து நெழியும் பாம்பை முயற்சித்தான். குப்பி லாம்பு விளக்கொளியில் கறுப்பு நிறமான சிலந்தி வலையைக் கண்டதும் அவனது சந்தேகம் தீர்ந்தது.

"செதோறிஸ் தல்லவன் அல்ல என்ற குறை கேட்டதும் சும்மா காரணம் இல்லாமல் அல்ல, அதனாலென்ன அவன் நல்ல சுகமாகத்தான் இருக் கிறானாம்".

குசினியில் அடுப்படிக்குச் சென்று இப்பொழுது சிறிதாக எரித்து கொண்டிருக்கும் நெருப்புக் கொள்ளியை சாம்பலுக்குள் புகுத்தி விட்டு வந்த என்சினா அவ்வாறு கூறிய போது தத்தப்பவுக்கு கோபம் வந்து விட்டது.

"சும்மா பிதற்றாமல் இரு பெண்ணே" என்று சொல்ல வாய் எடுத்த அவன் நேற்று முதல் இன்று வரை நடைபெற்ற எல்லாவற்றையும் நினைத்துப் பார்த்ததும் அமைதியானான்.

"அந்த விரோதத்தையெல்லாம் விட்டுப் போட்டால் என்னவாம், மேலும் செதோறிஸின் உள்ளத்தில் இப்பொழுது கொடிய எண்ணங்கள் இல்லையாம்"

தன்னுடைய பக்கத்திலும் அது அவ்வாறே இருக்கிறது என்று கூறவேண்டிய சுத்தப்பு வாய்திறக்க வில்லை. அதற்கு பதிலாக அவன், "ஆம் அவன் உன் அண்ணன் ஆச்சே" என்று மட்டும் கூறினான்.

"பிரயோசனமான வேலைக்காக கொலை செய்தாலும் பரவாயில்லை. இது என்னவென்றால் இந்த பிரயோசனமற்ற வேலையால் என்ன பயன்?" என்சினா மிக மெல்லிய குரலில் சொன்ன இந்த வார்த்தைகள் சுத்தப்புவின் மனதில் அறைந்தது போலிருந்தது.

சில வண்டுகளின் இரைச்சலால் அந்த இரவின் அமைதி குலைந்திருந்தது. தென்னந்தோப்புக்கு அப்பா லிருந்து பறை ஒலி ஒலித்தது. சுத்தப்பு தலை நிமிர்த்தி சத்தத்தை கேட்டுக் கொண்டிருந்தான். தாளம் தவறாத பறை ஓசை அது. சந்தேகமில்லை செதோறிஸ் அடிக்கும் பறைமேளம் தான்.

நெஞ்சத்தில் மெல்லிய காற்று வீசியது போன்ற அமைதியான உணர்வை சுத்தப்பு அனுபவித்தான். அரை வருடத்துக்கு முன்பு செதோறிஸூம் நானும் பேயோட்டும் தொழிலை செய்தமை ஞாபகத்தில் வருகிறது. அதற்கு முன் காலத்திலும் குளத்திலிருந்து வயலுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கும் சேனைப் பயிர் செய்வதற்கும் தனக்கு கையுதவி செய்ததும் செதோறிஸ் தான்.

செதோறிஸ் கோபப்பட்ட நாள் முதல் தனியாக பேயோட்டும் தொழிலை செய்த போது அவனுக்கு அதிக இலாபம் கிடைக்கவில்லை. அதனால் குளத்தி லிருந்து நீர்பாய்ச்சி மீண்டுமொருமுறை சேனைப் பயிர் செய்ய முற்பட்டான்.

என்சினா பகல் வேளையில் பச்சை அரிசி சோறு சமைத்தாலும் இரவுச்சாப்பாட்டை இந்த அடைப்பு நிலத்தில் மரவள்ளி வத்தாளை போன்ற கிழங்குகள் கொண்டு தயார் செய்வாள். தை மாதத்தில் பெய்யும் அகால மழையின் காரணமாக சேனைப் பயிர் காய்ந்து போனாலும் தண்ணீர் இறங்கியபின்பு நனைந்த நிலத்தில் செழிப்பாக வளரும் வெண்டக்காய், புடலங்காய், கெக்கெரிக்காய் மற்றும் வத்தாளை கொடியையும்

பார்பதற்கு அழகை அள்ளிச் சொரியும், தாகத்துக்கு கொம்பட்டிக் காயை மெதுவாக கடித்துக்கொண்டு சூரியன் மறையும் வரை நிலத்துடன் போராடி காய்கறிகளை பறித்துக்கொண்டு வந்தன. அவற்றை காசாக மாற்றுவது என்சினா தான்.

கத்தரிக்காய், மிளகாய், வத்தாளை கிழங்கு போன்றவற்றை மூன்று தட்டிகளில் அடுக்கி வைத்துக் கொண்டு வாரத்துக்கு ஒருமுறை நகரத்துக்கு சென்று வருவாள். நகரத்து விஷயங்களை அவனுக்கு சொல்லிக் கொடுப்பதும் என்சினா தான்.

சில காலங்களுக்கு முன்பு தெல்கந்த சந்தையில் சுங்குங், பொன்னாங்காணி கீரைகளுக்கு இருந்த மதிப்பு இப்பொழுது குறிஞ்சாக்கொடி, ஜப்பான் கத்தரி போன்ற வற்றிற்கு மாறியிருக்கிறது என்று என்சினா கூறினாள். சந்தையின் உள்ளே கரட், போஞ்சி போன்றவற்றைப் பின் தள்ளிவிட்டு நாட்டுகத்தரிக்காய், பாகற்காய் போன்ற வற்றை தேடி வருபர்களையும் வட்டி அம்மாமாரின் வட்டிகளையும் பெட்டிகளையும் சுற்றி நிற்பவர்களையும் பற்றி கூறுவாள்.

பழங்கஞ்சி செய்வதற்கான இலைவகைகளையும் தேடி வரும் நகரத்துரைமாரினதும் நோனாமாரினதும் வேண்டுகோள்கள் நாளுக்கு நாள் அதிகரிப்பதால் தென்னைமரத்தடியில் வளரும் தேங்காய்ப்பூ கீரை, சீதேவியார் செங்களுநீர் போன்றவற்றை பிஞ்சிலேயே பறித்துக்கொண்டு வரும் நிலை அவளுக்கு ஏற்பட்டிருக் கிறது. நகரவாசிகளின் இந்த இலைகஞ்சி ஆசைகளுக்குப் புண்ணியம் கிடைக்கவேண்டும் என்பதற்காகவே என்சினா சென்ற பௌர்ணமி தினத்தில் சீல் உடையும் சட்டைகளையும் தைத்துக்கொண்டாள்.

“எனது வட்டியில் இருந்த நீர்ச்செடி ஒன்றை கையில் எடுத்தவாறு இவற்றைக்கொண்டு கஞ்சி காய்ச்சுவது எப்படி” என்று ஒரு நோனா என்னிடம் கேட்டாள் என்பதை என்சினா பல முறை சொல்லிச் சிரிக்கிறாள்.

சுவரில் சாத்தியிருந்த சாய்மனைக் கதிரையை நீட்டிப் போட்ட அத்தப்பு கொட்டாவி விட்டுக் கொண்டு அதன்மீது சாய்ந்தமர்ந்தார். என்சினா அடுப்பு எரிப்பதற்காக பாளையொன்றை உரித்தெடுக்கும் காட்சி அவனுக்குத் தெரிந்தது. இரவு உணவு சாப்பிட்டு முடித்த பின் ஒரு சுண்டு அரிசியை கழுவி அடுப்பில் வைத்த அவள், பாளைகளை அடுப்புக்குள் வைத்து நெருப்பு படபடவென்று எழுந்து எரிந்து உலைத்தண்ணீரில் குமிழ்கள் தோன்றிய போது அவள் விறகு கொள்ளியை பின்இழுத்து சாம்பலுக்குள் நுழைத்தாள். நெருப்புத் தணலில் அமைதியாக வேகிய சோறு அதிகாலை ஆனபோது பதமாக பூத்திருக்கும்.

வெயில் நேரத்தில் சட்டியில் வைத்திருக்கும் சோற்றை அம்மியில் அரைத்து தயாராக வைத்திருக்கும் உப்பு, மிளகாய், பாற்குழம்பு, பலாக்காய் விதைச்சுண்டல் ஆகியவற்றுடன் சேர்த்து உண்ணும் உணவை மறக்க முடியாது. அந்தக் கலவையில் இருக்கும் அறுசுவையே காரணம்.

சமையல் அறையின் பலகைக் கதவுக்கு அலவாங்கு ஒன்றை குறுக்காக வைத்த என்சினா சுடர்விட்டெரியும் லாம்பு திரி ஒளியை ஊதி அணைத் தாள். இருளால் சூழப்பட்ட வீட்டுப்பகுதி பயமும் வெறுமையும் கொண்டது போல் சுத்தப்புவுக்கு உணர்த்தியது. “செதோறிஸ் பறை அடிப்பது அந்த சிறந்த ஐந்துக்காக? அவனுக்கு நோயும் துக்கமும் இல்லைப் போலும் அதனால் தான் இந்த வேலை” பறை ஒலி அவனுக்கு கேட்கவில்லை என்று நினைத்து என்சினா அவ்வாறு கூறியிருக்கக் கூடும் என்று அவன் நினைத் தான், ஆனால் அவன் அவ்வாறு பலமாக அடிப்பது அவனது காதுக்கு கேட்கும்படி அல்ல தனது உள்ளத் துக்கு என்பதை அவள் அறியாள்.

கட்சி அரசியல், ஊரையும் ஊர்மக்களையும் எவ்வாறான ஒழுக்கத்துக்கு இழுக்கிறது என்பதை சுத்தப்பு நினைத்துப் பார்த்தான்.

கட்சிபேதம் அரசியல் நடவடிக்கைகளுக்கு எல்லை போடாது விவசாயம் செய்து கொண்டிருக்கின்ற ஊர்மக்களின் உடலில் புதிய சிகப்பு, நீலம், பச்சை, ஊதா போன்ற பல்வேறு நிறங்களில் இரத்தம் ஊறுவது தேர்தல் நெருங்கி வரும் காலத்திலாகும். கடைப்பேலிகளில் வீட்டுத்தாழ்வாரங்களில் மேட்டுநிலங்களில் வழங்கப் படும் ஆயிரக்கணக்கான தேர்தல் வாக்குறுதிகளினால் பெருமிதம் அடைந்து வெற்றி என்ற இலக்கை நோக்கி கண்களையும் காதுகளையும் திறந்து கொண்டு ஒரு பக்கத்தில் உண்டு கொண்டு அவர்களுடன் மெதுவாக உரையாடியபின் அடுத்துவரும் இடத்தில் உறிஞ்சிப் பார்க்கலாமா என்று எண்ணி பார்ப்பது இந்த கால கட்டத்திலாகும். பெருவாய்க்காலில் இறங்கியது போல் இங்கு சொல்லப்படாத அனைத்து அரசியல் வாதபேதங் களும் எதிர்பார்ப்புக்களும் புதிய அரசாங்கம் தேர்ந் தெடுக்கப்பட்ட சில தினங்களில் மறைந்துவிடும்.

அன்று தன்னிடமிருந்த அரசியல் மனக்கசப்புக் காரணமாக மட்டுமே செதோறிஸ் தலையில் சித்துல் தடியால் அடிக்க முனைந்ததை சுத்தப்பு நினைத்துப் பார்த்தான். அல்லது கள்ளுக்கு அடிமையாகியிருந்த தனது பழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காகவா அது அவ்வாறு நடந்தது?

நினைவுள்ள நாள் முதல் செதோறிசுக்கும் தனக்கும் இடையில் தனிப்பட்ட கோபம் பெரிதாக நிலவியதில்லை. ஆனால் அவனது தலையில் கித்துல் பொல்லால் அடிக்க கை நீண்டது, காணி நிலம் சேனை வயல் போன்றவற்றைப் பிரித்துக் கொள்வதற்காக வில்லை, அரசியல் நாய்ச்சண்டையிடையே நாட்டை பிரிக்க முயற்சி செய்த குழப்பக்கார குழுவுக்கு வாழ்த்துத் தெரிவிக்க முயற்சித்த மூடத்தனத்துக்காகவே செதோறி எஸ்பிக்கு நன்றாக அடித்தது “தான் அல்ல கள்ளு சாராயம்” தான் என்று சமாதானம் செய்ய முயன்றான். ஆனால் செதோறிஸ்ஸூம் தானும் சண்டை சச்சரவில் ஈடுபட்டது இன்று நேற்று முதல் அல்ல

நேற்று இரவு விடிவதற்கு முன் ஆடிய நடனம் ஒரு கணத்தில் அவன் மனதில் தோன்றியது. ஊர் மக்களின் நல்வாழ்வுக்குப் பிரார்த்திப்பதற்காக ஊர் கூட்டுறவுச்சங்க நலன்விரும்பிகள் சங்கம் அதை ஏற்பாடு செய்திருந்தது, ஆனாலும் வாழ்நாளில் முதன்முதலாக சுத்தப்பு கண்ட நடன மேடையாக அது அமைந்தது. புதிய மாகாணசபை உறுப்பினரும் பங்குபற்றுவதால் எல்லா அமைப்புக்களும் பங்குபற்றுவதற்கு ஏற்பாடுகள்

செய்யப்பட்டிருந்தன. சுடர் ஏற்றப்பட்ட விளக்குப் பந்தத்தை இரு கைகளாலும் பிடித்துக்கொண்டு பறை மேளத்தின் தாளத்திற்கு ஏற்றவாறு தான் ஆடிய நடனத்தின் அற்புதத்தை அளந்து பார்ப்பதற்காக முகமூடியின் இரண்டு கண் ஓட்டைகளாலும் அங்கத்த வரின் முகத்தைக் கூர்ந்து நோக்கினான். அந்த முகத்தில் தோன்றிய மகிழ்ச்சியும் ஆனந்தமும் இவனது கால் களுக்கு புதிய சக்தியை வழங்கின.

முகமூடி நடனத்தினிடையே திடீர் என்று செதோறிஸின் ஞாபகம் வந்தமை தனக்கு ஏற்பட்ட பெரிய துரதிஷ்டம் என்று சுத்தப்பு எண்ணினான், வானத்தில் முகில்களுக்கிடையே ஆனந்தமாக பறந்து கொண்டிருந்த தான், திடீரென்று பூமியில் விழுந்தது செதோறிஸ் பற்றிய அந்த எண்ணத்திலாகும், ஒரு கோப்பையில் உண்டு ஒரே கிண்ணத்தில் குடித்து வாழ்ந்த அவனுக்கும் செதோறிஸிக்கும் இடையில் விரிசலை ஏற்படுத்தியது, இன்று இங்கு அமர்ந்திருக்கும் இந்த அங்கத்தவர்தான். புதுமை என்னவென்றால் அன்று தேர்தல் வேட்பாளராக இருந்த அவருக்கு அன்பராக இருந்தது தான் அல்ல செதோறிஸ் தான்,

தான் அன்று ஆதரவு வழங்கியது அங்கத்தவரின் எதிர்தரப்பில் இருந்த அபேட்சகருக்கே. நேற்று ஆடிய நடனத்தினிடையே பேய் முகத்தின் கண் இடைவெளி களால் தான் கண்ட காட்சியை நினைத்துப் பார்த்ததும் சுத்தப்புவின் மனம் வெட்கப்பட்டது தேவலேகத்தின் தருமமடைபத்தை நினைவு படுத்தும் வகையில் சோடிக்கப்பட்டிருந்த மேடையின் நடுவே ஆசனங் களில் அவர்கள் இருவரும் அமர்ந்திருந்தனர்.

அரசியல் போர்க்களத்தில் சண்டைச் சேவல் களை போல் விளங்கிய இருவருக்கும் இடையில் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் நட்புபற்றி நினைத்ததும் தனது முழு உடலும் விறைத்துப்போனது போன்ற உணவு ஏற்பட்டது, புதிய மாகாணசபை உறுப்பினருடன் இருந்த மற்றவர் எதிர்கட்சியின் தோல்வி அடைந்த வேட்பாளர்.

தேர்தல் சமயத்தில் தன் உயிரையும் வெறுத்து சண்டை செய்தது தோல்வி அடைந்த இந்த அங்கத்தவருக்காகவே என்பதையும் அவன் நினைத்துப் பார்த்தான். தன்னால் வீர வசனம் பேசப்பட்ட ஒருவர் ஆத்ம துரோகி என்று பொருள் கொள்வதற்கு உள்ளம் இடம் கொடுக்கவில்லை என்றாலும் அவர்கள் இருவரும் ஒரே மேடையில் தோன்றி ஒரே பக்கட்டில் சிகரட் பற்றவைக்கிறார்கள் என்பதைபார்க்கும் சந்தர்ப்பம் தனது கண்களுக்கு இன்று கிடைத்துள்ளது. அந்தக் கணத்தில் தனது இருகால்களும் செயலிழந்து முகமூடி நடனம் ஒரு நிமிஷம் தடுமாறியவிதம் சுத்தப்புவுக்கு நினைவில் வருகிறது. அந்த பறை ஒலி தவறாக ஒலித்ததால் அல்ல, உண்மையான முகமூடி நடனக் காரர்கள் தானா அல்லது அவர்களா என்று தெரிந்து கொள்ள முடியாமல் போனதுதான் காரணம்.

செதோறிஸின் வீரனுக்கும் தன்னைப் பிரிந்தவ னுக்கும் இடையில் தவறான நட்பு நிலவும் என்று தன்னைப் போலவே செதோறிஸ்ஸூம் என் நேரமும் எண்ணியிருக்க மாட்டான். தொண்டை கிழிய ஒருவருக்கொருவர் வசைமொழி பேசிக்கொண்டிருந்த இந்த இருவரும் இப்பொழுது ஒரு தீக்குச்சியால் சிகரட்டை பற்ற வைக்க முடியுமானால் செதோறிஸிக்கும் தனக்கும் இடையில் இன்னமும் இடைவெளி இருக்குமானால் அது பிரயோசனமற்ற செயலே.

ஓலைப்பந்தத்தை பற்ற வைத்துக் கொண்ட சுத்தப்பு என்சினாவுக்கு சொல்லாமலே முற்றத்துக்கு இறங்கினான். அவனது ஓலைப்பந்தம் இருளை நீக்கின. செதோறிஸின் பறை மேளம்கேட்ட திசையை நோக்கி வேகமாக நடந்தான்.

---

# இதயராசன் கவிதைகள்

**கால மாற்றம்**

வெப்பநிலை அழுத்தத்தில்
மண்டையோட்டின் ஜன்னல்
தானாகவே திறந்து கொண்டன:
முதன்முதலாக.
வெளியுலகத்தை எட்டிப்பார்த்தது
அதிகார மையத்தின்.
மூளை
இதுவரை காலமும்
புலன்வழி
புவனத்தை உணர்ந்தது :
புலம்பத்தொடங்கியது
அவரவர் வேலையை
அவரவர் பார்க்கவேண்டும்
வாலாடினால்
தலை பிசகுமென

**வெளிச்சம்**

மேலொன்றுமாய்.
கீழொன்றுமாய்.
பேதங்கள் ஓதி – அவை.
வேதங்கள் ஆனதால்
சூனிய வெளியில்
சூட்சுமம் புரியாமல்
அண்டத்தின் பரிணமிப்பும்.
பிண்டத்தின் உயிர்ப்பும்
இயற்பியல் இறைப்படி.
காலவெளியில்.
கற்பனையின் விருட்ஷங்கள்
அவரவர் விருப்பில்

# சலனம்

மா.சிவசோதி

"எப்பபார்... எனக்கு அறப்பும் பறப்பும் தான். அந்தக் கோதாரிவிழுந்த கடவுள் என்னைக் கொண்டு போய்ச் சேர்க்கானாம் இதுகளோட கிடந்து உத்தரிக்க விட்டுட்டான்."

என்று புறுபுறுத்தபடியே உடலைச் சூடேற்றும் வெயிலப் பொருட்படுத்தாதவளாக நடக்கிறாள் பரிமளம். காலையில் இருந்து மப்பும் மந்தாரமுமாக கோடி காட்டிய மேகங்கள் விலகி கதிரவன் தன் கரங்களை சற்று ஆக்ரோசமாகவே படரவிட்டிருக்கிறான். வெயிலின் ஊஷ்ணம் முகத்தை சுட்டெரித்து வியர்வை நெடி படர கால்கள் வேகமாக நடக்கின்றன.

போன தடவை பள்ளிக்கு வருமாறு அதிபர் அழைத்தபோது இருந்ததை விட இன்று கொஞ்சம் பதட்டமும், அதிகரிக்கச் செய்தே இருக்கின்றன. பாட சாலை வாசலை நெருங்க நெருங்க முகம் முழுதும் வியர்த்துக் கொண்டது. சீலைத் தலைப்பை எடுத்துத் துடைத்த படி வாசலை அடைந்த பரிமளம் நேராக அதிபரின் அலுவலகம் நோக்கி நடந்தாள்.

"ஆ... இஞ்ச வாங்கோ உங்களோட கதைக் கோணும்" அது தான் வரச் சொன்னான்... இதில நில்லுங்கோ என்று வகுப்பறையில் இருந்த பிள்ளை களிடம் சில வேலைகளைச் சொல்லிவிட்டு பாடப் பதிவையும் சுமந்தவளாக வந்தாள்.

"இண்டைக்கு இது மனுஷி என்ன சொல்லப் போதோ..." "ஹூ ம்... கடவுளே" என்று தனக்குள் கூறிக்கொண்டவளாக அதிபரின் பின்னால் நுழைகிறாள் பரிமளம்.

"இஞ்ச பாருங்கோ உங்கட பிள்ளைய நீங்கள் தான் கவனிக்கோணும்." என்று அதிபர் கூறவே.

பரிமளம் கைகளைத் தூக்கி கும்பிடுவது போல. "நான் என்ன செய்ய... அதுகள்ட வயித்த நிரப்ப நாய் படாப்பாடு நான் பட... இதுகள் எங்க என்ர சொல்ல கேக்குதுகள்" இந்தக் கிழவிய உதுகள் பேப்பட்டம் கட்டிப் போட்டு திரியுதுகள்" என்று பரிமளம் கூறிக்கொண்டே பிறங்கையால் கண்களைத் துடைத்தாள்" அப்போது தான் நானும் அலுவலகத்தினுள் நுழைகின்றேன்.

"ஓம் சேர்... வாங்கோ இவ தான். அந்தப் பிள்ளையின்ர பாதுகாவலர்"

ஆ... என்ன செய்யப் போறியள். பிள்ளையிட படிப்பில கவனம் செலுத்திறதில்லயோ... பிரச்சனை தெரியும் தானே என்று கண்டிப்புடன் கூறிக் கொள்கின்றேன்.

எனக்குள் இருக்கும் சுபாவம் என்னையும் மீறி இரக்கம் பீறிட்டுக் கிளம்புகிறது.

"இல்ல சேர்... என்ர குஞ்சுகள் ஒரு கரை சேர வேணும். இந்த ஒரு தடவ மன்னிச்சுப் போடுங்கோ..." என்று கண்களில் பொல பொல என்று துளிக்க அழத் தொடங்கினாள் பரிமளம். "சரி... சரி... அழாதேங்கோ முதல்ல ஒண்ட விளங்கோணும் எங்கட நன்மைக்கு சொல்லேல்ல பிறகு பிள்ளையின்ர எதிர்காலம் பாழாய்ப் போடும். இப்ப நாட்டுல நடக்கிற தெல்லாம் தெரியும் தானே" என்று முகத்தில் என்னையும் மீறி கடு கடுப்பை வரவழைத்துக் கொண்டே கூறுகின்றேன்.

"இஞ்ச பாருங்க இது தான் கடசியும் முதலுமாக இனி எந்த பிரச்சனையுமில்லாம இருக்கோணும் சரிதானே" என்று கண்டிப்பான தொனியில் கூறிவிட்டு "சரி... சரி போயிட்டு வாங்கோ"

என்று கூறிவிட்டு தன் சோலியை கவனிக்க தொடங்கினார் அதிபர்.

நான் குடு குடுவென நடந்து கொண்டிருக்கும் அறுபத்தைந்து வயதைக் கடந்து விட்ட பரிமளத்தையே பார்த்துக் கொண்டிருக்கின்றேன். வாழ்வின் ஒவ்வொரு ரணங்களையும் வலிகளையும் சுமந்தவளாக அவன் பின்னே அவள் நிழல் அவளைப் பற்றித் தொடர்கிறது. நான் கதிரையில் அமர்கின்றேன். என் மனம் வருந்திக் குமைகின்றது.

முதன் முதலில் நான் பரிமளத்தை கண்டது அன்று இடம்பெற்ற சந்திப்பின் போது தான். பாடசாலையின் முற்றத்தில் உள்ள வேப்ப மரத்தின் கீழ் நின்று கொண்டிருக்கின்றேன். சில மாதங்களுக்கு முன் பெய்த மழையினால் மரம் குளிர் பரப்பியிருந்தது.

"சேர்... சேர்" நான் பின்னால் திரும்புகிறேன். சுருக்கம் விழுந்த முகம். பற்கள் வீழ்ந்ததற்கு அடையாள மாகக் கன்னங்கள் உட் கவிந்திருந்தன. வெயிலைத் தின்று அவள் தேகம் கறுத்துக் கிடந்தன. இந்த வயதிலும் தன் கணவனிடம் கொண்ட பக்தியோ நெற்றி யில் பெரியதோர் குங்குமப் பொட்டு பரவிக்கிடந்தது.

"என்ன சொல்லுங்கோ..."

"நான் தான் காயத்திரிட அம்மம்மா..." என்று கூறியபடி நெளிகின்றாள்.

"ஓம்... சொல்லுங்கோ... பிள்ளை எப்பிடிப் படிக்குதோ சேர்"

"ம்... ம்... பரவாயில்லை இன்னும் கொஞ்சம் கவனம் எடுக்கோணும்"

ஓம் சேர்... ஓம் சேர் உங்களுக்கு எங்கட நிலமை

தெரியும் தானே... கொஞ்சம் புத்திமதிய சொல்லுங்க சேர்." என்ன சில நேரம் என்னட்ட ஒளிச்சுப் போடுவாள். இப்பிடி தான் சேர் என்ர மேளும். படிக்குற காலத்தில ஏமாத்திட்டா....

அவன் ஊர் பேர் தெரியாதவன். ஒரு மூண்டு நாலு வருஷம் இருந்தின. அப்புறம் அவயவ தங்கட வழியப் பாத்திட்டுப் போனாப்பில இந்த ரெண்டும் "பஞ்சாணும் குஞ்சுகள்" நான் நாய்ப்படாப்பாடு பட்டுத் தான் வளர்க்கிறன். இவர் ஒரு நல்லது எண்டதால அப்பனும் ஆத்தியும் விட்டுட்டு ஓட நாங்க வச்சுப் பாக்குறம்... என்று கண்களில் நீர் தெளிக்கப் பேசினாள். அதற்குள் நான் குறுக்கிட்டு

"ஏன்...? அவயட அப்பா, அம்மா கதைக்குற தில்லயோ..." என்றேன்.

"எங்க சேர்... கொதிப்பெடுத்த.... கழுதையள். எப்பவாச்சும் இருந்திட்டு பிள்ளையளெண்டும் எடுப்பினம். சில நேரம் அதுவுமில்லை எல்லாம் கடவுள் எழுதின எழுத்தல்லோ... என்று அழுத் தொடங்கினாள் பரிமளம். அதற்கு மேலும் தாமதித்தால் என் கண்களில் கண்ணீர் உகுத்துப்பாயும் என்ற உணர்வினால் "சரி... சரி.... உங்கட பேரப்பிள்ளையள் படிச்சு பின்னுக்கு உங்கள பாப்பினம் தானே..." என்று நான் ஆசுவாசப் படுத்துகிறேன்.

அப்போது இடைவேளைக்காக மணி அடிக் கிறது. சரி நீங்க போங்கோ நான் நல்ல புத்திமதி சொல்லி படிக்கச் சொல்லுறன் என்று கூறிவிட்டு வகுப்பறையை நோக்கி நடக்கிறேன். மறுநாள் நான் இடைவேளையின் போது காயத்திரியை அழைத்து ஒரு பெரும் கதாப் பிரசங்கம் நடாத்தி முடித்தேன். நான் கேட்டது யாவுக்கும் அவள் புரிந்து கொண்டதற்கு அத்தாட்சியாக தலையாட்டினாளே தவிர வேறு பேச்சில்லை அன்றைக்கு பிறகு அவள் என்னைப் பார்க்கின்ற தோரணையில் புரிந்தது நான் கூறிய எதுவும் அவளுக்குப் பிடிக்கவில்லை. என்றே எனக்கு தோன்றியது. இப்போ தெல்லாம் அட்வைஸ் பண்ணுவதே அபத்தமானது என்ற நிலை தானே. மறுபடியும் பரிமளம் சில மாதம் கடந்து இன்று வந்திருந்தாள்.

நான் கதிரையில் அமர்ந்தபடி கட்டுண்டு கிடந்த என்னை விடுவிக்க பிரயாசைப்படுகின்றேன். மறுபடி மறுபடி நான் குமைந்து போகிறேன்.

மழை மேகங்கள் இடைவிடாமல் மூடிக் கொண்டிருந்தன. காற்று சற்றுப் பலமாக வீசத் தொடங்கி இருந்தது. அப்போது தான் களைத்துப்போய் சைக்கிளை வேலியோடு சாத்திவிட்டு தள்ளாடியபடி நடக்கிறான் சிவராசன்...

என்ன உது இண்டைக்கும் குடிச்சிப் போட்டியே... நாளைக்கு பெடியளுக்கு உடுப்புத்தச்ச காசு குடுக்கோணுமல்லே. அதுக்கிடயில வாத்துப் போட்டு வந்திட்டியே ச்சீ... என்று முகத்த சுழித்துக் கொண்டாள் பரிமளம்.

எந்த சலனமுமின்றி சேர்ட்டை கழற்றி யன்னலில் செருகினான். "பின்னப் பாரன் நான் கதைக்கிறன் வாயத்திறந்து ஒரு வாத்தை பேசுதே..."

"என்ன பிறப்போ. இந்த வயதிலயும் இப்பிடிக் குடிச்சுத் திரியிறா..." வாய்க்கு வந்ததை வாயிலிருந்து கொட்டிக் கொண்டிருந்தாள் பரிமளம்.

"அம்மம்மா... நாளைக்கு எனக்கு ரெண்டு கொப்பி வேணும் பள்ளிக் கூடம் போகேக்க.... என்று கேட்டாள் காயத்திரி.

ஓம்... ஓம் வாங்கித் தாறன். இப்ப போய் படியன். உதில அப்புவோட நிண்டு தனகாமா.

"பிள்ளை... இஞ்சவான இதில நேற்று தைலம் வைச்சன். காணேல்ல ஒருக்காப் பார்"

"இந்தக் கிழடு இப்பிடித்தான் வைக்கிறது வச்சிட்ட அதுக்கயும் இதுக்கயும் தேடும்." என்று முணு முணுத்தபடி எடுத்து நீட்டினாள்.

"இஞ்சரன... இஞ்சரன..." என்று பரிமளம் சிவராசனை கூப்பிட்டாள்.

என்னப்பா... என்ன சும்மா இரன். ஒரே பொரிஞ்சு கொண்டிருக்கிறாய். இல்லையப்பா கடைக் காசு குடுத்தனியே நாளைக்கு காலைச் சாப்பாட்ட கடையில வாங்கிக் குடுக்கலாம் அது தான். பின்ன சும்மா நான் ஆக்கினப் படுத்திறனே.

"ஓம்... ஓம் குடுத்தனான். ஒரு ஒண்டரப் போத்தல் கள்ளுப் போக மிச்சம் உந்தப் பொக்கற்றுக் குள்ள கிடக்கு."

"என்னப்பா... என்ன சொல்லுற" நாளைக்கு அதுகளட்ட கொப்பிய வாங்கிக் குடுக்கலா மெண்டெல்லோ நான் கேக்கிறன்.

"ஓமடி... நான்... இப்பிடி மாடு மாதிரி திரிஞ்சு அஞ்சப் பத்த கொண்டந்தா. நீ உன்ர பேரப்பிள்ளை யளுக்கு குடுத்து அழிக்கிறா" என்று வாய்க்குள் வந்ததை உளறிக் கொண்டிருந்தான்.

"ஏன் அதுகள் எனக்கு மட்டுமே பேரப் பிள்ளையள் உனக்கும் தானே." என்றாள் பரிமளம். வார்த்தைகள் கொஞ்சம் பலமாக வெளியே வந்து விழத் தொடங்கியிருந்தன.

"ச்சீ... இந்த காத்து அடுப்ப விடாம நூத்துக் கொண்டு கிடக்குது. இதுக்கொரு மறைப்ப கட்டச் சொல்லி எத்தின நாள். எங்க என்ர சொல்ல ஆர் கேட்கினம்." என்று பரிமளம் வாயில் வந்ததை தள்ளிக் கொண்டே இருந்தார்.

"ஏனடி உன்ர பிள்ளையள் தானே..." என்ர பிள்ளையள் எண்டால் உப்பிடிச் செய்யுங்களே.


"உனக்குப் பிறக்காம வேற யாருக்கோ பிறந்தது களே என்ன கத கதைக்கிறாய். அங்கால பெடிபெட்ட இருக்கெல்லோ.

"ஓமடி எனக்குப் பிறக்கேல்ல இதுகள்..."

நிசப்தம் காற்று சற்றுப் பலமாக வீசியது. கூரைத் தகரங்கள் காற்றில் பட படவென அடித்து ஓய்ந்தது. விளக்கு அணைந்தது. எங்கும் இருட்டு. இருட்டு கவிழ்ந் தது. பரிமளம் விளக்கை கொழுத்த முயற்சி செய்கிறாள். அதுவும் அணைந்தபடியே இருக்கிறது இனித்தாலும் கசந்தாலும் எரியும் அவள் வாழ்வென்ற விளக்கும் இன்று முதல் முறையாய் அணைந்து தான் போனது.

ஜெ.கீர்த்திகா

# உளவியலின் காலக் கண்ணாடி “நான்”




இலங்கையில் இருந்து பல தசாப்தங்களாக தமிழ் மொழியில் வெளிவருகின்ற உளவியல் சஞ்சிகையாக “நான்” சஞ்சிகை அமைகின்றது. இச் சஞ்சிகை 1975ம் ஆண்டு கண்டி அம்பிட்டிய அமலமரித்தியாகிகள் குரு மடத்தில் அருட்கலாநிதி வின்சன்ற் பற்றிக் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. யாழ் அமலமரித் தியாகிகள் சபையினதும், “டி மசனட்” இறையிலகத்தினதும் தலைமைத்துவத்தின் கீழ் இச் சஞ்சிகை இயங்கி வருகின்றது. “நான் வளர்ந்தால் நாம் வளர்வோம்” என்பதை தன் இதழின் வாசகமாகக் கொண்டிருந்தது.

முதலில் இவ் இதழ் இருமாத இதழாக வெளியிடப் பட்டிருந்தது. பிற்காலத்தில் காலமாற்றத்திற்குகேற்ப காலாண்டு இதழாகவும் வெளிவந்திருந்தது. இவ் இதழ் வெளியீட்டின் ஆரம்ப காலத்தில் உளவியலை மையப் படுத்திய ஆக்கங்களைக் பொதுவாகக் கொண்டு வெளியிடப்பட்ட போதும் ஒரு சில ஆண்டுகளின் பின்னர் ஒரு கருவை மையப்படுத்திய சிறப்பிதழாக வெளியிடப் பட்டிருந்தது. எடுத்துக்காட்டாக 1982 ஐப்பசி – புரட்டாதி இதழ் போதைப்பொருள் சிறப்பிதழாகவும், 1984 பங்குனி – சித்திரை இதழ் குழந்தைப்பருவ சிறப்பிதழாகவும், 1984 புரட்டாதி –ஐப்பசி இதழ் குடும்பம் சிறப்பிதழாகவும், 2004 ஆடி – ஆவணி இதழ் பணிவு சிறப்பிதழாகவும், 1984 கார்த்திகை மார்கழி இதழ் முதுமைச் சிறப்பிதழாகவும், 2000 சித்திரை – ஆனி இதழ் தீர்மானங்கள் சிறப்பிதழாகவும், 2021 வைகாசி – ஆவணி இதழ் கொரோனாக் காலச் சிறப்பிதழாகவும் வெளிவந்தது. ஆழிப்பேரலை அனர்த்தத்தின் ஒராண்டு நினைவாக “மீண்டும் எழுவோம்” என்ற தலைப்பில் வெளிவந்ததும் குறிப்பிடத்தக்கததாகும்.

இவ் உளவியல் மஞ்சரி கிட்டத்தட்ட நான்கு தசாப்தங்களுக்கு மேல் வெளியாகியிருந்தது. கால மாற்றத்தினைப் போல வெவ்வேறு இடங்களிலிருந்தும், வெவ்வேறுபட்ட ஆசிரியர்களின் தலைமையின் கீழும் வெளிவந்து கொண்டிருந்தது. இச் சஞ்சிகை சமூக உளவியல், ஆளுமை உளவியல், மருத்துவமுறை உளவியல், தொழில்முறை உளவியல், ஆன்மீக உளவியல், உளவளத்துணை உளவியல், கல்வி உளவியல், வளர்ச்சிமுறை உளவியல், பள்ளி உளவியல், உளக் கூற்று உளவியல் என உளவியலின் பல வகை சார்ந்த ஆக்கங்களை உள்வாங்கியிருந்தது. வைத்தியர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், அருட்தந்தையர்கள், இலக்கியப் படைப்பாளிகள், சமூக ஆர்வலர்கள், உளவளத் துணையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆய்வாளர்கள் எனப் பலதரப்பட்டோரும் இச் சஞ்சிகையின் வளர்ச்சிக்காக எழுதியிருக்கிறார்கள்.

இச் சஞ்சிகை ஒரு மனிதனை சராசரியாகப் படம் பிடித்துக் காட்டுவது மட்டுமன்றி அவனது உணர்வுகள், அவனது சிந்தனைகள் மற்றும் செயல்கள், அதற்கான காரணங்கள் என அவனை ஆரோக்கியமான வாழ்க்கைக்குள் கொண்டு செல்லவும், ஆரோக்கியமான சூழலை உருவாக்கவும் ஆராக்கியமான எதிர் காலத்தை அமைத்து அவனது தலைமுறையை முறையாக வழிப்படுத்தவும் இச் சஞ்சிகை வழிவகுத்துள்ளது. கட்டுரைகள், கடிதங்கள், சிறுகதைகள், வாசகர் அறிமுகம், கேள்விக்குப்பதில், வாசகர் பூங்கா, நேர் காணல்கள், அனுபவச் சிதறல்கள், தத்துவக்கருத்துக்கள், உரையாடல்கள், ஆசானின் பதில்கள், கருத்துக் குவியல், உளவியற் தேர்வு, திரைப்படத் திறனாய்வு, பேனா நண்பர் பகுதி, பொது அறிவுப் பெட்டகம், உளவியல் கல்வி, சுமைதாங்கி, நூல்அறிமுகம், கவிச்சோலை என பல்வகைப்பட்ட பகுதிகளை உள்வாங்கி தடம் பதித்தது.

இவ் உளவியல் மஞ்சரி சிந்தனைக்குரிய பல காத்திரமான அறிவியல் சார்ந்த உளவியல் கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகள் தாங்கிக் வெளிவந்தது. “வாழும் தெய்வங்கள்”, “மனித செயற்பாடுகள்”, “நெறிபிறழ்வு”, “வாழ்க்கை வட்டம்”, “நினைவாற்றல்”, “உள்ளத்தில் உள்ளது உயர்வு”, “நாளை வளரும் பிள்ளைகளே மனோவசியம்”, “நேரிய நோக்கோடு வாழ்வது எப்படி,

“உணர்ச்சியும் உளப்பாங்குகளும்”, “உள்ளத்தின் ஒருமைப்பாடு”, “வெற்றியின் சின்னம்”, “இலட்சியம் இன்றியமையாதது”, “மனித பருவ காலங்கள்”, “சமுதாய சுபீட்சத்தில் குடும்பத்தின் பண்பு” , “எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான்”, “சிறுவர்களது மனித உரிமைகளை மேம்படுத்தல்”, “ஒரு குழந்தை மனிதன் ஆகின்றது” என்பன அவற்றுட் சிலவாகும்.

வாசகர்களின் வினாக்களுக்கு விடையளிப்பதாக “நான் தரும் பதில் ” என்ற பகுதி அமைந்திருந்தது. இதில் பல்வேறுபட்ட மக்களின் மனச்சிக்கல்கள், அவர்களது சந்தேகங்கள், உள உணர்ச்சிகளின் விடை காண முடியாத புதிர்களுக்கு ஆழமான கருத்துக்களுடன் விளக்கம் தருவதாக விடையளிப்பதாகவும் அமைந்தது. கருத்துக் குவியல் என்ற பகுதி மூலம் பலரின் உளக் கருத்துக் களுக்கு எழுத்து வடிவம் கொடுக்கப்பட்டது. குறிப்பிட்ட தலைப்பை ஒரு இதழில் வாசகர்களுக்கு வழங்கி இத் தலைப்புத் தொடர்பில் எழுதி அனுப்பப்படும் வாசகர் களின் உளகருத்துக்கள் மறு இதழில் பிரசுரிக்கப்பட்டது. “தவறுகள் தண்டனைக்குரியவையா?”, “மனிதனும் சமுதாயமும்”, “சந்தேகப் பேர் வழிகள் ஆண்களா? பெண் களா?”, “கல்வியின் நோக்கு பொருளீட்டலா? பொதுப் பணியா?” , “இயற்கையாகவே பெண்கள் பயந்த சுபாவம் உடையவர்கள்”, “தொலைக்காட்சி சமூகத்திற்கு சாதக மானதா, பாதகமானதா?” “சீதனப் பிரச்சினைக்கு தீர்வு காதல் திருமணமே” என்பன அவற்றுட் சிலவாகும்.

நேர்காணல்கள் என்ற பகுதியில் பல ஆளுமை களிடம் உளவியல் தொடர்பில் சந்திப்புக்கள் மேற் கொள்ளப்பட்டு அவையும் இதில் உள்ளடக்கப் பட்டிருந்தது. அருட்திரு பீற்றர் பர்னாந்து அடிகளார், கோகிலா மகேந்திரன், அருட்சகோதரி கிறிஸ்ரபெல, அருட்திரு வின்சன் பற்றிக் போன்றோர் நேர்காணல்கள் மேற்கொள்ளப்பட்டோரில் சிலராவர். இவர்களிடம் உளவியல் உண்மைகள், உளவியல் தொடர்பான யதார்த்தங்கள், அறிவுரைகளைப் பெற்று இதன் மூலம் வழங்கியிருந்தது. காலத்தின் தேவைகளை கவனத்தில் கொண்ட இச் சஞ்சிகையானது திரைப்படத் திறனாய்வு என்ற பகுதியை தனக்குள் உள்வாங்கி வித்தியாசமான கோணத்தில் பதிவு செய்தது. இதில் மக்களின் இரசனையை மட்டுமல்லாது ஆரோக்கியமான சிந்தனைகளையும் எண்ணங்களையும், சமுதாய உணர்வை வளர்க்கத் துணைபுரியும் படங்களை திறனாய்வுக்கு உட்படுத்திய ஆக்கங்களை வெளிப் படுத்தியிருந்தது.

உளவியலாளர்களின் வரிசையில்... என்ற பகுதி யூடாக உளவியலாளர்கள், அவர்களின் சிந்தனைகள், கோட்பாடுகள் அவற்றின் விளக்கங்களுடன் வெளி வந்திருந்தது. 1990ம் ஆண்டு வைகாசி ஆனி பிரசுரம் வரை மேலைநாட்டு உளவியலாளர்களை அறிமுகப் படுத்தியது. அதனைத் தொடர்ந்து உலக உளவியல் புலத்திற்கு பங்களிப்புச் செய்த நம் நாட்டு உளவிய லாளர்களையும் அவர்களது கோட்பாடுகளையும் அறிமுகப்படுத்தியது. அந்தவகையில் 1990ம் ஆண்டு வைகாசி ஆனி பிரசுரத்தில் கலாநிதி சபா.ஜெயராசாவை யும் அவரது உளவியல் கோட்பாட்டையும் இவ் இதழில் அறிமுகப்படுத்தியது. அத்துடன் பெர்னாட்ஷா, ஜான்ஷன், விக்கர் பிராங், மாக்சிம் கோர்க்கி, ஐசக் டெல்லர், டி.எஸ்.கோல்ரிட்ஜ் போன்ற பல அறிஞர்கள், மேதைகளின் உளவியல் வாசகங்கள் வாசகர்களிற்காக பகிரப்பட்டது மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

மனிதன் தனித்தீவு அன்று. அவன் ஏனையவர் களுடன் உறவை, தொடர்பை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு அறிவு மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள பேனா நண்பர் பகுதி 1983ம் ஆண்டின் கார்த்திகை – மார்கழி இதழில் இருந்து இப் பகுதி அறிமுகமாக்கப்பட்டது. பேனா நண்பர்களின் விபரங்கள், அவர்களின் தொடர்புக்கான முகவரியையும் தன் இதழில் பிரசுரித்திருந்தது. வாசகர் அறிமுகம் என்ற பகுதியினூடாக வாசகர்களினை அறிமுகப்படுத்தியதுடன், அவர்கள் பகிர்ந்து கொள்ள விரும்பும் கருத்துக்கள், தமக்குக் கிடைத்த வாசக அனுபவங்கள் இதில் எழுத்துக்களாக்கப்பட்டுள்ளது.

போர்க்காலச் சூழல் தோற்றம் பெற்றிருந்த காலப் பகுதிகளில் வாசகர்களின் துன்பங்களுக்கு, கவலை களுக்கு ஆறுதலளிப்பவையாகவும், தேற்றுவதாகவும் ஆக்கங்களை உள்வாங்கியிருந்ததும் குறிப்பிட்டுக் கூற வேண்டியதாகும். “இழப்பின் துயர்” “சிறுவர்களிடையே போரின் தாக்கமும் சீர்ப்படுத்தும் முறைகளும்” , “இழப்புக்கள்”, “குடும்ப உறவுகளைச் சீர்குலைக்கும் போர்”, போரின் வடுக்களும் சமூகமும்”, “போரின் தாக்கங்களும் தீர்வுக்கான சில வழிகளும்” போன்றன வற்றை எடுத்துக்காட்டாக கூறலாம். இவ்வாறாக சமுதாயத்தின் போக்கில் மனித உணர்வுகளைப் புரிந்து கொண்டு சமூகத்தின் மேம்பாட்டுக்காக உழைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தது.

வாசகர் பூங்காவினூடாக வாசகர்களின் பாராட்டுக்கள், கருத்துக்களுக்கள் மட்டுமன்றி, அவர் களால் முன்வைக்கப்படும் நிறை குறைகள் என எல்லா வற்றிற்கும் மதிப்பளித்து அவற்றையும் இச்சஞ்சிகையின் ஒரு பகுதி ஆக்கப்பட்டது. மறைந்திருக்கும் ஒவ்வொரு மாணவர்களின் திறமைகளையும், ஆற்றல்களையும் வெளிக்கொணர்ந்து மாணவர்களின் வளர்ச்சியில் பங்கெடுக்கும் வகையில் மாணவர் பூங்கா எனும் பகுதி 1999 தை பங்குனி இதழிலிருந்து அறிமுகப்படுத்தப் பட்டது. இப்பகுதி கட்டுரை, புதிர்ப்பக்கம், ஆலோ சனைப் பகுதியை உள்ளடக்கியிருந்தது. கவிச்சோலைப் பகுதியினூடாக கவிதைகளையும் உள்வாங்கியதுடன் சமூக உளவியல் விழிப்பூட்டும் நூல்களை அறிமுகம் செய்வதற்காக நூல் அறிமுகம் என்ற பகுதியை வாசகர் களுக்கு 2007 சித்திரை ஆனி இதழிலிருந்து அறிமுகப் படுத்தியது.

வாசர்களுக்காக விளக்கப்போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதையரங்கப் போட்டி, குறுக்கெழுத்துப் போட்டி, நாவல் போட்டி என்பன நடாத்தப்பட்டது. அதில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்

பட்டதுடன் அவர்களின் பெயர்களும் இச் சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டது. அதேபோல் அட்டைப்படத்திற்கான விளக்கத்தினையும் வாசகர்களிடமிருந்து பெற்றதுடன் அதில் சிறந்த விளக்கத்தைப் பெற்ற வாசகரின் ஆக்கம் பாராட்டுதல்களுடன் இச் சஞ்சிகையில் பதிவு செய்யப் பட்டது.

இச் சஞ்சிகை சார்பில் கருத்தரங்குகளையும் நடாத்தியது மட்டுமல்லாது எழுத்தாளர் பட்டறை களையும் நடாத்தியது. எழுத்துத்துறையில் ஆர்வ முள்ள இளைஞர்கள், யுவதிகள், புதிய எழுத்தாளர் களுக்காக இரண்டு நாள் எழுத்தாளர் பட்டறையை நிகழ்த்தி வாசகர்களும் எழுத்தாளர்களாகும் வாய்ப்பை ஏற்படுத்தியது எனலாம். காலப்போக்கில் மாதம் ஓர் உளவியல் ஆய்வரங்கையும் நடாத்தி உள ஆலோசகர் களின் சிறப்புரைகளும், உளவியல் கருத்துப் பரிமாற்றங் களையும், வாசகர்களின் எதிர்பார்ப்புக்களையும், சிந்தனைகளையும் பகிர்ந்து கொள்ள வழிசமைத்தது. இச் சஞ்சிகைக்கு ஆக்கங்களை எழுதி அனுப்பிய வாசகர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வுகளையும் ஒழுங்கமைத்த நடாத்தியிருந்தது.

நிகழ்வுகளின் பதிவுகள் என்ற பகுதியூடாக வாசகர்களின் பகுதிகளில் இடம்பெற்ற உளநல பணி களை, நிகழ்வுகளை பதிவுகளாக்கும் வகையில் நிழல் படங்களையும், செய்திகளையும் பெற்று பிரசுரித்தது. உளவியல் தொடர்பாக நடைபெற்ற கருத்தரங்குகள், கருத்துரைகள் தொடர்பான விபரங்களையும் சிறு குறிப்பாக தன்னுள் பதிவு செய்திருந்தது. மேலும் இதனூ டாக உளவளத்துணை நிலையங்கள் அவற்றின் முகவரிகளையும் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தியது.

இவ் இதழ் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து மிகவும் சாதுரியமாக வளர்ச்சியைப் பெற்றிருந்தது. அதன் பக்க எண்ணிக்கை மற்றும் உள்ளடக்கத்தினை தரம் மிக்க பகுதிகளை கால மாற்றத்திற்கு ஏற்ப விரி வாக்கிக் கொண்டது. பக்க வடிவமைப்பு பற்றி நோக்கும் போது ஆரம்பத்தில் மிகக் குறைந்த பக்கங்களுடன் வெளிவந்த போதும் பிற்காலத்தில் 50 பக்கங்களிற்கு மேல் உள்ளடக்கத்தை கொண்டு வெளிவந்தது. இதழின் இரண்டாவது பக்கம் உள்ளடக்க விபரம் மற்றும் மலர்க்குழு பற்றிய விபரங்களைப் பதிவேற்றியிருந்தது. அத்துடன் எழுத்தாக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரியையும் தன் முதலிரு பக்கங்களில் உள்வாங்கி யிருந்தது. தனது மூன்றாவது பக்கத்தில் நானின் சிறப்பிதழ் மையப்படுத்துகின்ற தலைப்பு தொடர்பாக ஆசிரியர் தன் கருத்தை தவறாது பதிவு செய்திருந்தார்.

வாசகர்களிடமிருந்து ஆக்கங்களைப் பெறுவதற் காகவும், வாசகர்களின் ஆர்வத்தினைத் தூண்டுவதற் காகவும் எதிர்காலத்தில் வெளியிடப்போகும் சிறப்பிதழ் களின் தலைப்பினை முன்பே தெரிவு செய்து இவை தொடர்பான ஆக்கங்களை எழுதி அனுப்பும்படி கோரி வாசகர்களை ஊக்குவித்து தரம் குன்றா உளவியல் ஏடாக வெளிவந்தது. இலங்கையில் மட்டுமல்லாது வெளிநாடு களிலிருந்து தன் வரவினால் வாசகர்களைக் கவர்ந் திருந்தது. அத்துடன் வாசகர்களை இலகுவில் சென்ற டைவதற்கான வழிவகைகளையும், வாசகர் களை சஞ்சிகை சென்றடைவது தொடர்பான விடயங்களில் மிகவும் அக்கறையுடன் செயற்பட்டது.

மனித சமுதாய விழிப்புணர்ச்சிக்கு ஆற்றுப் படுத்துகின்ற ஏடாக மலர்ந்த இவ் இதழ் ஏனைய இதழ் களைப்போல் வாசிப்பதற்காக மட்டும் பயன்படுத்தப் படாது வாழ்க்கைக்கும் பயன்படுத்தும் வகையில் அமையப் பெற்றிருந்தது. ஈழத்தில் இருந்து வெளியாகி மல்லிகை, தாயகம், தாரகை, சிரித்திரன், களம் போன்ற பல சஞ்சிகைகளிலிருந்தும் வேறுபட்ட விதத்தில் உளவியல் ரீதியான சமூக அணுகுமுறைகளுடன் தனித்துவமான இடத்தைப் பிடித்திருக்கின்றது என்பதனை மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

---

# கனவுகள் தொடருமோ

ஈரெட்டு வயதினிலே
ஏறெடுத்துப் பார்த்தவனும்,
இதயத்தினுள் குடிபுகுந்து
இன்னிசை பகிர்ந்தாலும்,

பொன்னோடு பொருட்களும்
போதாதென்று வேறிடந்தேடி
எறிந்திடுவான் கன்னலையுமே!
கண்ணீரில் கரைந்திடவே!

ஆறாறு அகவை வரை
யார் யாரோ பெண் பார்த்துப்,
போதாது பொருளென்று,
புறந்தள்ளிப் போயிடவே!

ஈன்றோரும் ஊரெங்கும்
மகளுக்குத் துணைதேடி
நோயாகிப் பாயாகிடக்,
கன்னியின் வண்ணமான
கனவுகளும் கரைந்திடும்!
உள்ளத்து உணர்வுகளும்
ஆழத்தில் கொதித்திடுமே!

கல்யாணச் சந்தையிலே
மணவாளனின் விலையேற
மங்கையும் மனமுருகுவாள்
கண்களும் கங்கையிடவே!

மீட்டாத வீணையென
முடங்கிக் கிடக்கையில்
ஈட்டியாய்த் தாக்கிடும்
ஊராரின் வார்த்தைகள் !
சட்டென்று நின்றிடுமோ
நற்செய்தி கிட்டிடுமோ!

என்றெண்ணி மூச்சிடும்
முதிர்கன்னி வேதனையின்
வெப்பமது மேதினியில்
யாரைத்தான் சுட்டிடுமோ!
கன்னியவள் கல்யாணக்
கனவுகளும் தொடர்ந்திடுமோ!

**கிண்ணியா சபீனா**
**மாஞ்சோலை.**

ஷெல்லிதாசன்

# மூன்றாம் தலைமுறை...!

கவிஞர் தெய்வேந்திரா

வழக்கத்துக்கு மாறாக அன்று மிகுந்த மகிழ்ச்சியில் திளைத்திருந்தார்.

தான் எழுதி அண்மையில் வெளியிட்டிருந்த சிறுவர்பாடல் நூலுக்கு இப்படியொரு விமர்சனமும், பாராட்டும் கிடைக்குமென அவர் எதிர்பார்க்கவே இல்லை.

கலாநிதி பாலேந்திரா தனது கைப்பட எழுதி கவிஞரின் முகவரிக்கு அந்தப் பாராட்டுமடலை அனுப்பியிருந்தார். அன்றைய தபாலில் வந்த அந்தப் பாராட்டுமடலை வாசித்த கவிஞருக்கு

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்...."

என்ற வள்ளுவனின் முகந்தான் தரிசனந்தந்தது.

"தங்களது, "சிந்துபாடும் சிட்டுக்கள்" சிறுவர் பாடல் நூலை வாசித்தேன். சந்தம், ஓசை நயம், புதுமையான கருத்துக்கள் செறிந்தனவாக அதன் ஒவ்வொரு பாடல்களும் அமைந்திருந்தன. பாரதியின், பட்டுக்கோட்டையின், நம்ம நவாலியூராரின், வேந்தனாரின் பாடல்களுக்கு நிகராக தங்களது பாடல்களும் சிறப்பாக இருந்தன. இதுவெல்லாம் பொய்யுரையோ புனைகதையோ அல்ல. சில பாடல்களை குறிப்பிட்டு எழுதலாமென எண்ணினேன் ஆயினும் எதைக்கூறுவது எதைவிடுவது? ஏதோ ஒருவிதத்தில் அத்தனை பாடல்களும் மிக மிக அருமையிலும் அருமை. வாழ்த்துக்கள்"

இலக்கிய உலகில் "நக்கீரர்" எனப் பேசப்படும் விமர்சகர் கலாநிதி பாலேந்திரா. எந்த இலக்கிய ஜம்பவான்களின் படைப்புக்களையும் அக்குவேறு ஆணி வேறாக விமர்சிப்பவர். பல எழுத்தாளர் கவிஞர்களுக்கு சிம்மசொற்பனமாகவும் தென்பட்டுவந்தார். அப்படியான ஒருவரிடமிருந்து பாராட்டுப் பெறுவதென்பது வசிட்டர் வாயால் வாழ்த்துப்பெறுவது போன்றதாகும்.

"என்னப்பா ஒரு கடிதத்தையே மணித்தியாலக் கணக்கா திருப்பித் திருப்பி வாசிச்சுக்கொண்டிருக்கிறியள்?"

"உனக்கெங்கை இதின்ரை அருமை தெரியப் போகுது. வேணுமெண்டா இதைத்தாறன் வாசிச்சுப் பாரப்பா" என தனது கையிலிருந்த கடிதத்தை மனைவியிடம் கொடுத்தார் அவர்.

அதை வாங்கி வாசித்த மனைவி பொன்னுமணி

"ஆரோ ஒருத்தர் உங்களுக்கு ஐஸ் வைச்சிருக்கிறார். நீங்களும் போயும் போயும் அதுகளை வாசிச்சு மயங்கிப்போனியள். ஒரு வரிசம் ரண்டு வரிசத்துக் கொருக்கா கையிலை சேந்த காசுகளுக்கு புத்தகங்கள் வெளியிட்டு காசுகளை வீணடிக்கிறதை விட்டிட்டு உருப்படியா எதையாவது செய்யப்பாருங்கோ. இனி என்ன உந்தப் பாராட்டுக்களே காணுமே உங்களுக்கு அடுத்த புத்தகம் வெளியிடுறதுக்கு. நீங்களும் உங்கடை கண்டறியாத இலக்கியமும் கத்தரிக்காயும்" என பொரிஞ்சு தள்ளினாள் கவிஞரின் சகதர்மினி

"இஞ்சையப்பா... கழுதைக்குத் தெரியுமே கற்பூர வாசனை. அதுமாதிரித்தான் என்ரை எழுத்தும் இலக்கியமும் உனக்கு... இஞ்சை கொண்டுவா அந்தக் கடிதத்தை."

மனைவிமேல் கோபம் கொண்டவராக கவிஞர் கடிதத்தை மனைவியிடமிருந்து பறித்தெடுத்து மீண்டும் அதையே பார்த்துக்கொண்டிருந்தார்.

மனைவி பொன்னுமணிக்கு அதைப்பார்த்துச் சகிக்கமுடியாது முகத்தை ஒரு வெட்டுவெட்டிக் கொண்டு சமையலறைக்குள் நுழைந்தாள்.

கவிதை, சிறுகதை என எழுதி அவற்றை நூலாக வெளியிட்ட தெய்வேந்திராவுக்கு பல நாட்களாக ஒரு ஆசை. அதுதான் சிறுவர் பாடல் நூலொன்றை வெளியிடுவது. அந்த ஆசையை நிறைவேற்றுவதற்காக அன்றாடம் அவர் பல சிறுவர்பாடல்களை எழுதுவதுடன் அவற்றை பத்திரிகைகள் சஞ்சிகைகளுக்கும் அனுப்பிவந்தார்.அவற்றை வாசித்த பல இலக்கிய நண்பர்கள் அவற்றைப் பாராட்டவும் செய்தனர்.

அதனால் சிறுவர் இலக்கிய ஆர்வம் அவரிடம் மேலோங்கியதுடன் அந்தப் பாடல்களை நூலாக வெளியிடவேண்டுமென்ற ஆர்வம் மேலிட்டதால் அவற்றைத் தொகுத்து "சிந்துபாடும் சிட்டுக்கள்" என்ற பெயரில் நூலாக்கி பல இலக்கிய ஜம்பவான்களை

வரவழைத்து வெகு சிறப்பாக அதனை வெளியிட்டு தனது ஆர்வத்தை நிறைவேற்றிக்கொண்டார்.

இவரது பாடல்கள் சிறுவர்களுக்கு மிகவும் உகந்ததாக அமைந்திருந்ததால் பல முன்பள்ளிகள் ஆரம்பவகுப்புப்பள்ளிகளும் அதனை விலைகொடுத்து வாங்கிய தன்மை கவிஞருக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தன.

இப்படி பலரினதும் பாராட்டைப்பெற்ற நூலுக்கே பேராசிரியர் பாலேந்திரா பாராட்டுச்சான்றிதழ் வழங்கி யிருந்தார்.

ஊரெல்லாம் போற்றும் தனது சிறுவர் பாடல்களை தனது பேரப்பிள்ளைகளும் படித்து மனனம் செய்து ஆசையாசையாக பாடவேண்டுமென ஒரு ஆதங்கம் கவிஞரின் மனசில் எழுவதில் என்ன தவறுண்டு.?

கவிஞருக்கு இருபிள்ளைகள். மூத்த மகன் ஆதவன் திருமணம்செய்து பிரான்சில் வசிக்கின்றான். அவனுக்கு இரு பிள்ளைகள். மூத்தபிள்ளை ஆறாம் வகுப்பும் இளையவள் நாலாம் வகுப்பிலும் பயில் கின்றனர்.

அதேபோல கவிஞரின் இளைய மகள் அபிராமி கொழும்பில் கணவர் பிள்ளைகளுடன் வசிக்கிறாள். கணவனும் மனைவியும் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் வைத்தியர்களாக பணிபுரிகின்றனர். அவர்களுக்கு இரண்டு ஆண்பிள்ளைகள். மூத்தபிள்ளை நாலாம் ஆண்டிலும் இளையவன் மூன்றாமாண்டிலும் பயில் கின்றனர். பிள்ளைகளை தகப்பனும் தாயும் தமது அந்தஸ்த்து குறைவடைந்துவிடாமல் சர்வதேசப் பள்ளியிலேயே சேர்த்துள்ளனர்.

கவிஞருக்கோ பெருத்த ஆசை.

தான் வெளியிட்ட சிறுவர்பாடல் நூலை பிரான்சில் உள்ள மகனுக்கும் கொழும்பில் வதியும் மகளுக்கும் அனுப்பி அந்தப்பாடல்களை தனது பேரப்பிள்ளைகள் படித்துப் பாடமாக்கி அவர்கள் இலங்கைக்கு வரும்போது அவற்றை அவர்களின் வாயால் கேட்கவேண்டுமென ஆவல் கொண்டதன் பேரில் பேரப்பிள்ளைகள் ஒவ் வொருவருக்கும் ஒரு பிரதி என்ற வகையில் வெளிநாட்டு மகனுக்கு இரண்டு பிரதிகளும் மகளின் பிள்ளைகளுக்கு இரண்டு பிரதிகளுமாக எடுத்து அழகான முறையில் பெரிய கடித உறைகளை வாங்கிப் பொதியிட்டார். அதில் அவரவர்களின் அஞ்சல் முகவரி களை எழுதிவிட்டு உறைகளை கவனமாக ஒட்டி பொதி யிட்ட கவிஞர் உடனடியாக அவற்றை எடுத்துக்கொண்டு தனது உந்துருளியில் தபாலகம் நோக்கி விரைந்தார். கொழும்புக்கு முன்னூறு ரூபா முத்திரையும் பிரான்சுக்கு அதைவிட மூன்றுமடங்கு முத்திரைக் கட்டணங்களை யும் செலுத்தி அவற்றை அஞ்சலிட்டுவிட்டு வீடு வந்து சேர்ந்தார்.

களைத்து விழுந்து வந்த கணவனைப் பார்த்த அவரது வீட்டம்மா "என்னப்பா இந்த வேகாத வெய்யிலுக்கை சயிக்கிளிலை போட்டுவாறீங்க" என உருக்கமாக அவரை வினவ "இஞ்சை பாரப்பா ஊருலக மெல்லாம் பாராட்டுகிற என்ரை புத்தகத்தை என்ரை பேரப்பிள்ளையளும் படிக்க வேணுமெண்டு தபாலிலை அனுப்பிப்போட்டு வாறன்"

"உங்களுக்கும் வேறைவேலை இல்லை. இந்தக்காலத்துப் பிள்ளையள் உதுகளைத்தான் மினக் கெட்டுப் படிக்கப்போகுதுகள். ஐநூறு ஆயிரத்தைச் செலவழிச்சு அனுப்பி என்னதான் பிரயோசனமெண்டு எனக்கு விளங்கேல்லை"

"உமக்கப்பா எல்லாத்திலையும் பிழை கண்டு பிடிக்கிறதுதானே வேலை. என்ரை காரியங்களிலை மூக்கை நுழைக்காமல் சும்மா இரும்பாப்பம்"

இப்படி இருவரும் எதிலும் முட்டிமோதுவது சாதாரண வழக்கமாக இருந்து வந்தது.

தனது நூல்களை பிள்ளைகளுக்கு அனுப்பி இரண்டு மூண்டு மாதமாகியும் நூல் கிடைத்தது பற்றியோ அதில் இடம்பெற்ற பாடல்கள் பற்றியதான கருத்துக்கள்பற்றியோ இருபிள்ளைகளும் தொலைபேசி அழைப்பை எடுத்து கதைக்கும் நேரத்திலாவது கூறாமல் அலட்சியப்படுத்தியது

கவிஞருக்கு வலுத்த கோபத்தை உண்டு பண்ணியிருந்து. திடீரென கொழும்பிலுள்ள மகள் அபிராமி தாயாருக்கு அழைப்பையெடுத்து பிள்ளை களின் பள்ளி விடுமுறை அடுத்த கிழமை வருவதால் தாங்கள் குடும்ப சகிதம் ஊருக்கு வரப்போவதாக அறிவித்தாள்.

கவிஞரின் மனைவி பொன்னுமணிக்கோ காலும் ஓடல்லை கையும் ஓடல்லை. ஒரே பரபரப்பு. மகளும் டொக்டர் வந்த மருமகனும் டொக்டர். உபசரிப்பதில் உணவுகள் தயாரிப்பதில் பேரப்பிள்ளைகளுக்கு விருப்பமான பலகாரங்கள் தயாரிப்பதில் பொன்னுமணி தனது கவனம் செலுத்த, கவிஞர் வருபவர்கள் வசதியாக தங்கி நிற்பதற்கு ஏற்றவாறு வீட்டை தயார்படுத்தினார்.

ஆனாலும் ஊருக்கு தமது காரிலே வந்தவர்கள் நகரத்தில் ஒரு வசதியான பெரிய ஹோட்டலில் தங்கு வதற்கு முன்னமேயே முன்பதிவு செய்திருந்ததால் அங்கேயே போய் தங்கியதுடன் வீட்டுக்கு ஒரு அந்தி சாயும் நேரம் வந்து சாட்டுக்கு தேனீர் அருந்திவிட்டு அவர்கள் தங்கி நிற்பதற்கு அப்பா செய்துவைத்திருந்த ஏற்பாடுகளையோ அம்மா ஆசையாசையாக செய்து வைத்த பலகாரங்களையோ ஏறிட்டும் பார்க்காது,தமது பிள்ளைகளுக்கு ஊரை சுற்றிக்காட்டவேணுமெண்ட துடன் ஊரிலே டெங்கு பரவுவதாக அறிந்து கொண்டதால் தமது பிள்ளைகளுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படலாம் என்றதுடன், எண்ணைப் பலகாரங்கள் இனிப்புப்பலகாரங்களால் கொலஸ்ரோல் சுகர் கூடி விடும் என்பதாலும் செய்யப்பட்ட பலகாரங்களையும் எடுத்துக்கொள்ளாமல் புறப்பட ஆயத்தமாயினர். அப்படி புறப்பட காரில் ஏறுமுதல் கவிஞரின் மகள் காருக் குள்ளேயிருந்த ஒரு பார்சலை எடுத்து அப்பாவிடம் கொடுத்துவிட்டு "அப்பா நீங்கள் அனுப்பின புத்தகங்கள் ரண்டும் இதுக்கை இருக்குதப்பா. எங்கடை பிள்ளையள் இரண்டும் இன்ரநசினல் ஸ்கூலிலை படிக்குதுகள் எண்டு உங்களுக்குத் தெரியுந்தானே. அங்கை இங்கிலீஷ் சோங்ஸ்தான் படிப்பிக்கிறவை. தமிழிலை பிள்ளையள் கதைச்சாலே பயின் கட்டவேணும்.

அதோடையப்பா எங்கடை பிள்ளையளுக்கு தமிழ் பெரிசா தெரியாது. வீட்டிலையும் பிள்ளையள் இங்கிலீசிலைதான் கதைக்கிறதுகள். அதாலை அப்பா... நீங்கள் அனுப்பின புத்தகங்கள் அப்பிடியே வீணா கிடந்ததாலை எடுத்திட்டு வந்தனான். ஆரும் இங்கை இருக்கிற பிள்ளையளுக்கு அதுகளை குடுங்கோ பியோசனமாயிருக்கும்" எனச்சொல்லிவிட்டு காரிலே ஏறிக்கொள்ள கார் புறப்பட்டது.

மகளின் விளக்கங்களால் விறைத்துப்போன கவிஞர் அதிலிருந்து மீளமுதல் அடுத்தநாள் தபாலில் ஒரு பார்சல் வந்தது கண்டு என்ன பார்சலாக இருக்குமோ என யோசித்தபடி பார்சலை உடைக்குமுன் யார் அனுப்பியிருக்கிறார்களோ எனப் பார்த்தபோது தனது மகனிடமிருந்து வந்ததை அறிந்து அவசரமாக உடைத்துப் பார்த்தார்.அதற்குள் அவர் மகனுக்கு அனுப்பிருந்த சிறுவர்பாடல்நூல்கள் இருந்தன. அத்துடன் ஒரு கடிதமும் இருந்தது.

"அப்பா நீங்கள் அனுப்பிய புத்தகங்கள் இரண்டையும் நான் வாசித்தேன் அருமையான பாடல்கள்.. ஆனால் அப்பா எங்கடை பிள்ளையள் இரண்டும் பிரஞ்சுமொழியிலேயே படிக்குதுகள். பிள்ளையளுக்கு தமிழே பேசவும் வராது. எங்கடை இடத்திலை தமிழ் படிக்கிற வசதியும் இல்லை. பத்து கிலோ மீற்றருக்கு அங்காலை ஆரோ தமிழ் படிப்பிக் கிறாங்கள். அதுக்கெல்லாம் மினக்கெட எங்களுக்கு நேரமுமில்லை. பிள்ளையளுக்கும் அதிலை பெரிய விருப்பமுமில்லை.

அதாலை நீங்கள் அனுப்பின புத்தகங்கள் வீணா இங்கை கிடந்ததாலை உங்களுக்கு அனுப்பி வைக்கிறன். ஆருக்கும் கொடுத்து காசை வாங்குங்கோ.

அம்மாவிடமும் நான் சுகம் கேட்டதா சொல்லுங்கோ.

அன்புமகன்
ஆதவன்.

கடிதத்தை வாசித்த கவிஞர் எதுவுமறியாது பார்சலில் வந்த தனது நூல்களைப்பார்த்து மலைத்தபடி நின்றார்.

# நாடகம் முடிந்தது...

நாடகம் முடிந்தது
அம்மா எழுந்து நிற்கிறாள்
மேடையும் சிதைந்து
போதி மரத்தின் வேர்களும்
வெறிச்சோடிக் கிடக்கிறது

எல்லோரும் குதிகால்
காற்றுக்கு அருகில் இருக்கிறார்கள்
மற்றும் மூடப்பட்ட
சரளை சாலையில் ஓரளவு
நிலவின் ஒளி வீழ்ந்து கிடக்கிறது

அந்தசிறு வயதில்
நீ பார்த்த நாடகத்தில்
ராஜா ராணி வேசமிட்டு நடித்த
நடிகர்களைக் காணவில்லை
காய்ச்சலுடனும் கண்களில்
கண்ணீருடனும் எங்கோ போனார்கள்
என்பது இப்போது உங்களுக்கு
நினைவில் இல்லை

நாடகத்தின் முடிவில்
நாம்பார்க்காமல் காணாமல்
படம் பிடித்தோம்
தூக்கத்தை தொலைத்த புல்லில்
வாழ்க்கையில் நிலை எங்கே தாயே!
எங்கும் பார் எங்களது
காலடித்தடங்கள் அழிந்துள்ளது

அபித் ஆசாத் எழுதிய "கவிதை நூல்கள்" என்ற பெயரில் எழுதிய நூல், வங்களாக் கவிதையில் பெரும் புரட்சியையே ஏற்படுத்தியது. விமர்சகர்கள் இவரை வங்களாப் புதுக்கவிதையின் முன்னோடி என்று அழைக்கிறார்கள். "குட்பை ரவீந்திரநாத்" என்ற கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் பற்றிய அவரது விமர்சனக் கவிதை புனைகதை இலக்கிய சமூகத்தின் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இவ்வகையில் தாகூரின் கவிதைகளில் ஏகத்தவம், பலவீனம், ஆதிக்கம் ஆகியவற்றின் வரம்புகள் குறித்து முதிர்ந்த விமர்சனங்களிடையெ விமர்சனங்கள் வெளிப்பட்டன.

நிஜர்மலேந்துகடன், ரூபிரஹ்மான், அப்துல்மனனா செய்யத், ஆசாத் சௌத்திரி போன்ற கவிஞர்களில் அபித் ஆசாத் முதன்மையானவர். ஏனெனில் 70-80களில் வங்காளக் கவிதையில் புரட்சியை ஏற்படுத்தியவர் என்ற வகையில் முக்கியத்துவம் பெறுகிறார் இவர்.

இது 70, 80 களில் இலங்கையில் கவிதையில் புரட்சியை ஏற்படுத்தியமொனிகா ருவன் பத்திரன, புத்ததாஸ கலப்பத்தி, உதேனி சரத்சந்திர, ரத்ன ஸ்ரீ விஜேசிங்க, லால்ஹகொட, ஆரியவன்ஸ ரணவீர பொன்ற கவிஞர்களின் பாத்திரங்களைப் போன்றது என்கிறார் மொழி பெயர்ப்பாளர்.

-

*மானவல்லை எம்.எம்.மன்ஸூர்*

அபித் ஆசாத்
வங்களாதேச புதுக்கவிஞர்
தமிழில் : மாவனல்லை எம்.எம்.மன்ஸூர்
கலாபூஷணம்
(சகரியா சிர்கியின் ஆங்கில மொழி பெயர்ப்பில் இருந்து சிங்கள மொழி மூலம் பராக்கிரம கொடிதுவக்கு)

கலாநிதி த.கலாமணியின் உருவச்சிலை திறப்பும், "பல்கலைக்கழகமாக கலாநிதி த. கலாமணி" என்னும் நூல் வெளியீடும் 2024.03.11 அன்று கலைஅகத்தில் நடைபெற்றது. நிகழ்வின் தலைவராக கொழும்புப் பல்கலைக்கழக கல்வியல் துறை விரிவுரையாளர் அ.பௌநந்தி செயற்பட்டார். வரவேற்புரையை பொறியியலாளர் வ.அரவிந்தன் நிகழ்த்தினார். த.கலாமணி அவர்களின் உருவச்சிலையைத் திறந்து வைத்து திறப்புரையை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா நிகழ்த்தினார். "பல்கலைக்கழகமாக கலாநிதி த. கலாமணி" நூலை வெளியிட்டு, கருத்துரையையும் யாழ்பாணப் பல்கலைக்கழக சமூகவியல் துறை விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் நிகழ்த்தினார். த. கலாமணி பற்றிய அனுபவப் பகிர்வுகளை பேராசிரியர் மா. கருணாநிதி, கலாநிதி ஆ. நித்திலவர்ணன், கொற்றை பி. கிருஷ்ணானந்தன், கலாநிதி சு. பரமானந்தம், வே. சிவராஜலிங்கம், வி.செந்தூரன், வீ.ரங்கநாதன் ஆகியோர் பகிர்ந்தார்கள். நன்றியுரையை தெ.இந்திரகுமார் நல்கினார்.
















■ கெக்கிறாவ ஸுலைஹா




# காரையன் கதனின் 'புழுதி" பற்றி...

"என்னைத் தங்களின் நட்பு வட்டத்தில் நீங்கள் இணைக்க முடியுமா?" என்று ஒருவர் கேட்கிற வரைக்குமா குருடாய் இருப்பேன்..? ஐயோ.. அப்படித் தான் இருந்திருக்கிறேன் காரையன் கதன் விடயத்தில். அப்புறம்தான் தோழர் திருகோணமலை சகீப் சொல்லி, கதன் நடத்தும் தலை முடி திருத்தும் அவர் பணியகம், அங்கு இயங்கும் அவரது பொறுப்பிலான நூலகம் என்று நிறைய அறிகிறேன். எனது நூல்கள் சிலது அனுப்பியும் தந்தேன் ஒரு தீரா வாஞ்சையுடன். பின், திரு.மேமன்கவி அவர்களும் சொல்லக்கேட்டு இன்னும் சில விடயங்களை அறி கிறேன். லலித்தகோபன் முகநூலில் எழுதி வாசிக்கக் கிடைத்த அந்த பள்ளிச் சிறுவன், அவன் அங்கு வந்து புத்தகம் துளாவும் செய்தி எல்லாம் படிக்கப் படிக்க அச்சிறுவன் போலவே "கதன் மாமா" என்று நெஞ்சாரக் கூப்பிடும் மகள் போலும் நானும் ஆயினேன், எனக்கு கதனின் அம்மா வயசு என்றாலும்.



கதன் எழுதி வெளியிடும் "புழுதி" வெளியீட்டு நிகழ்வுக்கு என்னை வருமாறு அன்புகூர்ந்து ஒரு அழைப்பு. "ஆசை. தொலைவு என்பது மட்டுமே பிரச்சனை.." என நான் பதிலிட்டு ஓய, தபாலில் பறந்துவந்து என் கை அடைகிறது "புழுதி" கவிதைநூல் நேற்றைக்கு முன்தினம்.. கிட்டத்தட்ட 112 பக்கங் களில், தெளிவான தெளிவுடன் அமைந்த அழகு புத்தகம் "புழுதி". "தாயதி" வெளியீடு. எளிமையான மானுட உணர்வுகளைக் கிளர்த்தி எடுத்துக் கவிதைகள் நெஞ்சோடு பேசுகின்றன. முன்னும் பின்னும் புரட்டிப் புரட்டி ஒரு சில கவிதைகளை ஒன்றுக்கு மேல் இரண்டு, மூன்று முறை என வாசித்து விட்டேன்.

கவிதைபற்றிச் சொல்லவெல்லாம் என்னிடம் பெரியதாய் ஒன்றுமில்லை. ஆயினும் அது "மன மென் உணர்வுகளின் வழிந்தோடுகை.." என்று வில்லியம் வேட்ஸ்வேர்த் பாணியில் சொல்லமுடியும். காரையன் கதன் எழுதியிருப்பது பார்த்தால் அது துளி போல, துகள் போல ஒரு ஒட்டிக்கொண்ட எவ்வளவு துடைத்தாலும் போகாத புழுதிபோல என்றும் சொல்லி விட முடியும். சில

புழுதிகள் தட்டிவிட்டால் போதும். சில புழுதிகள் காலாகாலத்துக்கும் நம்மை உருட்டிக்கொண்டே, உறுத்திக் கொண்டேயிருக்கும். என்ன சொல்ல?

புத்தகம் ஒன்றுக்கு கருத்துரை சொல்லும் அளவுக்கு ஒன்றும் பெரிய ஆள் கிடையாது நான். மேலும் கவிதை நூல் ஒன்றுக்கு கருத்து சொல்கையில் எப்போதும் ஒரு சங்கடம் நிலவுவதுண்டு எனக்கு. என் ஒவ்வொரு மனங்கவர் கவிதையையும் பற்றி ஒவ்வொன்றாய் அடுக்கியடுக்கிச் சொல்ல வேண்டுமோ என்று யோசிப்பேன். எனக்கு, முறைப்படி அமைந்த கருத்துக் கூறல் முறைமை ஒன்றுமில்லை. மனசில் படுவதை என் பாணி ஆக்கிப் பார்க்கிறேன். அப்படிப் பார்த்தால் தாயதி கூற்றில் எனக்கும் காரையன் கதன் எழுத்து பற்றிச் சொல்ல, அவரது எளிய சொல்லாடல், சாதாரண சனங்களிடையே உலாவந்த கவிதானுபவம், கண்ணீர், மகிழ்ச்சி, கனவு, வாஞ்சை, அச்சம் இன்னபிற என்று நிறைய உடன்பாட்டு மனோநிலைதான். "அம்மாக்களுக்கு" சமர்ப்பணம் என்று பொதுமைப் படுத்தி உலகில் உன், என் என்று இல்லாமல் எல்லார் தாய்மைக்கும் கௌரவம் தந்து மேலே நிற்கிறார் கதன். அழகு அது. கிட்டத்தட்ட 68,70 கவிதைகள்.

"ஆலா பற பற" என்று அவர் மழையை கூப்பிடுகிறார் ஒரு கவிதையில். கதனுக்குத் தெரியும், மனுசனாக நின்று அழைத்தால் மழை கண்டு கொள்ளாமல் தான் போகும் என்று. மென் மனம் கொண்ட கவிஞனாக பேசுகிறார் அவர், மழையோடு. மனிதர்களை மன்னித்து விடுமாறு வேண்டி, இருந்தும் அளவோடு வருமாறு அழைக்கச் செய்கிறார். கவிதையைப் படித்ததும் மழையாய்ப் போய் அந்த மானுட வாசலில் பொழிய வேண்டும் போல.

"மனிதர்களை மன்னித்துவிடு.
துடிக்கத் துடிக்க மரம் வெட்டப்பட்டபோதும்
அது அழவில்லை.
அதற்காக அழுதுவிட வா.."

என்று அவர் மழையைக் கூப்பிடுவார்.

நிறைய பேர் கவிதை எழுதுவது கண்டு, புரியாமையில் விழிபிதுங்கி இருக்கிறேன். புரியாதபடி எழுதினால் தான் கவிதையோ என்றும் கருத்து மாற்றிக்கொள்ள வேண்டுமோ என்று யோசிப்பேன். பெண் என்பதால் பெண் பிரச்சினை பற்றிய கவிதை மொழி கொண்டு தான் நான் பேச வேண்டுமோ என தலை குழம்புவேன். ஒவ்வொன்றும் ஒரு தொந்தரவு தந்து, அன்றி சில்மிஷம் செய்து போகுமே அதுதான் கவிதை என்று தாயதியும் சொல்லக் கேட்டு, அப்பாடா என்று ஒரு ஆறுதலில் கரைகிறேன் நான். ஆமாம், காரையனின் எழுத்தில் ஒரு மென்மை இருக்கிறது. மகள் வரைந்த பறவைக்கு, அந்தப் பறவையின் பறவைக்கு உயிர் இருக்கிறது. அது நீடித்து வாழும் என்ற நம்பிக்கையைச் சுமக்கிறது. அது ஒரு இறகு போல மென்மையாய் நம்மிடம் பறந்து வருகிறது. கீச்கீச் என்கிறது. என்ன சொல்ல? "அழகு" என்ற தலைப்பில் அந்தக் கவிதையைப் பாருங்கள். வெகு அழகு.

நிறம் தீட்டப்பட்ட பறவை ஒன்றுடன்
வந்த மகள் அழகா என்று கேட்க அழகு என்றேன்.

சிரித்தாள், பறவையை எடுத்துப் பறக்கவிட்டு
வெள்ளைக்காகிதத்தில்மீண்டும்ஏதோவரைகிறாள்.

பறந்த பறவை இப்போது இரையுடன் வரவே
புரிந்து கொண்டேன்,
பறவையின் குஞ்சுகளை மகள் வரைந்து
முடித்திருக்கிறாள் என்பதை

கேட்டுக் கொண்டிருக்கிறது கீச் கீச் கீச்

இருள் சூழ்ந்து கிடக்கிறது, யுத்தம் குதறிய தெருவில். நாய்கள் ஊளையிட்ட வண்ணம். எங்கிலும் அபகரிப்புகள்.. அழிச்சாட்டியங்கள். அரியண்டத் தீ நிலம். புத்தனின் வாசலில் தத்துவம் மட்டும் மிஞ்சிக் கிடக்கிறது. அலைந்து திரிந்து வரும் கால்களின் பித்த வெடிப்புகளில் எத்தனை ஊர்களின் மண் துளிகள் தான் புகுந்திருக்கக் கூடுமோ? தன் பாடையை தானே செய்து கொண்டு ஏறிப் படுத்துக் கொள்கிறார் கதன். உடலம் கூட புதைக்கப்பட நிலம் தரா குறுகல் மானுடர் சூழ நின்று புதைப்பை மறுக்கின்றனர். இறுதியாய் அஞ்சலி செலுத்த வந்த யாபேரிடமும் அவர் மன்னிப்பைக் கோருகிறார் "கட்டாக்காலி" கவிதையில் இப்படி.

இனி என்ன
கொத்துபவை கொத்த
பிய்ப்பவை பிய்க்க
கிழிந்து கருவாடாகிப் போகும் உடலில்
துர்வாடை மட்டுமே மிஞ்சும்.

ஐயோ
அழைப்பை ஏற்று
வந்தவர்கள் யாராவது இருந்தால்
மன்னிக்கவும்.

என் உடலைப் புதைக்க
இது என் சுதந்திர நிலம் இல்லை."

அபகரிப்பின் பூமி இறுதியில் எவர்க்கு எது தந்து மிஞ்சும்? வாசிக்கையில் அழுகை கவிகிறது.

"பொக்காண்டி" காட்டி குழந்தைமையை உருட்டி பிரட்டும் பெற்றோரியம் வேண்டாத மென்மை எல்லா இடத்திலும் வாழ்கிறது கதனுக்குள். ஒரு இல்லத்தில் ஒரு குழந்தை பிறக்கையில் உண்மை யிலேயே ஒரு நற்செய்தி பிறக்கிறது. அதுதான் இயேசு கொண்டு வந்த, நபிகள் பிரான் கொண்டு வந்த நற்செய்தியும். சூரியக் கதிர் ஒன்றுபோல வானை ஊடறுத்து வாழ்விழந்த மானுடர்க்காய் எது பேசுமோ அது எழுத்து. அந்த எழுத்தை தான் இங்கே காரையனில் காணக் கிடைக்கிறது. "சருகு" அழகான கவிதை. காட்டின் பெரு மரமாய் முளைக்கும் கனவு யாருக்குத் தான் இல்லை?

“காடுகளின் மொழியில் பரிட்சயம் அற்ற
என் காதுகளில் எத்தனை சொற்கள்
வந்து விழுகின்றன.

ஒவ்வொரு சொற்களுக்குமான
இடைவெளியில்
சருகுகள் மூடிய விதைகள்.

எனைப் பேண்டு விட்டுப்போன
பறவையை நினைக்கிறேன்
எல்லாத் திசைகளிலும் அதன் முகம்.

கிடைக்கும் சொற்களை உண்டு
வெடித்துக் கொள்ள
நாட்களைக் கழிக்கிறேன்.

இன்றோ நாளையோ நான்
வெடித்து விடுவேன் இந்தக் காட்டில்.

ஒரு மரமாக ஒரு செடியாக ஒரு கொடியாக
அந்தப் பறவைக்காக காத்திருப்பதே
என் காட்டின் நியாயம்.”

சலூன் அவர் வாழ்வில் ஒரு பகுதி. எவரும் என்ன சாதீயம் பேசினாலும். அது அவர் பகுதி. பொய்மை துடைத்து எறியும் வீரம் இருக்கிறது அதுபற்றி சொல்லும் அவரின் எல்லாக் கவிதைகளிலும். மேலும், சுயம் தெரிகிறது. எனக்கு “மல்லிகை” மணக்கும் முற்றத்தில் டொமினிக் ஜீவா ஐயா முகம் ஞாபகம் வருகிறது. தன் சலூனுக்கு முடிவெட்ட வரும் முடி நரைத்த தாத்தா, வாசிப்பிலும் ஆர்வம் காட்டுவதைச் சொல்லி கதன் சொல்வார், “தாத்தா எங்கள் சலூனுக்கு ஒரு முகவரி” என்பதாக.

நண்டுருது நரியூருது பாடி அக்குள்களுக்கு கையோட்டி சிரித்துக்குலுங்கும் பாகுபாடுகள், வேற்றுமையறியாப் பிஞ்சுப் பால்யத்தை நினைவிற் கொண்டாடும் காரையன் கதன் சொல்வார் தன் அறிவுரையை மானுடர்க்கு மத்தியில். “மனதுக்குப் பிடித்தமான கைகளை உற்பத்தி செய்து கொள்ள, விரல்களைப்பிடித்து ஒவ்வொரு பெயர்வைத்து உறவு களுக்கும் ஊட்டிவிட, சோறு கறி முட்டை பால்பழம் என பட்டியல் பத்துவரை பகிர்ந்தளித்து ஆனந்தம் அடைந்து கொள்ள, உள்ளங்கை தாங்கி ஆட மட மோட கட முழங்கையால் கடைந்து பார்க்க. அப்புறம் அவர் அந்தக் கவிதையை இப்படி முடிப்பார்.

தேவர்களும் அசுரர்களும்
நினைவுக்கு வருகையில், தப்பி ஓடுங்கள்.
நண்டுருது நரியூருது பாடி
அக்குளுக்குளு மூட்டுங்கள்
சிரியுங்கள் சிரியுங்கள்
நானும் சிரித்துக்கொள்கிறேன்”

யுத்தம், குற்றம் சுமத்தப்பட்ட பிள்ளையாகி கூண்டில் அடைபடல், நீதி தேவதை தூர்ந்து போன துயரம், ஆலம்பழம் மறுத்த முற்றவெளி, உயிர் குடித்த கடல், போருக்கு முந்திய போருக்குப் பிந்திய வாழ்க்கை என்று ஒரு கோடித்துயர் உலவுகிறது காரையனுக்குள்.

“எல்லை மீறல்கள் எதைச் செய்கிறது,
உண்ட வீட்டில் அல்லவா கோவணம் பறிக்கிறது.

போருக்கு பிந்திய கடலில்
காற்று வாங்கி, கால் கழுவி
அலையினைக் கொண்டாடி
பொழுதைக் கழிக்கின்றனர் மகனும் மகளும்.

கட்டிடம் மட்டுமே
வாழ்வாகிப் பழக்கப்பட்ட குழந்தைகளுக்கு
கரையில் நின்று அலையை ரசிக்க
மட்டுமே தெரிகிறது.
எங்கள் கடலில் நடந்த கதைகளை
எப்படி எடுத்துச்சொல்வேன் நான்?

கால் நனைத்து
யாரையும் களங்கப்படுத்த முடியாமல்
நெருப்பெரிந்த கடலை
நினைத்துப் பார்க்கிறேன்
ஏதோ ஒரு தவம் என்னைச் சூழ்கிறது.”

என்று “நனைந்த கடல்” கவிதையை அவர் முடித்து வைப்பார், அங்கே அழுகைதான் முட்டிக் கொண்டு வருகிறது. என்ன சொல்ல?

ஆக, நிறைய பேச இன்னும் இருக்கிறது. தூர் வாரும் குளத்தில் எச்சங்களும் மிச்சங்களும் கிடப்பதாய் காரையன் சொல்வாரே, அதுபோல. தன்னைச்சூழ்ந்து நிற்கும் நிலபுலத்தை மாபெரிய அளவில் நேசிக்கும் அவர் எழுத்தில் உலக மாகவிஞர்களின் கருத்தோட்டம் தெரிகிறது. சீஃப் சியாட்டல் சொல்வானே, வொசிங்டன் வாழ் வெள்ளையினத் தலைவனுக்கு அதுபோல அவர் சொல்வார், அவர் தன் நிலத்தை, குளத்தை நேசித் திருப்பது பற்றி. உயர்சாதிக் கொழுப்புத் தினவில் கேலி பேசும் சமூகத்துக்கு அவர் சாத்வீகமாய் ஒன்றைச் சொல்கிறார், “ஒப்பாரி” கவிதையில். மேலும், “வாகனேரி” கவிதையில் இனச்சுத்திகரிப்பின்போது சேறுண்டு பருத்துப் பெருத்த வீங்கி அழுகிய இன சனங்களின் துயரத்தை, ஒரு நூற்றாண்டுத் துயரத்தைப் பார்க்கிறோம். கண்ணீர் பெருக்கு.

ஒரு சமூக செயலூக்கத்துக்கான முன்னோடிப் பதிப்பகமாக சமூகம் சார் சிந்தனைகளை எழுத்தில் கொணர முகாந்திரம் அமைத்த காரையன் போன்ற மார் தட்டாத எளிமைகளை நீங்கள் கண்டு கொண்டிருக் கிறீர்கள் என்ற வகையில், தம்பியாய் மகனாய் கண்டு தோள் தந்திருக்கிறீர்கள் என்ற வகையில் உங்களுக்கும், உங்கள் நிறுவனம் சார் ஓவியர் எழுத்தாளர் திரு.றஸ்மி அகமட், திரு.சிராஜ் போன்றோர்க்கும் இறையன்பு கிட்டட்டும் என்று நான் பிரார்த்தனை செய்து கொள்கிறேன் தாயதி அம்மா அவர்களே..

வ.ந.கிரிதரன்

# குடிவரவாளன்






அத்தியாயம் ஐந்து:

## இளங்கோவின் நாட்குறிப்பிலிருந்து...

சரஸ்வதி முகாமிற்கு வந்தபோது அகதிகளுக்கு எந்தவித வசதிகளும் அங்கிருக்கவில்லை. நான் என் பல்கலைக் கழகத்துத் தோழர்கள் மற்றும் ஏனைய தமிழ் இளைஞர்கள் பலர் ஒன்றிணைந்து தொண்டர்கள் குழுவொன்றை ஏற்படுத்திக் கொண்டோம். அதன் பின் அனைவரும் தமிழக அரசினால் அகதிகளை யாழ்ப் பாணம் கொண்டு செல்ல அனுப்பப்பட்ட சிதம்பரம் கப்பலில் யாழ்ப்பாணம் செல்லும்வரையில் அம் முகாமிலேயே தங்கியிருந்து தொண்டர்களாகப் பணி புரிந்தோம். சிதம்பரம் கப்பலில் யாழ்ப்பாணம் செல்லும் வரையில் வீட்டாருக்கு நான் உயிருடனிருக்கும் விடயமே தெரிந்திருக்கவில்லை. அகதி முகாமிலிருந்து ஏற்கனவே இலங்கை அரசின் "லங்காரத்னா" சரக்குக் கப்பலில் ஊர் திரும்பியிருந்த ஊரவனொருவனிடம் என் நிலைமையினை வீட்டாருக்குத் தெரியப்படுத்தும்படி கூறியிருந்ததேன். யாழ்ப்பாணம் திரும்பிய அவன் அவனது உறவினருடன் கைதடியிலேயே நின்று விட்டதால் உடனடியாக விடயத்தை வீட்டாருக்குத் தெரியப்படுத்த முடியவில்லை. நான் சிதம்பரம் கப்பலில் திரும்பிய பின்னரே அவன் ஊர் திரும்பி விடயத்தை என் வீட்டாருக்குத் தெரியப்படுத்துவதற்காக வந்திருந்தான்.

முதன் முதலாகச் சொந்த நாட்டிலேயே அகதியான அனுபவம் மனோரீதியீல் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தியது. ஏற்கனவே என் மக்கள் பல வருடங்களாக அனுபவித்து வந்ததொரு வாழ்வுதான். சொந்தமாக அனுபவித்தலென்பது பெரிதும் வித்தியாசமானது. உண்மையிலேயே இந்தக் கலவரத்தில் நானும், நண்பனும் தப்பியது மயிரிழையில்தானென்பது சரஸ்வதி முகாமில் பின்னர் சந்தித்த அகதிகள், சர்வதேச பத்திரிகை, வானொலிச் செய்திகள் போன்றவற்றி லிருந்து நன்கு புரிந்தது. வழக்கமாகக் கலவரங்கள் நாட்டின் ஏனைய பாகங்களில் பெருமளவுக்குப் பற்றியெரியும். தலைநகர் அநேகமாகத் தப்பிவிடும். ஆனால் இம்முறை... தலைநகரான கொழும்பே பற்றியெரிந்தது.

நாங்கள் அரச வாகனத்தில், இந்தியப் பொறியி யலாளரின் புண்ணியத்தில் தப்பிச் சென்று கொண்டி ருந்தபொழுது கொழும்பில் மினி வானொன்றினுள் தமிழர்களை ஒட்டுமொத்தமாகப் பெற்றோலூற்றித் துடிதுடிக்கக் கொழுத்தியிருக்கின்றார்கள். துவிச்சக்கர வண்டியொன்றில் வந்து கொண்டிருந்த தமிழனொரு வனையிழுத்து அடித்துக் கொன்றிருக்கின்றார்கள். இன்னுமொருவனை நிர்வாணமாக்கி, அவமானப்படுத்தி எரியூட்டியிருக்கின்றார்கள். கிருலப்பனையில் இளம் பெண்ணொருத்தியின் கண் முன்னாலேயே அவளது பிஞ்சுச் சகோதரியைக் கொன்று, சித்தப்பிரமையாக்கிப் பலர் பாலியல் வல்லுறவு செய்து கொன்றிருக் கின்றார்கள். வழக்கம்போல் மலையகத்தில் இம்முறை யும் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களான தமிழர்கள் மேல் பரந்த அளவில் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தது.

இவற்றிற்கெல்லாம் காரணமாக ஜூலை 23இல் யாழ் திண்ணைவேலியில் நடந்த பதின்மூன்று இராணுவத்தினரின் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதலேயென்று ஜே.ஆர். தலைமையிலான அரசு பழி கூறியது. அதனையொரு சாட்டாக வைத்துக் கலவரத்தை ஏற்கனவே திட்டமிட்ட வகையில் ஊதிப் பெரிதாக்கியது சிறில் மைத்தியூ, காமினி திசாநாயக்க போன்ற அமைச்சர்களின் அரவணைப்பிலியங்கிய காடையர் கும்பலே. இத்தகைய சூழலிலும் எத்தனையோ சிங்கள மக்கள் தம் அயலில் வசித்த தமிழர்களைக் காடையர்களிலிருந்து காப்பாற்றியிருக்கத்தான்

செய்திருக்கின்றார்கள்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனே இலங்கைப் பிரதமராக 1977இல் பதவியேற்றதுமே மிகப்பெரிய இனக் கலவரமொன்று நடைபெற்றது. அதனைத் தமிழர்கள் தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவாகக் கூட்டணிக்கு வாக்களித்ததற்காக "போரென்றால் போர். சமாதான மென்றால் சமாதானம்" என்று ஊதிப் பெரிதாக்கினார். இன்றைய ஜனாதிபதி. அரசியலில் பழுத்த தந்திரம் மிக்க குள்ளநரியென்று ஜே.ஆரைக் கூறுவது நன்கு பொருத்தமானதே. அன்றைய பிரதமர் பண்டார நாயக்காவுக்கும் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்துக்கு மிடையிலேற்பட்ட ஒப்பந்தத்தைக் கண்டிக்குப் பாத யாத்திரை சென்று கிழித்தெறிய வைத்தவரிவர். அதிகாரத்தை வைத்து அரசியல் எதிரிகளைப் பழிவாங்குவதில் சமர்த்தர். முன்னாள் பிரதமர் சிறிமா அம்மையாரின் அரசியலுரிமையையே பறித்தவரிவர். இம்முறை இவரது அரச அமைச்சர்கள் தலைமை யிலேயே திட்டமிட்ட வகையில் தமிழர்களுக்கெதிரான இனக்கலவரங்கள் அவ்வப்போது கட்டவிழ்த்து விடப்பட்டன. 1981 இல் யாழ் நாச்சிமார் கோவில் முன்றலில் நடந்த தேர்தல் கூட்டத்தில் பொலிசார் சுட்டுக் கொல்லப்பட்டதைச் சாக்காக வைத்து அமைச் சர்களான காமினி திசாநாயாக்கா போன்றவர்கள் யாழ் கோட்டையிலிருக்கையிலேயே யாழ்நகரில் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. யாழ் நூலகம் எரிக்கப்பட்டது. ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம் தீக்கிரையானது. இம்முறையும் கலவரத்தைத் தணிப்பதற்குப் பதில் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் அதனை நியாயப் படுத்தியிருக்கின்றார். திண்ணைவேலியில் இராணு வத்தினர் கொல்லப்படுவதற்கு முன்னரே இன்னுமொரு இனக்கலவரம் பெரிய அளவில் நடைபெறுவதற்கான சூழல் நாட்டில் தோன்றி விட்டது. இக்கலவரத்தைச் சாக்காக வைத்துத் தமிழ் அரசியற் கைதிகளைக் கொல்லுவதற்கும், தமிழரின் பொருளாதாரத்தை உடைப்பதற்கும் அதே சமயம் ஜே.வி.பி. போன்ற தனது அரசியல் எதிரிகளைப் பழி வாங்குவதற்கும் ஜே.ஆர். அரசு திட்டமிட்டுச் செயற்பட்டது போல்தான் தெரிகின்றது. அத்துடன் இன்னுமொரு திட்டத்தையும் இக்கலவரத்தைச் சாக்காக வைத்து நிறைவேற்றியது. அது.. 1977இல் ஏற்பட்ட இனக்கலவரத்தைத் தொடர்ந்து வடகிழக்கின் எல்லைப் பிரதேசங்களில் குடியேறியிருந்த மலையகத் தமிழர்களின் குடியேற்றத் திட்டங்களைச் சீர்குலைப்பது. அதனால்தான் இக்கலவரம் நடை பெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்திலேயே இவ்வகை யான குடியேற்றத் திட்டங்களில் வாழ்ந்து வந்த மலையகத் தமிழ்க் குடும்பங்கள் பலவற்றை சிறிலங்கா இராணுவம் பலவந்தமாக மீண்டும் மலையகத்துக் கொண்டுவந்து பற்றியெரிந்து கொண்டிருந்த கலவரத்தின் நடுவில் தத்தளிக்க விட்டது போலும். அதனால்தான் இத்தகைய குடியேற்றங்களை நடாத்திய "காந்தியம்" போன்ற அமைப்புகளின் நிர்வாகத்தர்கள் பலரைக் கலவரம் தொடங்குவதற்கு முன்னரே அரசு கைது செய்து சிறைகளில் அடைத்துச் சித்திரவதை செய்தது போலும்.

இம்முறை கலவரத்தின் தன்மையும், தலை நகரிலேயே அது சுவாலை விட்டெரிந்ததும், செய்மதித் தொழில்நுட்பம் போன்றவற்றின் மூலம் தகவல்கள் உடனுக்குடன் உலகம் முழுவதும் பரவியதும் ஈழத் தமிழர்களின் பிரச்சினையை முக்கியமானதொரு சர்வதேசப் பிரச்சினையாக்கி விட்டது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் சகல அரசியற் கட்சிகளும் ஒருமித்து ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தன. இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி இம்முறை ஈழத் தமிழர்கள் பிரச்சினையில் மிகவும் ஈடுபாடு காட்டினார். அதனால்தான் ஜூலை 15இல் "டெய்லி டெலிகிறாப்" என்ற பிரித்தானியப் பத்திரிகையில் தனக்கு யாழ்ப்பாண மக்களைப் பற்றியோ அவர்களது உயிர்களைப் பற்றியோ கவலையில்லை. அது பற்றித் தான் சிந்திப்பதற் கில்லையென்று ஜே.ஆர். நேர்காணலொன்றில் கூறியதைத் தொடர்ந்து பாரதப் பிரமர் இந்திரா காந்தி சீர்கெட்டுவரும் ஈழத்து நிலைமைகளையிட்டு இந்தியாவின் கவலையினை வெளிப்படுத்தினார்.

அதனையும் "டெய்லி டெலிகிறாப்" ஜூலைக் கலவரம் ஆரம்பமாவதற்குச் சில நாட்களின் முன்னர் வெளியிட்டிருந்தது. நாம் அகதிகளாக சரஸ்வதி முகாமில் இருந்த காலகட்டத்தில் இந்திரா காந்தி தனது வெளியுறவுத்துறை அமைச்சரான நரசிம்மராவை உடனடியாகவே இலங்கைக்கு அனுப்பினார். தமிழகம் முழுவதும் இலங்கைத் தமிழர்களுக்காதரவாக ஆர்ப்பாட்டங்களும், உண்ணாவிரதப் போராட்டங்களும் நடைபெற்றன. சாஜகான் என்னுமொரு இஸ்லாமியத் தமிழரொருவர் தமிழகத்தில் ஈழத்தமிழர்களுக்காதர வாகத் தீக்குளித்தார். எம்.ஜி.ஆர் தலையிலான தமிழக அரசு தனது சிதம்பரம் கப்பலை அனுப்பி உதவியது. இக்கலவரத்தில் ஈழத்துக் சுற்றுலாப் பயணியாக வந்திருந்த தனபதி என்னுமொரு தமிழகத் தமிழரைக் கதிர்காமத்தில் சிங்கள சிகை அலங்கரிப்பாளரொருவர் கழுத்தை வெட்டிக் கொலை செய்திருந்தார். இதனைத் தொடர்ந்து எம்ஜீஆர் அரசு ஜெயவர்த்தனே அரசிடம் நஷ்ட்ட ஈடு கோரியது.

சரஸ்வதி அகதி முகாம் வாழ்க்கையில் பல்வேறு அனுபவங்களைப் பெற்றுக் கொண்டேன். ஆரம்பத்தில் சில நாட்கள் அகதிகள் அனைவரும் உண்பதற்கெதுவு மில்லாமல் பட்டினி கிடந்தார்கள். அந்தச் சமயத்தில் அருகிலிருந்த பம்பலபிட்டிக் கதிரேசன் ஆலயத்துக் குருக்கள் தன்னால் முடிந்த அளவுக்கு உணவு தயாரித்து வந்தவர்களுக்கு வழங்கினார். அதனைப் பெறுவதற் காகத் தள்ளாத வயதிலிருந்த தமிழ் மூதாட்டிகள் கூட சரஸ்வதி அகதி முகாமிலிருந்து மதிலேறிக் கதிரேசன் குருக்கள் வீட்டிற்குச் சென்றார்கள். ஏனையவர்கள் வளவிலிருந்த தென்னை போன்றவற்றிலிருந்து தேங்காய், இளநீர் ஆகிய கிடைத்தவற்றையெல்லாம் உண்டு வயிறாறினார்கள். நாங்கள் அகதி முகாமில் இருந்த சமயத்தில் ஜூலை 27இல் மீண்டும்

வெலிக்கடைச் சிறையில் மேலும் பல தமிழக் கைதிகள் படுகொலை செய்யப்பட்டார்கள். ஏற்கனவே குட்டிமணி, தங்கத்துரையுட்படப் பலர் ஜூலை 25இல் வெலிக்கடைச் சிறையில் கொல்லப்பட்டிருந்தார்கள்.

கலவரம் சிறிது தணிந்திருந்த சமயம் நானும், நண்பனும் அகதி முகாமில் தங்கியிருப்பதை அறிந்த எம் அலுவலகத்தில் பணிபுரிந்து கொண்டிருந்த சில சிங்கள நண்பர்கள் பார்ப்பதற்கு வந்திருந்தனர். அவர்களை வாசலியேயே வைத்துச் சந்தித்தோம். நடைபெற்ற சம்பவங்களுக்காக வருத்தம் தெரிவித்தார்கள். தங்களுடன் வந்து தங்கியிருக்க விரும்பினால் வரலாமென அழைப்பும் விடுத்தார்கள். நாங்கள் அவர்களது வருகைக்கும், அழைப்புக்கும் நன்றி தெரிவித்தோம். முகாமில் இருப்பதே எங்களுக்கும் அவர்களுக்கும் நல்லதெனக் கூறினோம். நாம் அவர்களுடன் தங்கியிருந்தால் காடையர்களினால் அவர்களுக்கும் ஆபத்து வரலாமென்றும் கூறினோம். நாங்கள் அவ்விதம் அவர்களது அழைப்பினையேற்றுச் செல்லாதது நல்லதென்பதைப் பின்னர் உணர்ந்தோம். அடுத்தநாளே, வெள்ளிக்கிழமையென்று நினைக் கின்றேன், கொழும்பில் “கொட்டியா வந்திட்டுது” என்ற வதந்தி பரவியது. “கொட்டியா” என்பது புலிக்குரிய சிங்களச் சொல். நகரில் சிங்கள மக்கள் அவ் வதந்தி யால் அன்று தப்பியோடினார்கள். வெள்ளவத்தையிலோ தெகிவளையிலோ வசித்த தமிழரொருவரின் அயலில் வசித்த சிங்களக் குடும்பமொன்று அவரது வீட்டிற்கு அடைக்கலம் தேடி ஓடி வந்த அதிசயமும் நடந்தது. முதலிரு நாட்களில் நடைபெற்ற கலவரத்தில் அவரை சிங்களக் காடையரிலிருந்து அந்தச் சிங்களக் குடும்பம் காப்பாற்றியிருந்தது. இந்த வதந்தியைத் தொடர்ந்து மீண்டும் கலவரம் பலமாக வெடித்தது. ஓரளவுக்குச் சீரடைந்து கொண்டிருந்த நிலைமை மீண்டும் “கொட்டியா” வதந்தியால் சீர்கெட்டது. சீரடைந்திருந்த நிலைமையை நம்பி நண்பன் கிருலப்பனையிலிருந்த வீடொன்றிற்குக் குளிப்பதற்குச் சென்றிருந்தவன் தலை தப்பினால் புண்ணியமென்று குடல் தெறிக்க ஓடி வந்தான். வந்தவன் தான் தப்பி வந்த பாட்டையெல்லாம் கதைகதையாக விபரித்தான். ஏற்கனவே தப்பியிருந்த தமிழர்கள் பலர், சீரடைந்து கொண்டிருந்த நிலைமையினைச் சாக்காக வைத்து மீண்டும் தத்தமது இல்லங்களின் நிலையறிவதற்காகத் திரும்பியபோது மேற்படி வதந்தி ஏற்படுத்திய கலவரச் சூழலில் சிக்கி உயிரிழந்தார்கள். “கொட்டியா” என்ற சொல் எவ்வளவு தூரத்திற்குச் சிங்கள மக்கள் மத்தியில் அச்சத்தினை ஏற்படுத்தியது என்பதையும் மேற்படிச் சம்பவம் எடுத்துக் காட்டியது.

இது இன்னுமொரு உளவியல் உண்மையினை யும் எடுத்துக் காட்டியது. இலங்கைத் தீவில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக இருந்தபோதும் அவர்களுக்கொரு சிறுபான்மை உணர்வு இருக்கத்தான் செய்கிறது. அதற்குக் காரணம் அருகிலிருக்கும் நாலரைக் கோடித் தமிழகத் தமிழர்கள். எங்கே ஈழத்துத் தமிழர்கள் தமிழகத் தமிழர்களுடன் சேர்ந்து தங்களைச் சொந்த நாட்டிலேயே சிறுபான்மையாக்கி விடுவார் களோவென்றதொரு தேவையற்ற அச்ச உணர்வு. கடந்த காலத்து ஈழத்து வரலாறும், அடிக்கடி ஈழத்தின் மேலேற்பட்ட தமிழக மன்னர்களின் படையெடுப்புகளும் அவர்களது இந்த அச்சத்தினை அதிகரிக்க வைத்தன போலும். “புலி” உருவம் அவர்களது உள்ளத்தில் அச்சத்தினை ஏற்படுத்துவதற்குக் காரணகார்த்தாக்கள் அன்றைய சோழர்கள். சோழர்களின் புலிக்கொடி ஒரு காலத்தில் ஈழம் முழுவதும் பறந்தது. முதலாம் இராஜஇராஜ சோழன் காலத்தில் இலங்கை சோழர் களிடம் சோழ மன்னனான எல்லாளனுக்குப் பின்னர் அடிமைப்பட்டது. அதன் பின் அவனது மைந்தன் முதலாம் இராஜேந்திர சோழன் காலத்தில் ஒளிந்தோடிய சிங்கள மன்னன் மகிந்தனிடமிருந்து மணிமுடி கைப்பற்றப்பட்டு நாடு முற்றாக அடிமைப்படுத்தப் பட்டது. சோழர்கள் காலத்திலேற்பட்ட நிகழ்வுகளை மகாவம்சம் போன்ற சிங்கள நூல்கள் விபரிக்கும். தமிழ் மன்னர் களில் சோழர்கள் காலத்தில்தான் இலங்கை முழுவதும் முற்றாக, நூறாண்டுகளுக்கும் மேலாகத் தமிழர்கள் கைகளிலிருந்தது. சோழர்களின் இலங்கை மீதான ஆட்சிக் காலகட்டத்தைத்தான் பௌத்த மதமும், சிங்கள மொழியும் முற்றாக முடங்கிக் கிடந்ததொரு காலகட்டமாகச் சிங்களவர்கள் கருதுகின்றார்கள் போலும். சிறுவயதில் படுத்திருக்கும்போது சிறுவனான துட்டகைமுனு குடங்கிப் படுத்திருப்பானாம். அதற்கு அவன் கூறும் காரணம் வடக்கில் தமிழரசும், தெற்கில் கடலுமிருக்கையில் எவ்விதம் குடங்காமல் படுப்பது என்பானாம். அதனால்தான் சோழ மன்னனான எல்லாளனை அவன் வென்ற வரலாறு மிகப்பெரிய சிங்கள வெற்றியாகக் கருதப்படுகிறது. அதனால்தான் போலும் புலிக்கொடியுடன் கூடிய சோழர்களைக் கண்டு அஞ்சிய, வெறுத்த சிங்களவர்கள் மீன் கொடியுடன் கூடிய பாண்டியர்களைக் கண்டு அஞ்சவில்லை போலும். உண்மையில் பாண்டிய மன்னர்கள் சிலர் ஈழத்தின்மேல் படையெடுத்திருந்தபோதிலும் கூட அவர்களுடன் நட்பு பாராட்டுவதற்கும், அவர்களிடத்தில் பெண்ணெடுப்ப தற்கும் சிங்களவர்கள் மத்தியில் எதிர்ப்போ, அச்சமோ ஏற்பட்டதில்லை. இன்றைய நிலையில் இவையெல்லாம் தேவையற்ற அச்சங்கள்.

இவ்வகையான அச்சங்கள் சுவாலை விட்டு எரிவதற்கு அடிப்படைக் காரணிகள் சமூக, அரசியல், பொருளாதாரக் காரணங்களே. ஆயினும் சாதாரண மக்கள் இதனைப் புரிந்து கொள்வதில்லை. மக்களின் உணர்வுகளை வைத்துப் பிழைப்பினை நடாத்தும் அரசியல்வாதிகள் மட்டும் நன்கு புரிந்து கொண்டு, அவ்வுணர்வுகளை ஊதிப் பூதாகாரப்படுத்தி, அதிலவர் கள் குளிர் காய்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவற்றால் தூண்டப்படுவதும், பாதிக்கப்படுவதும் சாதாரண மக்களே. இந்த அழகான தீவில் மீண்டும் அமைதியெப்போது வரும்? மக்கள் ஒருவருகொருவர் மீண்டும், சகஜமாக, அன்பாகப் பழகும் நாளென்று

வரும்? சேர்ந்தோ, பிரிந்தோ ஒருவருக்கொருவர் நட்புடன், சகல உரிமைகளுடனும், ஒற்றுமையுடனும் வாழுமொரு சூழல் மீண்டுமெப்போது வரும்? வருமா?

***

“என்ன கொட்டக் கொட்ட முழித்திருக்கிறாய்? நித்திரை வரவில்லையா?” அருகிலிருந்த இருதட்டுப் படுக்கையின் மேற்தட்டில் படுத்திருந்த நண்பன் அருள்ராசாதான் இவ்விதம் கேட்டவன்.

“இன்று விடிய வெளியிலைப் போக இருக்கிற மல்லவா? அதுதான் மனசு கிடந்து அலைபாயிது போலை. இரவு முழுக்க நித்திரையே ஒழுங்காக வரவேயில்லை. நீ குடுத்து வைத்தவன். உன்னாலையெப்படி நித்திரை கொள்ள முடிந்தது.?”

“எல்லாத்துக்கும் காரணம் மனசுதான். இது உனக்குப் பெரியதொரு விசயமாகப் படுகுது. அதுதான் மனசும் கிடந்து இப்படி அலை பாயுது. அது சரி வெளியிலை போனதும் என்ன பிளான்? உனக்கு யாரைவாது சந்திக்க வேண்டிய தேவையிருக்கா?”

“நேற்றே இது பற்றிக் கதைத்திருக்கிறம். முதலிலை அந்த இந்திய வீட்டு அறையெப்படியென்று போய்ப் பார்ப்பம். பிடிச்சிருந்தால் அங்கேயே ,ருந்து கொண்டு ஒரு வேலையொன்று தேடுவம். அதுதான் முதல் வேலை. அதுக்குப் பிறகுதான் மற்றதெல்லாம்.?

“அது சரி. எங்களுக்கோ வேலை செய்வதற்குரிய சட்டரீதியான ஆவணங்கள் ஒன்றுமில்லை. முதலிலை வெளியிலை போனதும், “சமூகக் காப்புறுதி நம்பர்” எடுக்க முடியுமாவென்று பார்க்க வேண்டும். அதிருந்தால்தான் வேலை பார்க்கலாம். இல்லாவிட்டால் நல்ல வேலையெதுவும் எடுக்க முடியாது. உணவகங்களில் கள்ளமாக வேலை செய்ய வேண்டியது தான். எனக்கென்றால் எந்த வேலையும் சமாளிக்கலாம். உன்னாலை முடியுமாவென்றுதான் யோசிக்கிறன்.”

“என்ன பகிடியா விடுறாய். எந்த வேலையென்றாலும் என்னாலை செய்ய முடியும். இதுக்கெல்லாம் வெட்கம் பார்க்கிற ஆளில்லை நான். செய்யும் தொழிலே தெய்வம். இதுதான் அடியேனின்ற தாரக மந்திரம். இவ்விதமாக நண்பர்களிருவரும் பல்வேறு விடயங்களைக் குறிப்பாக வெளியில் சென்றதும், புதிய சூழலை எவ்விதம் வெற்றிகரமாக எதிர்கொள்வது, இருப்பினை எவ்விதம் உறுதியாகத் தப்ப வைத்துக் கொள்வது, வாழ்வின் எதிர்காலத் திட்டங்களை எவ்விதம் வெற்றிகரமாகச் செயற்படுத்துவது?, அவ்வப்போது சோர்ந்து, தளர்ந்து போய் விடும் மனதினையெவ்விதம் மீண்டும் மீண்டும் துள்ளியெழ வைப்பது,.. இவ்விதம் பல்வேறு விடயங்களை நண்பர்களிருவரும் பரிமாறி, ஆராய்ந்து கொண்டிருந்த வேளையில் நகரத்துப் பொழுதும் தனக்கேயுரிய ஆரவாரங்களுடன் விடிந்தது. ஊரிலென்றால் இந்நேரம் சேவல்களின் சங்கீதக் கச்சேரியால் ஊரே கலங்கி விட்டிருக்கும். புள்ளினத்தின் காலைப் பண்ணிசையில் நெஞ்சமெல்லாம் களி பொங்கி வழிந்திருக்கும். இருந்தாலும் விடிவு எப்பொழுதுமே மகிழ்ச்சியினைத் தந்து விடுவதாகத்தானிருந்து விடுகிறது.

தொடரும்...

---

**உருவகக் கதை - வனஜா நடராஜா**

# மலரும் மணமும்

மலர் மலர்ந்தபோது மணம் எங்கும் கமழத் தொடங்கியது. மணம் பரவத் தொடங்கிய போது இது மலர் மலரும் நேரம் என உலகம் உணரத் தொடங்கியது. இது தான் ஈருடலும் ஒருயிருமோ என எண்ணத் தொடங்கியது தென்றல் என்னே தான் ஒற்றுமை. ஒன்றை விட்டு ஒன்று விலகிட முடியாத, பிரிந்திட முடியாத நிலை. இதைத் தான் ஆத்துமாக்களின் பிணைப்பு என்கிறார்களோ? வெற்றுக் காதலுக்கு இது ஒத்து வாராது. உடல், உள்ளம், ஆத்மா மூன்றுக்கும் உறுதுணையான காதல். ஆம் தெய்வீகக் காதல் தான்.

மலர் மாலையில் வாடியதுடன் மலரின் மென்மையை உணர்த்த, பிரிவுத் துயரை தன்னால் இயன்றஅளவு உணர்த்த, மலரை உள்ளத்தால் முகர்ந்து பார்க்கும் பொழுது மட்டும்அறியக் கூடிய வகையில் வாடிய மலருடன் வாசனை பிரியாதிருந்தது. மற்றும்படி அவற்றின் ஆத்மாக்கள் சொர்க்கத்தின்இன்பத்தில் திளைத்திருந்தன.

இவ் வகையான மலரை இறைவன் திருவடியில் மாந்தர் சூட்டினர். மலரும் மணமும் தமக்கிடையிலான அன்புப் பிணைப்பில் இருந்து விலகாமல் இறைவனை அழகுபடுத்தி அந்தப் பரமாத்மாவுடன், தம் ஆத்மாவால் உறவாடி சொர்க்கத்தின் இன்பத்திலேயே மலரும் மணமும் திளைத்திருந்தன. “இந்த மலர் எப்படி இரண்டு வாழ்வையும் ஒரு வாழ்வாக வாழ்கிறது என்றெண்ணி வியந்தான் அந்த மலரால் அழகுபடுத்தப்பட்ட இறைவன்.

அந் நேரம் இறை சந்நிதிக்கு வந்த ஜீவன் கதறியது தனக்கு முக்தி இன்பம் தரும்படி கதறியது. மலரும் மணமும் அந்த ஜீவனை உற்றுப் பார்த்தன. பின்னர் மீண்டும் இறைபாதத்தில் முழு சிந்தனையையும் செலுத்தின.

பரமாத்மாவோ, மலரிடம் பேசத் தொடங்கினான்.

“மலரே அவன் மீது ஏன் கோபம் கொள்கிறாய். சம்சாரச் சூழலில் சிக்கித் தவிக்கும் அவனுக்கு முந்தி அளிக்க...”

“பரம் பொருளே உன் திருவிளையாடல் நாம் அறிந்ததே. நீ முற்றும் உணர்ந்தவன். ஆனால் நம்மிடம் வினாத் தொடுக்கிறாய் என்று சற்று சத்தமாகக் கூறியது.

பரமாத்மா உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான். மலர் தொடர்ந்தது.

“அரிது, அரிது மானிடராதல் அரிது. பெறற்கரிய பேறு பெற்ற தன் பிறப்பை அவன் சமூகத்துடன் எம்மைப் போல் மலரும் மணமுமாக வாழட்டும். தன் உறவுகளுடன் எம்மைப் போல் கலந்து களிக்கட்டும். அது வாழ்வியலின் அழகிய தத்துவம். அப்பொழுதே அவனால் உன்னுடன் மலரும் மணமுமாக கலக்க முடியும். இல்லாவிடில் நீ எவ்வாறு முந்தி அளிக்கப் போகிறாய்? பரம்பொருளே அவன் தான் உன் அருகில் வரவேண்டும். நீ அவன் பக்கத்தில் தான் உடன் இருக்கிறாய்.இதை உணராமல் அவன்,

மலருள்ளே மணம்

மணத்தின் உள்ளே மலர், என்றே கவிதை பாடியது மலர். அழுது நின்ற ஜீவாத்மா சிரித்தான். உள்ளத்தில் அமைதி பெற்றான் ஓர் கணம் இறைவனை ஆபுமாக நினைந்து உருகினான். பின்னர் ஏகினான் தன் இவ்விடம். தன் வாழ்வை மலரும் மணமும் போலவே வாழ்ந்திட என்றே...

காடுலாவு காதை பாகம் 2
நாவல் தொடர்

தமிழ்க்கவி

# காடுலாவுகாதை 2




*4*

செட்டிகுளம் புகையிரதப்பாதையருகே அவர்கள் தடுக்கப்பட்டனர். அன்றுதான் முதல்முதலாக விடு தலைப்புலிகளை காண்கிறார்கள். அந்த அனுபவத்தை ரசிக்க முடியாமல் பிள்ளைகளின் பாசம் பதைப்பாக இருந்தது.

“எங்க போறீங்கள் அங்க ஒருவரும் இல்லை பிள்ளையள் வேற இடத்துக்கு அனுப்பியாச்சு, இப்ப ஒருவரையும் பாக்க ஏலாது. நாங்கள் கொண்டுவந்து விடுவம் நீங்கள் திரும்பிப் போங்க” என்றான் ஒரு விடுதலைப்புலி உறுப்பினன். இராணுவம் போன்று அனைவரும் பச்நிற சீருடையிலிருந்தார்கள். அப்போது வரிச்சீருடை வரவில்லை. மனம் பதைப்பில் அவர்கள் வெகுநேரம் அதிலேயே நின்றாலும் திரும்பி செல்ல வேண்டியதாயிற்று அவர்களுடைய பிள்ளை களுக்கு என்னவாயிற்று. பெரும் போரில் சிக்கிய அப்பாவிகளான சிறுவர்களை என்ன செய்திருப்பார்கள்.

காலையிலிருந்து குடிதண்ணீரும் இல்லாமல் பிள்ளைகளின் முகம் காண நின்ற பெற்றவர்கள் பெரும் சோகத்துடன் திரும்பினர். இப்போதும் அவர்களுக்கு செட்டிகுளத்திலிருந்து போக்குவரத்து சேவை கிடைக்க வில்லை. பூவரசன் குளம் சுமார் எட்டுமைல் அதாவது சுமார் பதினான்கு கிலோமீட்டர் தொலைவு அதுவரை நடந்துதான் போக வேண்டும் ஆண்களும் பெண்களுமாக நடக்க ஆரம்பித்தனர். வழியில் ஒரு பெட்டிக்கடைகூட இல்லை கல்லாற்றின் அருகே வந்து ஆற்றில் ஓடிக்கொண்டிருந்த தெளிந்த நீரை கைகளால் அள்ளிப்பருகி முகம் கைகால்களையும் அலம்பிக் கொண்டனர். கொஞ்சம் உடல் வலுவானதும் லெச்சிமி தனது பயணத்தை தனியாக தொடங்கினாள். “இவர்கள் எப்படியும் பூவரசன்குளத்தில் பேருந்தில் ஏறிவிடுவார்கள். நான் அதன்பின் தனியத்தானே போக வேண்டும். இப்போதே புறப்பட்டால் அவர்கள் வரும்போது நானும் ஊரை அடைந்து விடலாம்” என நினைத்து மிதி வண்டியை இயக்க ஆரம்பித்தாள்.

அப்படியும் அவள் வீட்டுக்கு வந்த போது இரவு எட்டுமணியாகிவிட்டது. பேருந்தில் வந்தவர்கள் முன்னமே வந்து விட்டனர். லெச்சிமி கைகால் கழுவி விட்டு சுவாமிக்கு விளக்கேற்றிவிட்டு கண்களை மூடி கொஞ்சம் தியானித்தபின் வெளியே வந்தாள். வீட்டில் இருந்த பிள்ளைகளாகட்டும் தந்தை கந்தப்புவாகட்டும் எதுவும் பேசவில்லை.

ஏற்கெனவே கந்தப்பு தன் பேரப்பிள்ளைகளிடம் சொல்லி வைத்துவிட்டான். “அம்மாவா சொல்லுமட்டும் நீங்களா எதுவும் கேக்ககூடாது. ஏதும் பிரச்சனை யெண்டா அழப்பிடிச்சிருவாள் விளங்கிச்சோ? அவளா சொல்லாம நீங்கள் எதுகும் பறைய வேண்டாம்” மூத்தவன் தேத்தண்ணியூத்திக் கொண்டு வந்து பக்கத்தில வைத்தான். எதுவும் பேசாமல் அதை எடுத்துக் குடித்தாள் லெச்சிமி. பிள்ளையைப்பற்றி என்ன சொல்ல என விக்கித்து நின்றவளுக்கு விடைகொண்டு வந்தாள் ராசலட்சுமி. “செட்டிகுளத்திலிருந்து நடந்து வந்து பூவரசன் குளத்தில பேருந்தில ஏறி இருந்தம். அப்பைக்க பாத்தா ஜெயம் வந்தான். பாக்கமாட்டியள் அந்தக் கேவலம்.”

“எந்த ஜெயம்”

“புளொட் ஜெயந்தான்... இந்தாங்கோ இந்த கடுதாசிய உங்களிட்ட குடுக்க சொன்னவன்.” அவள் ஒரு மூடப்படாத கடிதத்தை தந்தாள். ஆனால் அதை இதுவரை யாரும் திறந்து பார்த்த அறிகுறியும் இல்லை. லெச்சிமி நிதானமாக அதைப்பிரித்தாள். அது அவளுக்கான மரண ஓலை. அதை அவளுடைய

கைகளுக்குள் வைத்து கசக்கியவள் “மாரியம்மாளே நான் கையெடுத்ததெல்லாம் வீண் போகயில்லை. என்ர பிள்ளைய காப்பாற்றிப் போட்டாய்.”

“ஏதோ நல்ல செய்தி போல” என நினைத்த கந்தப்பு, “என்ன கடுதாசி?”

“காடு… காடப்பு எனக்கு காடுதான் விதிச்சிருக்கு. என்ர பிள்ளை தப்பியோடிற்றானாம். பெருங் காட்டுக்க அலையப்போறான். மாரிதான் கொணந்து சேர்க்கப்போறாள். அவயட துவக்கையும் கொண்டு போயிற்றானாம் கொணந்து தங்களட்ட தரட்டாம் அவனையும், துவக்கையும் இல்லாட்டி குடும்பத்தோட கொளுத்துவாங்களாம். ஹஹஹஹாஹா அவள் வெறிபிடித்தவள் போல சிரித்தாள்.

முசல்குத்திக்காடு பெருவனம் அது சிங்கராஜ வனத்தின் தொடக்கமும் கூட, அதிகமான பிள்ளைகள் பத்தாம் ஆண்டு மாணவர்கள். ஒரு சிலர் இன்னும் குறைவான வகுப்பில் இருந்தார்கள். கோவில்குளம் பாடசாலையின் அதி உச்ச வரம்பு பத்தாம் ஆண்டுதான். எனவே அந்த மாணவர்கள் கடத்தப்பட்டிருந்தாலும் சில ஆதரவாளர்களின் பிள்ளைகள் குறிப்பாக மூன்று வீட்டின் பிள்ளைகள் விரும்பியபோதும் அவர்களை ஏற்றாமல் “ஓடுங்கடா வீட்ட” என்று துரத்தி விடப்பட்டிருந்தனர்.

இந்திய இராணுவத்தினர் புறப்படுவதற்கான பொட்டணிகளை கட்டி முடித்திருந்தனர் அவர்களின் கட்டளைக்கிணங்க அவர்ககளிடம் பயிற்சி பெற்ற வீரர்களுக்கு ஆயுதங்களை கொடுப்பதாக வாக்களித்திருந்தனர். அவர்கள் நாட்டின் உள்ளே நுழைந்த போது, ஆயுத ஒப்படைப்பை செய்தவர்களான இரண்டு மூன்று இயக்க உறுப்பினர்கள் தமது குழுவினரைக்காட்டி ஆயுதங்களைப் பெற்றுக் கொண்டனர். இந்த பாடசாலை மாணவர்களை தமது உறுப்பினராக காட்டி ஆயுதங்களைப் பெறவென்றே அழைத்து வரப்பட்டிருந்தனர். மாணவர்களும் ஆயுதங்களை வாங்கி தம்மிடம் தந்தபின் அவரவர் வீடுகளுக்கு போகலாம் என்றே வாக்களித்து அழைத்து வரப்பட்டிருந்தனர். ஒவ்வொருவரும் தமது பெயரைக்கூறி ஒரு ஏகே 47ஐ, அல்லது ரீ. 56 ரக துப்பாக்கியோ பெற்றனர். அதன்பின் அவற்றைக் கொண்டு லொறியில் ஏறுமாறு பணிக்கப்பட்டனர். பையன்கள் ஆரவாரமாக துவக்குகளை கொண்டு வாகனத்தில் ஏறினர்..

“இவ்வளவுக்கு அம்மாக்கள் பள்ளிக்கூடத்தடியில நிப்பினம்” என்றான் ஒருவன்.

“பின்ன இருளுது அம்மா ஒப்பாரி துவங்கியிருப்பா” என்றான் இன்னொருவன்.

இவர்களது கதையை பொருட்படுத்தாமல் கடைசியாக வண்டியிலேறிய இயக்க உறுப்பினர்கள் விரைவாக வாகனத்தை வவுனியாவின் கூட்டுறவு களஞ்சியத்துக்கு செலுத்தினர். வளவுக்குள் வண்டியை நிறுத்திய பின். “டேய் பொடியள் இறங்குங்கோடா உள்ளுக்க போய் சாப்பாட்டுச்சமான்கள் எல்லாத்தையும் பின்னால வாற லொறிக்கயும் இதுக்கயுமா ஏத்துங்க” என்றான். அப்போது ஒரு சிறுவன் “அண்ணை அம்மாக்கள் தேடுவினம் எங்களை வீட்டில விடுங்கோ” என்றான். அவன் வாய் மூடுவதற்குள் அவனைப் பாய்ந்து அறைந்தான் அவன்.

“எவனாவது வீடு கீடெண்டியளோ துலைச்சுப் போடுவன்… போய் சொன்னதை செய்யுங்கடா” என மேலும் இரண்டொருவருக்கு அடி விழுந்தது. சிறுவர்கள் அச்சத்தில் உறைந்து போயினர். மளமளவென இறங்கி அங்கிருந்தும் மேலும் இரு கடைகளிலும் உள்ள பொருட்களை அள்ளி லொறிகளில் ஏற்றினர். அவர்களிடமிருந்த ஆயுதங்களை வாங்கி ஒருபுறமாக அடுக்கினான் ஒருவன். வாகனத் தொடரணி கொழும்பு நோக்கிய கண்டி வீதியில் இறங்கியது.

“ஏனண்ணை இதால போறம். மன்னார் ரோட்டால போனா என்ன” என்ற சகாவிற்கு “நேற்று நெழுக்குளத்தில ஈப்பீயாரெல்லெவ்வுக்கு புலியள் அடிச்சு நடந்தது தெரியாதே. இது அவங்களும் (இந்தியப்படை) வாறாங்கள். மதவாச்சிமட்டும் பாது காப்பா போகலாம். மதவாச்சியோட அவங்கள் திருக் கணாமலைப்பாதைக்க திரும்ப நாங்கள் மாங்குளம் நேரியகுளம் வழியா செட்டிகுளம் போகலாம். அங்கால யும் நேரியகுளம் மட்டும் பிரச்சனை இராது” என்றான்.

## 5

என்னதான் நடக்கிறது என்பதை சிறுவர்கள் புரிந்து கொள்ளவில்லை என்றாலும் தாங்களும் பிடிக் கட்டிருக்கிறோம். என்பதை அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

மாணவர்கள் திருடிய பிஸ்கற்றுகளில் சிலர் பசியாறினாலும் பலர் பயத்திலும் வீட்டை நினைத்தும் கவலையில் இருந்தனர். பல மாணவர்கள் பதினான்கு வயதேயான சிறுவர்கள் முகாம் போராளிகளுடன் நட்புக்காக வந்து போனவர்கள் இப்போது இவர்களால் கடத்தப்படுவதைவிட வேறு எதுவித சிந்தனையுமின்றி அம்மா… அம்மா… என்று மட்டுமே அரற்றிக் கொண்டிருந்தனர். அந்த சத்தம் கூட வெளியே கேட்டால் தடியுடன் வந்து “யாரடா?…ங…ஆற்றா?” என அதட்டினான் ஒருவன். ஆப்படியே குத்துமதிப்பாக எட்டியவர்களையெல்லாம் மடேர்மடேரென்று அடித்து விட்டு பின்புறம் நகர்ந்தான். நள்ளிரவு நேரம் தெரியவில்லை பெரு வனமொன்றின் சிறு வெட்டையில் அனைவரும் இறக்கப்பட்டனர். ஒவ்வொருவர் கையிலும் ஒரு துவக்கு கொடுக்கப்பட்டது. அந்த பிரதேசத்தை சுற்ற வர காவல் போடப்பட்டது. இந்த சிறுவர்களும் பெரியவர்களுமாக கலந்து நிறுத்தப்பட்டனர்.

“என்ன அசுமாத்தம் கண்டாலும் சுடுங்கோ,” என்றபடி கட்டளையை வழங்கிக் கொண்டிருந்தவர்கள், அங்குள்ள கொட்டகையுள் நுழைந்து படுத்தனர்.

காவலில் நின்ற சுதன், விக்கி, நல்லையா. மூவரும் ஒரே வகுப்பில் படித்தார்கள், அவர்களுக்கு பாதுகாப்பாக அல்லது கட்டளை வழங்குவோனாக நின்றவர்கள் இருவரும் இயகக்மொன்றின் போராளிகள்

போரிடும் அனுபவம் உள்ளவர்கள். இரவு வெகு நேரமாகியதால் அவர்களது பயத்தை விட தூக்கம் கண்களைச் சுழற்றியது. சிறுவர்கள் உறங்கவும் தலைப்பட்டார்கள். இப்போது அந்த பழைய போராளிகள் அவர்களை தடுக்கவில்லை. அவர்களில் மேலும் ஒரு போராளி அங்கு வந்து சேர்ந்தான். அவர்கள் மூவரும் உரையாடிக் கொண்டிருந்தனர். அதிகாலை யாவதற்குள் இருண்ட அந்த வனத்தின்வடக்குப்பக்கமாக இரண்டு துப்பாக்கி வெடிச்சத்தம் கேட்டது கீழ்க்காடு வெட்டிய வனம். வெட்டிக்காடு திருத்தப்பட்டிருந்தாலும் தகரைச் செடிகளும் காவிளாய் செடிகளும் மண்டியிருந்தன. முழங்காலளவுக்கு அடர்ந்து போயிருந்தது. பத்தடி பத்துக்கும் குறைவான தொலைவுகளிலேயே மரங்கள் நின்றனவாயினும் வானம் தெரியவில்லை. இருளில் எதுவும் புலப்படா விட்டாலும் வடக்கிலிருந்து வெடிச் சத்தம் வந்த திசை நோக்கி இங்கிருந்தும் இரண்டு மூன்று வெடி தீர்ந்தது. அவ்வளவுதான் லேசாக வெள்ளாப்பு மூடிய பொழுதில் இரு புறமிருந்து வெடிச்சத்தங்கள் படபடத்தன. சுதனும் நல்லையாவும் பயந்து போனாலும் அவர்களது சினிமா அறிவு அவர் களை விழுந்து படுக்கச் செய்தது. விக்கியை பக்கத்தில் நின்ற பழைய போராளி தள்ளி விழுத்தினான். வெடி யோசைகள் அடர்த்தியாகத் தொடங்கியது. விசுக் விசுக் கென சன்னங்கள் பறக்க தகரைப்பற்றைகளிலிருந்து இலைகள் அறுபட்டு அவர்களை மூடியது. தம்பியவை கீழ பள்ளந்தான் வெளிக்காட்டப்பாத்து உருளுங்க தலைய மட்டும் நிமித்தாதைங்க" என்றவன் தானும் கிடுகிடென உருண்டான் அந்த கட்டளை கேட்ட மற்றவர்களும் விரைவாக அங்கப்பிரதட்ணம் செய்து காட்டி வெளிப்புறம் நோக்கி உருண்டனர்.

வெகு மோசமான வெடிபொருட்களின் அதிர்வு அவர்களை விரட்டியது. பாதைகளே இல்லாத அந்த வனத்தில் ஒரு குறிப்பிட்ட தூரம் மட்டுமே உருள முடிந்தது. அதன் பின் எழுந்து ஓட ஆரம்பித்தனர். யார்யார் என்னுடன் என்பதை கவனிக்காமலே ஓடினார்கள். அவர்களிடையே ஒரு கனமான பையுடன் ஒருவன் எல்லோருக்கும் தானே பொறுப்பு என்பதாக நினைத்து அனைவரையும் சேர்த்தபின் "வெடிச்சத்தம் கேட்காத இடம்வரை ஓடித்தான் ஆகவேண்டும் ஓடுங்க" என்றபடி முன்னே ஓடினான். இப்போது வானமும் விடிகாலை சூரியனின் எழுச்சியும் அவர்களுக்கு தெரிந்தாலும், அவர்களுக்கு தாகம் ஏற்பட்டது. அவர்கள் ஒரு மரத்தடியில் கூடி இருந்தனர். மொத்தம் ஏழு பேர் சுதன் விக்கி நல்லையா தவிர பையுடன் ஓடிவந்தவன் அவனுடைய தோழன் மற்றுமிருவர் வேறு இயக்கப் போராளிகள். பையுடன் வந்தவனைவிட கையிலிருந்த துப்பாக்கியுடனேயே இதுவரை ஓடியவர்கள் சுதனும் மித்திரன் என்கிற அந்த மாற்று இயக்கப்போராளியும். அவனுடன் வந்தவனும் பிடித்துவரப்பட்ட சாதாரண குடிமகன். பையுடன் வந்தவன் செல்வன் அவன் ஈப்பியார் எல்எவ் போராளி. எப்போதோ ஓட முடி வெடுத்தும் சந்தர்ப்பம் வாய்க்காமல் இருந்தவன். அவன் தனக்கு புத்தளம் செல்லும் வழியை இங்கே கண்டு பிடிக்க முடியும். கொஞ்சம் முன்னேறினால் சிங்கராஜ வனம் அங்கிருந்து காட்டுவழிப்பாதைகள் உண்டு என்றான்.

எல்லாவற்றுக்கும் முன்னம் குடிநீர் கண்டு பிடித்தாக வேண்டும். தாகமாக உள்ளது என்றபடி ஒருவன் சுற்றுமுற்றும் பார்த்தான். பின்னர், "ஒரு அரை மைல் தூரத்தில் ஆறு ஒன்று இருக்கிறது." என்றான்..

"எப்படிச் சொல்கிறாய்."

"மருதமரங்கள் அணிவகுத்து நிற்கின்றன. அவை கொஞ்சம் உயரமாகவும் தெரியிது."

"அப்படியெண்டா ...சரி நாங்கள் முதல் தண்ணிய தேடி நடப்பம்." சுதன் பயந்து பயந்து கேட்டான்,

"அண்ணை துவக்கை என்ன செய்யிறது"

"வச்சிரு காட்டுக்க போறம் தேவைப்படும்" அவன் சொல்லி வாய் மூடுமுன் சுதன் "எனக்கு சுடத்தெரியாதே" என்றான். அவன் ஒவ்வொருவரையாக கேட்டான். உனக்கு...உனக்கு... உனக்கு... ம்கும் யாருக்கும் தெரியவில்லை. ஆனால் இரண்டு துவக்கு கைவசம் இருந்தது. தம்பீ துவக்கு முக்கியமான பொருள். அதை கண்டமாதிரி தூக்கிப் போட முடியாது. கொண்டுவா பாப்பம் நானும் நிதி சேகரிப்பிலதான் நிண்டனான் ஆயுதம் அனுபவம் இல்லை. பாக்கலாம் வா. ஆனா தோத்தவனோ வெண்டவனோ எங்களைத் தேடாம விடமாட்டாங்கள். இந்த துவக்குக்காக வெண்டாலும்" பேசியபடியே அவர்கள் ஆற்றங்கரையை அடைந்து விட்டார்கள். ஆறு மோசமாக வற்றியிருந்தது. தண்ணீர் குடிப்பதற்காக வந்து போன யானையின் கால் தடங்களில் நீர் ஊறியிருந்தது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு கால்தடங்களிலிருந்து நீரைப்பருகினர். அப்பாடா என நிமிர்ந்த நல்லையா,

"அண்ணை" என நடுங்கியவாறே ஒரு திசையை நோக்கினான். அதே திசையை திரும்பிப் பார்த்த செல்வன், எல்லாரும் அப்பிடியே எனக்குப்பின்னால வாங்க என்றபடி வாத்துப்போல நடந்து மண்ணால் அரிப்புண்டு கிடந்த ஒரு வீரைமரத்தின் அடியில் நுழைந் தான். மற்றவர்களும் அவனைப்போலவே நடந்து அவனையடுத்து அமர்ந்தனர்.

"ஏனண்ணை அது வராதே" என்ற சுதனுக்கு கையால் சைகை காட்டி மௌனமாக்கினான் செல்வன். தன் அழகிய துதிக்கையை மரத்தின் மீது போட்டவாறு நின்ற அந்த பெண்யானை பெரிதாக சீறியது. பின் இவர்கள் இருந்த திசையை சந்தேகத்தோடு பார்த்தது. தன் துதிக்கையை கீழே இறக்கியபின் திரும்ப முனைந்தது. யானையால் சட்டென திரும்ப முடியாது என்பதை சுதன் படித்திருக்கிறான். அப்போது இந்த யானையின் சீறலுக்கு பதிலாக வேறு ஒரு பக்கமாக சீறல் கேட்டது. யானை நகர ஆரம்பித்தது. ஒண்டில்ல கிளை, என்றான் செல்வன்

தொடரும்...

கோகிலா மகேந்திரன்

# 4 முடிவைத் தொடுவாய் முயன்று

கிடைக்கும் தரவுகளின் அடிப்படையில், பலவேறு தந்திரோபாயங்களைக் கையாண்டு வினைத் திறனுடன் முடிவுகளை எடுப்பதில், "காரணம் காணும் திறன்" முக்கிய பங்கு வகிக்கிறது.

"ஞாபகம்", "ஒரு விடயத்தைச் செய்யவேண்டிய முறை பற்றிய அறிவுறுத்தல்"ஆகிய பீடங்கள் வேறு சில விலங்குகளிலும் காணப்பட்டாலும் கூட, "காரணம் காணும் திறன் கொண்ட ஒரே விலங்கு மனிதன் மட்டுமே" என்று கி .மு நாலாம் நூற்றாண்டில் வாழ்ந்த அரிஸ்டோட்டல் என்ற கிரேக்க தத்துவஞானி கருதினார். இன்றைய ஆய்வுகளின்படி வேறு சில உயர் நிலை முலையூட்டிகளிலும் கீழ் நிலையிலாவது காரணம் காணும் திறன் இருப்பது அறியப்படுகிறது.

விஞ்ஞான ரீதியான, உன்னதமான காரணம் காணும் திறன் மனிதர்கள் அனைவரிடத்திலும் ஒரே மாதிரி இருக்கும் என்றும் கூறமுடியாது. பலவேறு காரணிகளால் அது ஆளுக்காள் மாறுபடும்.

இலக்கிய அறிவில் ஆழமும், ரசனையும் கொண்ட அ.ச.ஞான சம்பந்தன் அவர்கள் தனது கட்டுரை ஒன்றில் இப்படி ஒரு குறிப்பை எழுதுவார்.

குறிஞ்சி நில வருணனையைப் பலர் பாடியிருந் தாலும், கபிலருடைய ஒரு சொற்பாவனை அவரை உயர்த்திவிடுகிறது. "மந்தி மருள்வன நோக்க" என்பது அவர் கூற்று. மயிலின் ஆட்டத்தைத் தினமும் காணும் மந்திகள் மகிழ்வது வழமை. இன்று அவை மருண்டன என்று குறிப்பதன் மூலம் பின்னால் வரும் நாயகன், நாயகி காதல் அரும்புக்குக் கோடி காட்டுகிறார். இது போன்ற அழகு ததும்பும் சொற்கள் அவரைக் "குறிஞ்சிக் கபிலர்" ஆக்கின.

கபிலர், குறிஞ்சிக் கபிலர் ஆகிய காரணத்தை அ.ச.ஞானசம்பந்தன் புரிந்துகொள்வதுபோலச் சாதாரணர்களுக்கு அது புலப்படுவதில்லை.

இவ்வேறுபாடு மனிதரின் முடிவெடுக்கும் தன்மையிலும் மாற்றத்தைக் காட்டும். காரணம் காணும் திறன் கற்றுக் கொள்ளக் கூடியதாயினும் "தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்" என்பவர்களில் அது நடப்ப தில்லை.

"காரணங்களை உதறித் தள்ளிவிடுகிற ஒருவரோடு பேசுவதும், விவாதிப்பதும் இறந்த உடலுக்கு மருந்தூட்டுவது போன்றது" என அருமையாகச் சொல்வார் தோமஸ் பெயின்.(Thomas Paine )

காரணம் காணும் முறைகள் பல. உடைத்துக் காரணம் காணல் ஒன்று.

பழுதான உபகரணம் ஒன்றைத் திருத்த வேண்டும் என்றால், உடைத்துப் பார்த்துத் தவறுள்ள இடத்தை அடையாளம்காணல் வழமை. அதேபோல வாழ்விலேற்படும் சிக்கலான பிரச்சினைகளைச் சிறுசிறு துண்டுகளாகப் பகுத்துப் பார்க்கிறபோது, பிரச்சினையின் காரணங்கள் தெளியும். முழுமையாக வைத்துக் கொண்டு திரும்பித் திருப்பிப் பார்த்தாலும், சுற்றிச் சுற்றிப் பார்த்தாலும் புரியாது.

முன்பள்ளிப் பருவப் பிள்ளைகளுக்குப் பிரித்து, மறுபடி சேர்க்கும் புதிர்த் துண்டுப் பெட்டிகளை வாங்கிக் கொடுப்பதுண்டு. அதைப் பிள்ளை பலமுறை பிரித்துப் போடும். முதல்முறை ஒன்று சேர்ப்பதற்கு உதவி தேவைப்படலாம். பிறகு, பிள்ளை தானாகச் செய்யும்.

மருத்துவக்கல்லூரி மாணவருக்கு ஆரம்பத் திலேயே கற்பிக்கப்படும் பாடம் மனித உடற்கூற்றியல். இறந்த உடலின் பாகங்களை மிக விரிவாகப் பிரித்துப் பிரித்துப் பார்க்கவேண்டியிருக்கும். ஒரு நரம்பு எங்கே தொடங்கி, எதனூடாக எப்படி, எப்படிச் சென்று எங்கே முடிகிறது என்று பிரித்துப் பார்த்திராத ஒருவர் எதிர் காலத்தில் ஒரு சத்திர சிகிச்சை நிபுணராக வரச் சாத்தியமே இல்லை. இறந்த பிறகும் வைத்தியர் ஒருவர் உடலை வெட்டிப் பிரித்து, அங்கம் அங்கமாகப் பார்த்து, மரணத்துக்கான காரணத்தைத் தேட வேண்டி உள்ளது.

பகுத்தறி சிந்தனை என்பது மற்றோர் காரணம் காணல் வழி. இது உற்றுக்கேட்டல், விளக்கம் கூறல், வளைந்துகொடுத்தல், நேர்மையாகச் சிந்தித்தல், மதிப்பீடு செய்தல், குறிக்கோளை நிறைவு செய்தல், ஆராய்தல் எனப் பல கூறுகளைக் கொண்டது. இவ்வாறு காரணம் காணும்போது, ஆர்வம் மேலிட்டு, ஆக்கத் திறன் விருத்தியடையும். ஆதாரம் மிக்க தெரிவுகளைத் தேட மனம் உந்தும். அதேவேளை சொந்தக் காலில் நிற்கும் ஆளுமை வளரும். "பகுத்தறி சிந்தனையும் நானும்" என்றொரு கவிதை எழுதியுள்ளார் பங்களூர்ச் சிறீ.

"பகுத்தறி சிந்தனையால் பகிரப்படுவது
பாதுகாப்புக் கவசங்களைப் பலப்படுத்தலும்
சாமர்த்தியமாவதும் தான் எனில் –அதைப்
படுக்கவே விடுவேன் நான்.
தான் சேர்த்த குப்பையைத்
துளாவி அகற்றவேண்டும் மனம்
தூய்மைப் படுத்தல் துலங்கும் ஏனெனில்

மலம் மரத்தல் மகாபாரதூரம்.
மனதைக் கொட்டி வெறுமையாக்கல்
உள்ளுணர்வின் சுதந்திரம் ,அவ்வேளை
உட்புகும் நுண்ணறிவு ,மேற்பரப்பை
எட்டித்தொட்டு ,மனதின் மீதிப்
பங்கைப் பாலூட்டி வளர்க்கும்.

(தமிழாக்கம் :–கோகிலா மகேந்திரன் )

சட்டத்தரணி ஒருவர் குறிப்பிட்ட வழக்கில் தான் ஆஜாராகப் போகிறேனா, இல்லையா என்பதை முடிவுசெய்ய, வழக்காளியின் புகார், எதிராளியின் குற்றம், சாட்சிகளின் உண்மைத் தன்மையும் வலிமையும், நீதிபதியின் மனப்பாங்கு, சட்டத்தின் நலிந்த பகுதிகள் போன்ற பல விடயங்களை ஆராய்ந்து முடிவுக்கு வரப் பகுத்தறி சிந்தனை முறை உதவும்.

"ஒப்புமை முறை" என்பது இன்னோர் காரணம் காணும் திறன். சில பொருள்களுக்கிடையில், உயிர்களுக்கிடையில் அல்லது விடயங்களுக்கிடையில் சில ஒற்றுமைகள் காணப்படுவதால், அங்கு மேலும் பல ஒற்றுமைகள் இருக்கும் என்ற அடிப்படையில் காரணம் காணும் முறை எனலாம். இது முழுமையான விஞ்ஞான முறையில்லை என்பதால், சில சமயங்களில் சரிவரலாம் என்றாலும் சில சமயங்களில் தவறிப் போவதற்கும் இடமுண்டு.

"வண்ணத்துப்பூச்சிக்கு ஆறு தூக்கங்களும் சிறகுகளும் உள்ளன. தும்பிக்கும் ஆறு தூக்கங்களும் சிறகுகளும் உள்ளன. வண்ணத்துப்பூச்சிக்கு உணர் கொம்புகள் இருக்கின்றன. ஆகவே தும்பிக்கும் இருக்கும்." என்ற விவாதத்தில் இம்முறை சரியாக வருகிறது தான்.

"புகைத்தல் உடல்நலத்துக்குக் கேடு என்று சின்னையா டொக்டர் சொன்னார். சீனி சாப்பிடுவது சுகத்திற்குக் கெடுதியென்று பொன்னையா டொக்டர் சொன்னார். புகைத்ததால் முத்தையாவுக்கு நுரையீரல் புற்றுநோய் வந்ததென்று கந்தையா டொக்டர் சொன்னார். ஆகவே சீனி போட்டுத் தேநீர் அருந்தும் நல்லையாவுக்கும் நுரையீரல் புற்றுநோய் வரும்" என்றால் அது பிழைத்துப் போகும். இந்த உதாரணம் நகைச்சுவை போலத் தோன்றினாலும், ஊன்றி நோக்கினால் இதேபாணியில் நாங்கள் பலர் வாழ்வில் முடிவெடுக்கும் சந்தர்ப்பங்கள் உள்ளன.

"மங்கு சனி, பொங்கு சனி, மரணச்சனி எனச் சனிபிடிக்கும் காலங்கள் மூன்று வகையாம். கடைசியாக வரும் மரணச்சனியில் தான் வேலய்யா செத்தவர். இப்போது எனக்கும் மரணச்சனி தொடங்கிவிட்டதாம் என்று சாத்திரியார் அம்மா சொன்னவ. நானும் இறந்து விடுவேன்." என்பன போன்ற ஒப்புமைக் காரணம் காணல்கள் கலாசாரப் பின்னணியுள் புதைந்த போலி நம்பிக்கைகளாக (cultural delusions) உலா வருவதைத் தெளிவு படுத்துவது யார் ?

வேறொன்று காரண காரிய முறை. இங்கு ஒரு சம்பவம் இன்னொன்றின் காரணமா அல்லது விளைவா (காரியமா)என அறிதல் மையப்புள்ளி. சாளினி பாடசாலைக்குப் பிந்திவிட்டாள். அது காரணம் என நோக்கிய ஒழுக்கப் பொறுப்பாசிரியர், தண்டனையாக மைதானத்தில் புல்லுப் பிடுங்குமாறு கூறுகிறார். சாளினியின் தாமதம் காரியம் என்றால், காரணம் காலையில் 7.00மணிக்கு மேல் துயில் எழுந்தது எனலாம் . நேரத்திற்கு நித்திரைவிடாதது காரியம் எனில், இரவு பெற்றோருக்கிடையில் நடந்த சண்டையில், அப்பா அம்மாவை அடித்து, எல்லோரும் குழறி, நள்ளிரவு இரண்டு மணிக்குப் பின்னரே தூங்கச் சென்றது காரணமாகும். சண்டை விளைவு என்றால் அப்பாவின் மதுப் பழக்கம் காரணம். மதுப்பழக்கமும் காரியம் என்றால், அவரது நெருக்கீடுகள் காரணம். ஆகவே செம்மையான முறையில் முடிவுகளை எடுக்கத் தெரிந்த ஆசிரியர், தந்தையை அணுகி, அவரது நெருக்கீடுகளைக் குறைக்கும் வழிகளை ஆராய்வார். இன்னும் ஆழமான மூல வேர்களையும் கண்டடைவார். சாளினியைப் பொறுத்தவரை மாணவர் பலர் பார்க்கும்படி புல்லுப் பிடுங்கியமை காரணமாகும்போது, பாடசாலை வெறுப்பு, இடைவிலகல், மனச்சோர்வு, தற்கொலை முயற்சி போன்ற விளைவுகள் காரியமாகலாம்.

காரணம் காணும் இன்னொரு முறை கடத்தல் அல்லது இழுத்தல் முறை எனப்பெயர் பெறும். கிடைக்கும் ஒரு தொகுதி அவதானங்களில் இருந்து பெரும்பாலும் சாத்தியமாக இருக்கக் கூடிய பெறுபேற்றை ஊகித்தல் இதன் தன்மை. "வெள்ளொளியில் உள்ள பல வேறு நிறங்கள் வெவ்வேறு அலை நீளங்களைக் கொண்டவையாயின் அவை ஒரு கண்ணாடி அரியத்தினூடு செல்கையில் வெவ்வேறு கோணங்களில் முறியும்" என்பது முதலில் ஐசாக் நியூட்டனால் ஒரு கருதுகோளாகவே வெளியிடப் பட்டது. தொடர்ந்து வரும் பல பரிசோதனைகளே கருதுகோள்களை விதியாக்கும். கருதுகோள், விதியாகாமலும் போகலாம். வைத்தியர்கள் ஒரு நோயாளி முன்வைக்கும் குணங்குறிகளில் இருந்து முதலாவது நோய் நிதானம் செய்வது இவ்வழியில்தான். தொடரும் சோதனைகள் நோய் நிதானத்தை உறுதிப் படுத்தலாம் அல்லது விடலாம். "வீட்டைச் சுற்றியும், தோட்டத்திலும், தவளைகளும் எலிகளும் திரிகின்றன. ஆகவே பாம்புகள் இருக்கும்" என்று நாம் முடிவுக்கு வருவது இம்முறையில்தான். பாம்பைக் கண்டால் கருதுகோள் உறுதியாகும்.

தூண்டல் அல்லது அனுமான முறையில் "குறித்த விடயத்திலிருந்து அவதானங்களைப் பொதுமைப்படுத்தல் நடைபெறும். கீழிருந்து மேலே போகும் இம்முறையில் முடிவுகள் சில வேளை சரியாக இருந்தாலும், பெரும்பாலும் பிழையாகவே இருக்கும்." வௌவால் ஒரு முலையூட்டி. அது பறக்கிறது. ஆகவே முலையூட்டிகள் யாவும் பறக்கும்" என்ற விவாதம் எவ்வளவு அபத்தமானது என்பது யாருக்கும் புரியும். ஆயினும் வாழ்விலே "நான் கண்ட நாய்களெல்லாம் என்னோடு சிரித்துக் கதைக்கின்றன. சிநேகமாக இருக்கின்றன. ஆகவே எந்த நாயும் கடிப்பதில்லை" போன்ற என்பன போன்ற முடிவுகளை நாம் எடுக்கிறோம் என்பது ஏன் எமக்குப் புரிவதில்லை? "நாய்கள் முன்னர் யார் யாரையெல்லாம் கடித்திருக்கின்றன ?எத்தனை பேர் விசர் நாய்க் கடியால் மரணமாகியிருக்கிறார்கள்?" என்ற தரவுகள் பற்றி அக்கறைப்படாதிருப்பது எமது முடிவெடுக்கும் திறனில் உள்ள பெரிய பலவீனத்தைச் சுட்டுகிறது.

தொடர்ந்து பேசுவோம்...

**பிச்சைக்காரன் !!**

பிறப்பு இறப்புக் கணக்கு
பிழைத்த கவலையில்
தலையில் கைவைத்தபடி
கவலையில் இருந்த கடவுள்
போலவோர் பிச்சைக்காரன்
கோயில் வாயிலில்
ஓர் ஓரமாய் ஒதுங்கியிருந்தான் !

காசில்லாமல் ஓர் அருச்சனை
கடவுளுக்கு செய்ய முடியாதோ
என்று ஏங்குகின்ற
ஏழைப்பக்தனைப் போல
ஓர் ஏக்கம் அவன் முகத்தில்
இருந்தது ஆயினும் அது
பசியிருத்தலை விட
இறத்தலை விரும்பி ஏற்கக்
காத்திருக்கும் ஏக்கமாகவே
எனக்குப் பட்டது !

என்னிடம் இருந்த
காசெல்லாவற்றையும்
அவனிடம் கொடுத்து விட்டு
வந்தேன் ....ஏனெனில்
காணாமலாக்கப்பட்ட போது
எனது அப்பா கட்டியிருந்தது
போலவே ஓர் சாரத்தைக்
கட்டியிருந்தான் அதிலிருந்து
வந்த நாற்றம் உழைத்துக்
களைத்த அப்பாவின்
வியர்வை நாற்றம் போலவே இருந்தது !

**2.**

**ஆடி அமாவாசைப் பிதிர்க்கடன் !!**

ஆடி அமாவாசைக்கு
பிதிர்க்கடன் செய்யத்
தடை செய்யப்பட்ட கோவில்
தீர்த்தக்கரை போல முகில் சூழ்ந்த வானம்
சோபை இழந்து கிடந்தது...!

ஆண்டுக்கு ஒருதரம் செய்யும்
கடைமையை கூடச் செய்ய முடியாத
அவலத்தை நினைப்போர் மனம்போல
கடல் தன்பாட்டில் அலைந்துகொண்டிருந்தது....!

சூரியன் மட்டும் அமாவாசை
அன்று வரும் அர்ப்பணக் காசை நம்பி
அடுத்து வரும் மாதங்களை
ஓட்டுவதற்குத் திட்டம் போட்ட
ஐயர் ஆரும் வருகிறாரோ என்று
எட்டிப் பார்ப்பது போல அவ்வப்போது
முகில் விலத்தி எட்டித்தன் முகம்காட்டியது....!

பன்சலவில் நடக்கும் பௌர்ணமித்
தன்சலவுக்குப் பக்தர்கள் போவதுபோல
பறவைக் கூட்டம் ஒன்று
தூரத்தே பறந்து போய்க்கொண்டிருந்தது....!

அன்னதானம் மறுக்கப்பட்ட முதிய
அந்தக யாசகன் போல
ஒட்டிய வயிற்று நாயொன்று எங்கள்
தெரு ஓரத்தில் பசிக்களையில்
குலைக்கவும் மறந்து படுத்திருந்தது.....!

கடமைக் கிறுக்கன் மாதிரி
மணிகட்டிய சொத்திப் பூனையொன்று
அதன் முன்னே குறுக்கும் நெடுக்குமாக
பயமின்றி நடந்து கொண்டிருந்தது.....!

கோயிலுக்கு கூட்டமாய் போய்
கொறோனா கொடுப்பவர் போல தெருவில்
தன்பாட்டில் மேய்த்து கொண்டிருந்த
பசுவொன்றை நக்கிகொண்டிருந்தது
நலமடிக்கப்படாத நாம்பன் ஒன்று....!

மேய்ந்தாலென்ன நக்கினாலென்ன
எனக்கென்ன என்ற கோயில்
மணியகார மனநிலையில்
ஓரமாய் குந்தி இருந்து
பீடி குடித்துக் மொண்டிருந்தான்
முகக் கவசம் போடாத மாட்டுக்காரன்....!

முகநூல் செய்தியாளர்போலப்
பழைய குப்பையை வளவின் ஓரமாய்க்
கிளறிக்கொண்டிருந்த
அடைக் கோழியின் விரிந்த பின்புறம்
களிம்பேறிய நெளிந்து போன
அப்பாவின் பழைய
சாப்பாட்டுத்தட்டுப் போல இருந்தது....!

அமாவாசை அன்று மட்டும்
ஞாபகத்துக்கு வந்து போகும்
அமரராகிப்போன அப்பாவின்
நினைவுகள் போல
அதிசயமாக வந்த காற்று என்
உடலைத்தழுவிப் போனது....!

ஒய்வு பெற்றபின் வெளித்
திண்ணையில் ஒதுங்கிய அப்பா
பசிக்களையில் வாய்விட்டுக் கேட்க
வெட்கப்பட்டு குசினியை எட்டி எட்டி
பார்ப்பது போல ஒரு காகம்
படலையில் நின்று எட்டி எட்டிப் பார்த்து
அங்கும் இங்கும் நடந்தது....!



உதவிக்கு ஆளும் இன்றி
ஊன்று கோலும் இன்றி
காய்ந்து போன பனமட்டைக் கால்களோடு
அப்பா ஆசுபத்திரிக்கு தடுமாறித் தடுமாறி
நடந்து போனதுபோலவே இருந்தது அதன்
நடை....!

இருக்கும்போது அரையும் குறையுமாக
அகப்பட்டதைச் சாப்பிட்ட அப்பா
அமரராகிப் போனதன் பின்னர்
அமாவாசை அன்று அவருக்கு
அது பிடிக்கும் இது பிடிக்கும் என்று
நாங்கள் வகைவகையாச் சமைத்து
படைத்து தொட்டெறிந்த
சாப்பாட்டை காகமாக வந்து
சாப்பிட இப்போது கற்றுக் கொண்டு விட்டார்...!

அப்பாவின் பெயரால் சாப்பிட்டு
ஏப்பம் விட்ட நான்
சாப்பிட்ட வாழை இலைகளை
அவரின் நினைவுகளைப் போலவே
சுருட்டிக் குப்பைத் தொட்டிக்குள்
போட்டு விட்டு அவரின் நினைவாகக்
முகநூலில் கவிதை ஒன்றை
எதுகை மோனையுடன் எழுத
ஆரம்பித்தேன்....!

- கந்தையா பத்மானந்தன்

ஹொரொவ்பொத்தான.அகமட் இம்தியாஸ்

# ஆழ்ந்த உறக்கம்

அன்று வேலைகள் அதிகமாக இருந்தமையால் சுதன், வீட்டுக்கு வருவதற்கு இரவாகிவிட்டிருந்தது. மிகுந்த அலுப்போடு வீட்டுக்கு வந்த அவன் கைகால் அலம்பிவிட்டு இரவுணவை உண்டபின் படுக்கைக்குச் செல்கையில் அவனது மனைவி ஆழ்ந்தே உறங்கி விட்டிருந்தாள். மெதுவாக கட்டிலுக்கேறிய சுதன் தன் மனைவியின் நெற்றியில் முத்தமிட்டு, பின் சற்று நேரத்திலேயே ஆழ்ந்து உறங்கிவிட்டான்.

சுதன் கண்விழித்துப் பார்க்கும்போது அவன் பரலோகத்தின் நுழைவாயில் அருகினில் இருந்தான். அப்போது பரலோக நுழைவாயிலைத் திறந்துகொண்டு வந்த எமதர்மன் சொன்னான்...

"படுக்கையிலேயே உன் உயிர் பறிக்கப்பட்டு விட்டது சுதன்...."

சுதனால் இதனை ஏற்றுக்கொள்ள இயல வில்லை. அவன் சிலைபோன்று அசைவின்றி நின்றான்,

"நான்... சாகவில்லை... இல்லை!!, என்னால் அப்படி முடியாது!!நான் உயிரோடிருந்து செய்வதற்கு நிறைய கருமங்கள் உள்ளனவே!!எனக்கு இப்போது சாக முடியாது! என்னை மீண்டும் உலகுக்கே அனுப்பிடுங்க தர்மராஜா...! என்றெல்லாம் கெஞ்சுகிறான்.

எமன்: "ம்ம்...அப்படி அனுப்ப இயலும்தான், ஆனால் அதற்கு நிறைய எழுத்து வேலைகள் உள்ளன!! நிறைய தஸ்தாவேஜுகள் தயார்படுத்த வேண்டியுள்ளன.

ம்ம், ஆனால் இலேசாக செய்ய இயலுமான வழியொன்றும் உள்ளது. உனக்காக வேண்டுமானால் இப்படிச் செய்யலாம்.

ஒரு மீனாக அல்லது ஒரு கோழியாக உன்னை அனுப்புவதென்றால் அதை உடனே செய்யலாம்!!

சுதனுக்கு நீச்சலில் அவ்வளவாக ஆர்வமில்லை என்பதால், ஒரு கோழியாகச் சென்றால் செய்யவேண்டி யிருப்பது, நிலத்தைப் பார்த்தவண்ணம் நடப்பதுவும் கண்ணில் படுவதைப் பொறுக்கித் திண்பதுவும்தானே, அத்தோடு தன் வீட்டு சேவலும் பெரிதாக தொந்தரவு தராதவொன்று என்பதால் ஒரு கோழியாகவே செல்வதாக தீர்மானித்து அந்த வரத்தினைக் கேட்டுப் பெற்று மீண்டும் பூமியில் தனது வீட்டுக்கு வருகிறான்....

வீட்டுக்குச் சென்ற நாள்....

"ஆ நீதானா புதிய கோழி?" என அவனது வீட்டுச் சேவல் அறிமுகத்தை சுருக்கமாக செய்து கொண்டது.

சுதன் கோழியை அது வரவேற்றது.

இரண்டாம் நாள் சுதன் கோழி,தோட்டத்தில் அங்குமிங்கும் உலாவும்போது...

சேவல் : "உன் நேற்றைய நாள் எப்படி இருந்தது?!!"

சுதன் கோழி:

"மோசமில்லை!!,

ஆனால் என் உடம்பினுள்ளே ஏதோவொரு புதிய உணர்வை உணர்கிறேன்,

ஒருமாதிரியாய் நான் வெடித்துவிடுவது போன்றவோர் உணர்வு"

சேவல்: ஆ....நீ முட்டை இடப்போகிறாய்,

அதுதான் இது என சேவல் விளக்கிக் கொண்டே, "இதற்கு முன்பு நீ முட்டை இட்டிருக் கிறாயா?"

சுதன் :"உனக்குப் பைத்தியமா? ஒருபோதும் இல்லை"

சேவல்:"நல்லது, ஒரிரு தடவைகள் செட்டை களை அடித்து விட்டு உன் பலம் முழுவதையும் பின் துவாரத்துக்கு கொடுத்து நன்றாய் முயற்சித்து நீ உணரும் அந்த உணர்வை வெளியே தள்ளிட முயற்சி செய். வெளியே தள்ளு"

சுதன் ஒரிரு முறை பலங்கொண்டு முயற்சித்து ஒரு முட்டையை வெளியேற்றினான்.

முதன்முறையாக தாய்மை உணர்வை அனுப வித்த சுதன் முழுதாக அவ்வுணர்வின் மகத்துவத்தை, தாய்மையின் தாற்பரியத்தை உணர்ந்தான். அவ்வார்வத் தினால் மீண்டும் ஓரிருமுறை கடுமையாய் முயற்சித்து இன்னுமொரு முட்டையை வெளியேற்றி னான்.

சுதனுக்கு இப்போது அளவில்லாத சந்தோசம். சந்தோச மிகுதியால் பலம் முழுதையும் ஒன்றுசேர்த்து இன்னும் கடுமையாக முயற்சித்து மூன்றாவது முட்டை யும் வெளியே வர ஆரம்பிக்கையில்... நீ இட்ட முட்டை களை பாதுகாப்பாக எடுத்து வைக்க மனிதர்களை கொக்கரித்து அழை தெரியப்படுத்து என்றது சேவல்.

சுதனும் இயன்றவரை கொக்கரிக்க முயற்சித்தான்.

வீரிட்டு அதட்டும் சத்தத்துடன் தலையில் பட்ட ஒரு பலத்த அடியுடன் கண் விழித்த சுதன்,

அருகில் தன் மனைவி இருந்து அவள் நாசியை ஒரு துணியால் மூடியவாறு அவனை உசுப்பி எழுப்பு வதைக் கண்டான்.

"ஏனுங்க என்ன உங்களுக்கு நடந்தது இண்டக்கி? கெதியா எந்திரிங்கப்பா!! கட்டில்லயே மலம் கழிச் சிட்டீங்க"கத்திக்கூப்பாடு போட்ட சுதனின் மனைவி

சுதனை கட்டிலை விட்டுக் கீழே தள்ளியும் விட்டாள்...

ஏதோ சலிப்புடன் முணுமுணுக்க..

சுதனும் ஏதோ துர்நாற்றத்தை உணர்ந்து நடந்து புரியாமல் விழித்தான்.

**C.Pararajasingam**

## Remembering a multifaceted Personality who passed away on the 9 th of February 2024.

# DR THAMBIAIYA KALAMANY

AN IDEOLOGIST AND EDUCATIONALIST

"IS TRUE EDUCATION A MENTAL TRAINING OR A PREPARATION FOR SPECIAL PERSUITS?

(Looking or Trying an occupation or work)

1. Some argue that education should consist of vocational training.
2. That is the object of education should be to fit the pupil to edrn a living.
3. True education is the developing of the mental faculties, which vocational training cannot by itself do.

Dr. Kalamany to whom belongs the unique distinction of achieving success in the various spheres of life, was born on the 12th of November 1951 as the son of Mr Sabapathi Thambraiya, a Guru (Annaviar), a person who is expert in historical and traditional drama (Kuththu) and folk musical Songs and a popular astrologist, from whom Dr Kalamany learnt the techniques, at Alvai south.

Dr. Kalamany and I have been friends since our boyhood. During this long period of Friend ship, I have observed and listened his speeches in various stages and also heve had the opportunity to verheard his lectures in the lecture halls. From these observations and listening I have been able to grasp his thoughts, judgements, opinion and mental attitudes towards Education. These impressions of mine have made to consider Dr.Kalamany as an ideologist and educationalist.

According to Dr.Kalamany, there is no doubts much to be said for vocational subjects or technical education in schools. Until now more and more being introduced in to the training of students and young people. Even then people criticize the whole system of school education as not being practical enough. They recognize the value of reading and writing and mathematics, for these will be wanted in later life. But they also say the children spend much of their time in learning subjects such as geography, history, grammar and literature, will be of no practical use to them afterwards. Such subjects will not help a boy or a girl to earn their own living

This attitude of these people clearly portrays the main objectives of education should be to train pupils the pupils living when they grow up. Their time at schools should be devoted to learning vocational subjects, book keeping, accountancy, business, farming, engineering, technology and any other crafts and trades. Then when they leave schools they will be fitted to take a job at once and earn an honest living. For the above type of people school education should be practical-a preparation for some persuits:

Such people mentioned in the paragraph just above seem to misunderstand the meaning and purpose education. If school of e education should be narrowed down to mere vocational training, it would miss the whole point of true education. Education is a method for developing and training the mental and moral faculties. (Any of the mental or physical abilities that a person born with.)

Vocational training while a desirable thing in its place, is by itself altogether, too narrow a training to take the place of real education. At best it develops manual dexterity (skill in using your hands or mind), attention, Carefulness and pride in good workmanship.

But draw out and develop the mental faculties a much broader kind of education is needed.

The subjects that practical people dislike and have no as unnecessary are a form of mental drill (developing the skills and abilities). The study of them not only informs the mind but also it exercises it and trains to think. They give a mental training that purely technical education can neve give.

A knowledge of history and literature for example may never be a practical use in earning one's living; but it broadens the mind, gives it the ability to think about problems and decisions in a righteous and a reasonable way in life, Creates interest in human affairs and progress and so humanizes and refines the pupil's mind. Such education (studies) produces not only an, educated but also a cultured person. This is true education.

- This lovable Soul united with 'Almighty' on 9th of 02 2024

உங்கள் இல்லங்களில் நடைபெற
இருக்கும் மங்களகரமான
நிகழ்வுகளுக்கு...

# மதி கலர்ஸ்



## திருமண அழைப்பிதழ்
## காட்சியறை

MATHI
COLOURS



## WEDDING CARD SHOW ROOM

15/2, Murugesar Lane, Nallur,Jaffna.

T.P: 021 2229285, 077 7222259


இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி து. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.